www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 180

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 11 வியாழக்கிழமை (24/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## அக்குரஸ்ஸவில் சட்டவிரோதமான ஆயுத ஆலை

கொழும்பு,மே 24

மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ, தெடியாகல பகுதியில் ஆயுதங்கள் தயாரிக்கும் நிலையமொன்றைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். ரி-56 துப்பாக்கி 04

# பொன்சேகா போன்று எம் பிள்ளைகளையும் மன்னியுங்கள்

### இன்றைய சத்தியாக்கிரகத்துக்கு வவுனியா புறப்படமுன் பெற்றோர் உருக்கம்

யாழ்ப்பாணம்,மே 24

சரத் பொன்சேகாவைப் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்தது போல சிறைகளில் வருடக்கணக்காக வாடும் எமது பிள்ளைகளையும் மன்னித்து உடனடியாக விடுவியுங்கள். பொன்சேகா குடும்பத்துடன் இணைந்தது போல நாங்களும் எங்கள் பிள்ளைகளுடன் இணைந்து வாழ ஆசைப்படுகிறோம். அந்த ஆசையை நிறைவேற்றுங்கள்.

அதுவே நீங்கள் எங்களுக்குச் செய்யும் மிகப் பெரிய உதவியாக இருக்கும்.

இவ்வாறு சிறைகளில் வாடும் பிள்ளைகளின் பெற்றோர் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வவுனியாவில் இன்று நடைபெறும் சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு புறப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த கைதிகளின் பெற்றோர் உதயனிடம் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

'புலிகளின் முன்னாள் உறுப்பினர்களான கருணா, பிள்ளையான், கே.பி. ஆகியோர் அரசுடன் இணைந்து சுகபோகங்களை 04

# அரசியல் கைதிகளே இல்லையெனக் கூறி தமிழரின் விடுதலையை மறுக்கிறது அரசு

### நாடாளுமன்றில் நேற்று அமைச்சர் நிமால்



கொழும்பு, மே 24

அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை. உண்ணாவிரதமிருந்துவரும் கைதிகள் சிறைச்சாலையில் வழங்கப்படும் உணவைத் தவிர ஏனைய உணவுகளை உட்கொள்கின்றனர் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்கு எளிதில் நடவடிக்கை எடுக்கமுடியாது என்றும், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் 04

## தமிழ்க் கைதிகளை விசாரிக்க விரைவில் புதிய நீதிமன்றங்கள்

கொழும்பு, மே 24

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு கொழும்பு, அநுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் புதிய நீதிமன்றங்களை நிறுவுவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இந்த நீதி மன்றங்கள் விரைவில் திறக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். திறக்கப்படும் புதிய நீதிமன்றங்களில் புலிச் சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் விரைவுபடுத்தப்படும் எனவும் அவர் அங்கு கூறினார். 04

## கோரிக்கை நிறைவேறும் வரை உண்ணாவிரதப் போர் தொடரும்

### தமிழ் சிறைக் கைதிகள் அறிவிப்பு

கொழும்பு,மே 24

தமது விடுதலையை வலியுறுத்திச் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகள் தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் என அறிவித்துள்ளனர்.

கொழும்பு விளக்க மறியல் சிறைச்சாலை,வவுனியா, களுத்துறை, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நேற்று 8ஆவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் 04

## புதிய கட்சி ஆரம்பிக்கிறார் பொன்சேகா

கொழும்பு,மே 24

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் கடந்த திங்கள்கிழமை விடுதலை செய்யப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜனநாயக கட்சி என்னும் புதிய அரசியல் கட்சியொன்றை 04

## வவுனியாவில் ஆர்ப்பாட்டத்துக்கு நேற்று நீதிமன்றம் தடைவிதிப்பு

வவுனியா,மே 24

சகோதரத்துவத்தின் மக்கள் அரண்' அமைப்பு வவுனியா நகரில் நேற்று நடத்தவிருந்த ஆர்ப்பாட்டம் நீதிமன்ற தடையுத்தரவு மூலம் தடுக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மக்களின் காணிகளைப் பலவந்தமாக அபகரித்தல், அரசியல் கைதிகளைத் தடுத்துவைத்திருத்தல் ஆகியவற்றுக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக அவர் கூறினார்.

ஆர்ப்பாட்டம் தடுக்கப்பட்டத்தையடுத்து சகோதரத்துவத்திற்கான மக்கள் இயக்கத் 04

## ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்

### யாழ். ஆஸ்பத்திரியில் பிரசவித்து சிறிது நேரத்தில் மரணம்




யாழ்ப்பாணம், மே 24

உடல் ஒட்டிய நிலையில் பிறந்த இரட்டைக் குழந்தைகள் பிறந்து ஒரு மணி நேரத்தில் இறந்துபோயின.

அரிதான இந்த நிகழ்வு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அந்த உடல் பெற்றோரின் சம்மதத்துடன் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது அங்கு இடம் பெறும் கண்காட்சியில் அந்த உடல் பார்வைக்கு 04

## பொன்சேகா விடுதலையில் சர்வதேசத்தின் அழுத்தமா? நிராகரித்தார் ஜனாதிபதி



கொழும்பு,மே 24

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக அமெரிக்காவோ அல்லது வேறெந்த வெளிவிவகார அமைச்சகமோ அழுத்தங்களை எமக்கு வழங்கவில்லை. அவ்வாறான குற்றச்சாட்டுகளை, விமர்சனங்களை நான் திட்ட வட்டமாக நிராகரிக்கிறேன்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அரச ஊடக நிறுவனங்களின் தலைவர்களை நேற்றுக்காலை அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். இதன்போது ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:- 04

## ஜெனிவாத் தீர்மானத்தின் பின்னாலேயே நிற்போம்

### உறுதியாகக் கூறுகிறது அமெரிக்கா

வொசிங்டன்,மே 24

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் எதைக் கூறியிருந்தாலும், தாம் ஐ.நா மனிதஉரிமைகள் சபையின் தீர்மானத்தின் பின்னாலேயே நிற்போம் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நண்பகல் வொசிங்டனில் நடைபெற்ற நாளாந்தச் செய்தியாளர் சந் 04

## கனேடியத் தமிழரின் கொலை; கிளிநொச்சியில் ஐவர் கைது

கிளிநொச்சி, மே 24

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட கனேடியப் பிரஜையின் கொலையுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

போரின்போது வன்னியில் இருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வசித்துவந்த அந்தோனிப்பிள்ளை ஜெயரட்ணம் (வயது-52) அண்மையில் பரந்தன் கமறிக்குடாப் பகுதியில் உள்ள தனது சொந்த இடத்திற்குத் திரும்பி வாழ்ந்து வந்தார்.

கடந்த 3ஆம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணில் தாக்கப்பட்ட நிலையில் மாணவி வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,மே 24

கண்ணில் தாக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில் மாணவிஒருவர்யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். பி.இளநிலா (வயது -9) என்ற யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியே கண்ணில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மாணவியின் பெற்றோர் தெரிவித்ததாவது:-

தனியார் கல்வி நிறுவன ஊழியர் ஒருவரால் இவர் தாக்கப்பட்டார். யாழ்.நகரிலுள்ள, புலமைப்பரிசில் வகுப்புகளை நடத்தும் தனியார் கல்விநிலையம் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றது.

குறித்த மாணவி வகுப்பிலுள்ள சக மாணவியுடன் கதைத்தார் என்று கூறியே, கல்வி நிலைய எழுதுவினைஞராக கடமையாற்றும் பெண் ஒருவர் தடியால் அடித்துள்ளார். அது மாணவியின் கண்ணில் பட்டதன் காரணமாக, கண்பகுதி வீங்கியது. இதனையடுத்தே வைத்தியசாலையில் அனுமதித்தோம்-என்று கூறினர்.

இதே போன்று கடந்த வாரம் அல்லைப்பிட்டியில் ஆசிரியர் ஒருவர் மாணவன் ஒருவனை பனைமட்டையால் தாக்கிய நிலையில் மாணவன்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

# 2 லட்சம் சதுர கி.மீற்றரில் இன்னமும் கண்ணிகள்

### முழுவதும் அகற்றி முடிக்கப் பத்து ஆண்டுகள் ஆகலாம்

யாழ்ப்பாணம்,மே 24

**யாழ்.மாவட்டத்தில் இன்னும் 2 லட்சத்து 631 ஆயிரத்து 744 சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளன. இது வரையில் அகற்றப்படாதுள்ள எஞ்சிய நிலப்பரப்புகள் முழுவதுமாக கண்ணிவெடி அகற்றி முடிக்க பத்து ஆண்டுகளுக்கு மேல் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.**

இதுவரையில்கண்ணிவெடி அபாயம் இனங்காணப்பட்ட நிலப்பரப்பில் 90.04 சதவீத நிலப்பரப்பிலேயே கண்ணி வெடிகள் அகற்றி முடிக்கப் பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டலுவலர்வ.முருகதாஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கண்ணிவெடி அபாயம் உள்ள தாகக் கருதப்பட்ட 43 லட்சத்து 740 ஆயிரத்து 320 சதுர மீற்றர் பரப்பளவில், 39 லட்சத்து 381 ஆயிரத்து 937 சதுர மீற்றர் பரப்பளவிலேயே அகற்றப்பட்டுள்ளன.

எஞ்சிய 4 லட்சத்து 358 ஆயிரத்து 383 சதுர மீற்றர் பரப்பளவில், ஒரு லட்சத்து 723 ஆயிரத்து 639 சதுர மீற்றர் பரப்பளவில் தற்போது கண்ணிவெடியகற்றல் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரையில் 118 ஆயிரத்து 170 தனிநபர் எதிர்ப்பு கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன. டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகள் 458, வெடிக்காத வெடி பொருள்கள் 126 ஆயிரத்து 187 மீட்கப்பட்டுள்ளன.

இது வரையில் அகற்றப்படாதுள்ள எஞ்சிய நிலப்பரப்புகள் முழுவதுமாக கண்ணிவெடி அகற்றி முடிய பத்து ஆண்டுகளுக்கு மேல் செல்லும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

## வேகக்கட்டுப்பாட்டு குறியீடுகளை சாவகச்சேரியில் அமைக்க கோரிக்கை

சாவகச்சேரி நகர்ப் பகுதிக்கு வரும் பொதுமக்களின் நலன் கருதி வேகக் கட்டுப்பாட்டு குறியீடுகள் அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி வைத்தியசாலைக்கும், தபாற்கந்தோர் சந்திக்குமான ஏ-9 வீதி 'காப்பெற்' வீதியாக மாற்றப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிக்குள் பிரதேச செயலகம், வங்கிகள், சாவகச்சேரி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகம், பஸ் நிலையம், நவீன சந்தை, நீதி மன்றம், வர்த்தக நிலையங்கள், காப்புறுதி நிறுவனங்கள், எரிபொருள் நிலையம் போன்றவை உள்ளன. தினமும் தென்மராட்சி பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது தேவைகளுக்காக வருகின்றனர்.

வைத்தியசாலை தொடக்கம் தபால் கந்தோர் சந்தி வரையான ஏ-9 வீதி அகலிக்கப்பட்டு 'காப்பெற்' வீதியாக மாற்றப்பட்டுள்ளது. இதனால் வாகனச் சாரதிகள் வேகமாக வாகனங்களைச் செலுத்தி வருகின்றனர்.

வீதியோரங்களில் சிறிய, கனரக வாகனங்கள் நிறுத்தப்படுவதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் சாவகச்சேரி நகர்ப்பகுதியை உள்ளடக்கிய வீதியில் வேகக்கட்டுப்பாட்டு குறியீடுகளை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

## குழந்தையை விற்ற தாய்? விசாரணையில் பொலிஸார்

### யாழ்.போதனா வைத்தியசாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே24

யாழ். போதனா வைத்தியசாலையில் பிறந்த குழந்தையை விற்க முற்பட்டார் என்ற சந்தேகத்தில் குழந்தையின் தாய் மீதும் வாங்க முற்பட்டதாகத் தெரிவிக்கப்படும் பெண் ஒருவர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

யாழ். போதனா வைத்தியசாலையில் பிறந்த குழந்தையை தாயார் இன்னொரு பெண்ணிடம் விற்று சான்றாக கடிதம் ஒன்றைப் பெற்றுள்ளார். குறித்த குழந்தை வேறொரு பெண்ணின் கைக்கு மாற்றப்பட்டிருந்தபோது வைத்திசாலைப் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான இருவர் மீதும் விசாரணைகளை மேற்கொண்டனர் என தெரியவந்துள்ளது.

எனினும் வைத்தியசாலைப் பொலிஸாரிடமும், வைத்தியசாலை நிர்வாகத்தினரிடமும் தொடர்பு கொண்டு கேட்டபோது இத்தகையதொரு சந்தேகத்துக்கிடமான நிகழ்வு நடந்திருக்கலாம் என்ற பெயரில்தாம் விசாரணைகளை நடத்திவருவதாகத் தெரிவித்த அவர்கள் இது தொடர்பில் இப்போது உறுதியான தகவல் எதனையும் தரமுடியாது என தெரிவித்தனர். (10-16)

## லலித், குகன் வழக்கு ஜுலைக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே24

யாழ்ப்பாணத்தில் காணாமற்போன லலித், குகன் மீதான வழக்கு எதிர்வரும் ஜுலை 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அரச தரப்புச்சட்டத் தரணி தமது தரப்பினர் வருவதற்கு கால அவகாசம் தருமாறு கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (10-6)

## தீவுப் பகுதியின் கல்வித் தரத்தை உயர்த்துவது குறித்து ஆலோசனை

தீவுப்பகுதியின் கல்வித் தரத்தை உயர்த்துவது தொடர்பாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அந்தப் பகுதியைச் சேர்ந்த அதிபர்களுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆலோசனைகளை மேற்கொண்டார்.

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்துள்ளமை குறித்து அவர் கவலை தெரிவித்தார்.

மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்தும் பொருட்டு பின் தங்கிய நிலையில் உள்ள பாடசாலைகளுக்குப் பயிற்சி பெற்ற விசேட ஆசிரியர்களை அவ்வப்போது அனுப்புவதற்கு இதில் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் கடல் கடந்த தீவுகளில் விசேட கடமையை மேற்கொள்ளவும் விடுமுறைகாலங்களில் இது தொடர்பான முக்கிய கருத்தரங்குகளை நடத்தவும் நடவடிக்கை எடுக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. தற்போது வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் சாதாரணதரத்துக்கான பெறுபேறுகளை உயர்த்துவதற்குச் சாதகமாக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் போன்று தீவுப்பகுதியிலும் முன்னெடுக்கப் படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தீவுப் பகுதியில் உள்ள சாதாரண தர வகுப்புக்களைக் கொண்ட 28 பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட ஏனைய பாடசாலைகளின் அதிபர்களும் கலந்து கொண்டனர். (ம-7)

## ஜனாதிபதியின் லண்டன் பயணம் திணறும் பக்கிங்ஹாம் அதிகாரிகள்

லண்டன்,மே 24

பிரிட்டன் மகாராணி 2ஆம் எலிசபெத் முடிசூடி 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு நடைபெறவுள்ள விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்த, பக்கிங்ஹாம் அரண்மனை அதிகாரிகள் வெறுப்படைந்து போயுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விழாவில் பங்கேற்பதற்காக நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டு வரும் ஜுன் 4ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டன் செல்லவுள்ளார்.

இதுபற்றிய தகவல்கள் வெளியானதும், அங்குள்ள புலம்பெயர் தமிழர்கள் ராஜபக்ஷவுக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுக்கத் தயாராகி வருகின்றனர்.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்ததைக் கண்டித்து பக்கிங்ஹாம் அரண்மனைக்கு கண்டனக் கடிதங்கள் பல அனுப்பப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், கடந்த 2010ஆம் ஆண்டு ஒக்ஸ்போட் யூனியனில் உரையாற்ற லண்டன் சென்ற மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்புக் காரணங்களால் உரையாற்றாமலே திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டி இம்முறை அவருக்குப் பொருத்தமான பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இலங்கை அரசும் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

இதனால் பக்கிங்ஹாம் அரண்மனை அதிகாரிகள், இந்தச் சர்ச்சையில் இருந்து எவ்வாறு விடுபடுவதென்று தெரியாமல் திணறுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## நவுண வெளி அம்பாள் ஆலயத்தில் 12 வருடங்களின் பின்னர் வழிபாடு

தென்மராட்சி,மே 24

பளை வேம்பொடுகேணி பிரிவில் உள்ள நவுண வெளி அம்பாள் ஆலயத்தில் 12 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் மக்கள் வழிபாட்டை மேற்கொண்டனர்.

போர் அனர்த்தங்களால் ஆலயம் சேதமடைந்து காணப்பட்ட போதிலும் ஆலய சுற்றாடலில் காணப்பட்ட பற்றைகளைத் துப்புரவு செய்து கற்பூரம் ஏற்றி வழிபட்டனர்.

ஆலய கட்டடங்கள் சேதமடைந்தும், ஆலய சுற்றாடலில் காணப்பட்ட மரங்கள் முறிந்து வீழ்ந்தும் கிடப்பதைக் கண்ட சிலர் அம்பாளின் முன்னால் கதறி அழுதனர்.

ஆலய சுற்றாடலில் உள்ள குடியிருப்புகளில் இன்னும் இரண்டு மாதங்களில் மீள்க்குடியமர அனுமதிக்கப்படும் என்று படைத்தரப்பினரும் வெடிப்பொருட்கள் அகற்றும் பிரிவினரும் உறுதியளித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட போது இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தின் போது ஆலயத்துக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட போதிலும் மக்கள் விடாப்பிடியாக வற்புறுத்தியதை அடுத்து ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை ஏ-9 வீதியிலிருந்து வேம்பொடுகேணி, செல்வபுரம் ஊடாக புலோப்பளைக்குச் செல்லும் வீதி நேற்று முன்தினம் பொது மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## தமிழ்க் கைதிகளை பிழையாக வழிநடத்துகிறது கூட்டமைப்பு

### அமைச்சர் சந்திரசிறி கஜதீர

கொழும்பு,மே 24

தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைதிகளைப் பிழையாக வழிநடத்தி வருவதாகச் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார். உண்ணாவிரதப் போராட்டங்கள் போன்றவற்றின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில சக்திகளின் பிழையான வழிநடத்தல் காரணமாகவே வெலிக்கடை உள்ளிட்ட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, நீதி அமைச்சு மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களம் ஆகியன கூட்டாக இணைந்து, இந்த மாத இறுதிக்குள் கைதிகள் தொடர்பில் தீர்மானம் ஒன்றுக்கு கொண்டு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த)

## ஆலயங்களில் திருட்டைத் தடுக்க நடவடிக்கை தேவை

### இந்துசமயப் பேரவை ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், மே 24

இந்து ஆலயங்களில் நடைபெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு இந்து சமய பேரவை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இந்து சமயப் பேரவையினால் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த காலங்களில் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் உள்ள எமது புண்ணிய வழிபாட்டுத் தலங்களில் ஆலய விக்கிரகங்கள் உட்பட பல பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டு வருகின்றன.

இத்தகைய துர்ப்பாக்கிய நிகழ்வுகளின் போது சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகிகள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். எனினும் இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்த முடியாமற் போனமை துரதிஸ்டவசமானதே. இதனால் இந்து மக்கள் மட்டுமல்லாது இலங்கைத் தீவிலுள்ள அனைத்து மதத்தினரும் பெருங்கவலை அடைந்துள்ளனர். இந்த நாட்டில் வாழும் மக்கள் ஆத்மீகத்தில் அளவற்ற நம்பிக்கை கொண்டு வாழ்வதைத் தாங்கள் நன்கறிவீர்கள். மன வக்கிரமடைந்த திருடர்களால் மேற்கொள்ளப்படும் திருட்டுச் செயல் எமது நாட்டுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி வருகிறது.

எனவே இது விடயத்தில் நாட்டின் ஜனாதிபதியாகிய நீங்கள் தலையிட்டு உரிய தீர்வைத் தர வேண்டும் என்று கோரி நிற்கின்றோம் - என்றுள்ளது. (16-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்திலிருந்து காத்தான்குடிக்கு கொத்தடிமையாக சிறுவன் கடத்தல்

## முஸ்லிமாக மாற்றப்பட்டு ஒரு வருடத்தின் பின் யாழ்.நகரில் மீட்பு

யாழ்ப்பாணம், மே 24

*மானிப்பாயில் ஒரு வருடத்துக்கு முன்னர் கடத்தப்பட்ட சிறுவன் யாழ். நகரப் பகுதியில் முஸ்லிமாக மாற்றப்பட்ட நிலையில் அவனது தாயரால் மீட்கப்பட்டான்.*

*இந்தச் சிறுவன் காத்தான்குடியில் வீடு ஒன்றில் கொத்தடிமையாக வேலைக்கு அமர்த்தப்பட்டது தெரிய வந்த நிலையில் குடாநாட்டில் இருந்து சிறுவர்கள் கொத்தடிமைகளாக கடத்தப்படுகின்றனர் என்று சந்தேகம் எழுந்துள்ளது.*

*சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியைச் சேர்ந்த பரமநாதன் ரஜிராம் (வயது -13) என்ற சிறுவனே இவ்வாறு கடந்த வருடம் ஜூன் மாதம் 8 ஆம் திகதி கடத்தப்பட்டு அண்மையில் யாழ். நகரில் வைத்து மீட்கப்பட்டான்.*



குறித்த சிறுவன் சண்டிலிப்பாய் இரட்டைப்புலம் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு சென்றகொண்டிருந்த வேளை கடந்த வருடம் காணமற் போனதாக அவரது தாயாரால் மானிப்பாய் பொலிஸிலும் மனித உரிமை ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த நிலையில் குறித்த சிறுவன் யாழ். நகரில் உள்ள புடைவைக் கடையொன்றில் முஸ்லிம் உடையணிந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தான் இதனை அவதானித்த சிறுவ்னது அயலவர்கள் சம்பவத்தை தாயாருக்கு தெரியப் படுத்தினர். தாயார் மானிப்பாய் பொலிஸாரின் உதவியுடன் சிறுவனை இனம் கண்டுள்ளார். பொலிஸார் சிவில் உடையில் ரஜிராமை மீட்டதுடன் சந்தேகத்தின் பேரில் மூன்று முஸ்லிம்களையும் கைது செய்தனர்.

இந்த நிலையில் சந்தேக நபர்கள் மூவரும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டு பிணையில் விடுவிக் கப்பட்டனர். நான்காவது சந்தேக நபரும் நேற்று முன் தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் சிறுவனை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். இதனையடுத்து சிறுவன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடத்தல் சம்பவம் குறித்து சிறுவன் உதயனுக்கு தெரிவித்ததாவது:-

'நான் சம்பவ தினத்தன்று பாடசாலை நோக்கி சீரணிச் சந்திக்கு சென்று கொண்டிருந்தேன். ஹைஏஸ் வாகனத்தில் வந்த இரண்டு பேர் உனக்கு அப்பா இருக்கிறாரா என்று கேட்டனர். இல்லை என்றேன். அம்மா இருக்கிறார என்று கேட்டனர். ஆம் என்றேன். தங்களுடன் வருமாறு கேட்டு எனது கையைப்பிடித்து ஏற்றி சென்று விட்டனர்.

அவர்கள் என்னை யாழ். நகரில் உள்ள வீடொன்றுக்குள் அழைத்துச் சென்று பாடசாலைச் சீருடையை மாற்றி சாரமும் சேட்டும் அணிவித்தனர். பின்னர் மட்டக்களப்பு காத்தான் குடிக்கு கொண்டு செல்லப் பட்டேன். அங்கு அர்சலா வீதியில் உள்ள வீடொன்றில் தங்க வைக் கப்பட்டு மறுநாள் அருகில் உள்ள வைத்திய சாலைக்கு கொண்டு சென்று சுன்னத்துச் சடங்கு செய்தனர். வைத்தியர் ஒருவரே அதனைச் செய்தார். அத்துடன் எனக்கு அன்வர் எனப் பெயரும் வைத்தனர். நஜீப் என்பவரது வீட்டிலே நான் வேலைக்கு அமர்த்தப்பட்டேன். அங்கு தினமும் காலை 6 மணிக்கு எழுந்து பதுரியா பள்ளி வாசலில் குடிதண்ணீர் அள்ளி குறித்த வீட்டாருக்கு கொடுக்க வேண்டும். அவர்களின் 6 ஆம், 7 ஆம் தரத்தில் படிக்கும் இரண்டு பிள்ளைகளை சைக்கிளில் கூட்டிச்சென்று அழைத்து வர வேண்டும் இடைநேரத்தில் வீட்டு வேலைகளை செய்ய வேண்டும்.

இந்த நிலையிலேயே நகரில் உள்ள புடைவைக் கடையொன்றில் ஜெமில் என்பவர் என்னைக்கொண்டு போய் சேர்த்து விட்டார். அங்கிருந்தே நான் எனது தாயாரால் மீட்கப்பட்டேன் என்றான் சிறுவன்.

யாழ்ப்பாணத்தில் சிறுவர்கள் கடத்தப்பட்டு கொத்தடிமைகளாக வேலைக்கு அமர்த்தப்படுவது தெரிய வந்த நிலையில் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

குறித்த சிறுவனின் தந்தையார் 4 வருடங்களுக்கு முன்னதாக நோய் காரணமாக இறந்து விட்டார். சிறுவனுக்கு சகோதரனும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ-10-4)

சவுதி அரேபியா விமான நிலையத்தில்



GROUND SERVICES
உடனடி தொழில் வாய்ப்பு
GENERAL WORKERS - 350 Nos.
பொது வேலையாட்கள் - 350 பேர்
சம்பளம் - SR 690/-
TEC. OPERATOR / DRIVERS - 50 Nos.
தொ.இயக்குனர் /சாரதிகள் - 50 பேர்
சம்பளம் - SR 1609/-
1 SR = Rs. 34/-
Terms & Conditions:
- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி,போக்குவரத்து இலவசம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலையுடன், வாரத்தில் 1 நாள் விடுமுறை.
- 2 வருட ஒப்பந்த காலம்
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது
அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம்
ரூபா : 80,000/- மட்டுமே அறவிடப்படும்
பாஸ்போட்டுடன் உடன் நேரே வாருங்கள்
உடன் தொடர்புகளுக்கு: 0779283535
QP Employment (pvt) Ltd,
இல: 06, கெம்பல் டெரஸ், கொழும்பு - 10.
(பாஸ்போட் காரியாலயம் அருகில்) AL1316/Advt:/05/12

# ஏ-9 வீதியில் நேற்று கோர விபத்து ஒருவர் சாவு: 10 பேர் படுகாயம்

*தென்மராட்சி,மே 24*

*எழுதுமட்டுவாழ் பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று இடம்பெற்ற ஹையஸ்- மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 10 பேர் படுகாயமடைந்தனர்.*

*யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த திருமண நிகழ்வுக்காக வாகனங்களில் வந்தபோதே விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.*

*ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த போது மோட்டார் சைக்கிளை- ஹைஃயஸ் வான் மோதியதுடன் அருகில் உள்ள மரத்துடனும் வான் மோதியுள்ளது.*

*மோட்டார் சைக்கிளில் பயணித்த செட்டிகுளத்தை சேர்ந்த தங்கராசா உதயராசா (வயது-44) என்பவர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுமதிக் கப்பட்டு அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமானார்.*

*முல்லைத்தீவிலிருந்து வானில் பயணித்த ஒட்டுசுட்டானைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த செபஸ்ரியான் போல்ராஜ்குமார் (வயது-47) இவரது மனைவி போல் ராஜ்குமார் திருக்கேதீஸ்வரி (வயது -40), மகள் ஜஸ்மினி(வயது-6) ஆகியோரும் வான் சாரதி மகேந்திரன்- சற்குணேஸ்வன் (வயது-43), வடமராட்சி புலோலி மேற்கைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா-தயாகரன் (வயது-30), வவுனியா இராசதுரை வீதியைச் சேர்ந்த கனகையன் குலச் செல்வன் (வயது-40), ஆகியோரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.*

*முள்ளியவளை குமிழமுனையைச் சேர்ந்த பொன்னையா உதய சந்திரன் (வயது-41) முத்துஐயன் கட்டைச் சேர்ந்த மாரிமுத்துப் பிள்ளை ஜெகநாதன் (வயது-51), புதுக்குடியிருப்பு கைவேலியைச் சேர்ந்த தாஸ்-தங்கராசா (வயது-56) ஒட்டுசுட்டானைச் சேர்ந்த வே.வசந்த குமார் (வயது 30), ஆகியோர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*இந்த விபத்தில் மரணமான தங்கராசா உதயராசா தனது குடும்பத் தாருடன் கட்டாறில் வசித்து வரும் நிலையில் உறவினரின் திருமண வைபவத்துக்காகத் தனது சொந்த இடத்துக்கு வந்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ம-9-4)*

## நிகழ்வுகள் இன்று

### நூல் வெளியீடு

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி எழுதிய 'சுவடிகள்' நூல் வெளியீட்டு விழா பிற்பகல் 3 மணிக்கு நகரசபைக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மே.சாந்தசீலனும் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும் கலந்து [illegible] ''தூது'' சஞ்சிகையின் ஆசிரியரும் எழுத்தாளருமாகிய அருட்பணி ரி.எஸ். யோசுவாவும் மதிப்பீட்டுரையை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளையும் வாழ்த்துரையை அகில இலங்கை இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் ஆகியோரும் நிகழ்த்துவர். (ம-9)

### கண்காட்சி

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச பிரிவில் உள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் நடத்தப்பட்ட தையல், மனையியல், அழகியல் பயிற்சி வகுப்புகளில் பங்கு பற்றியவர்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி முற்பகல் 10 மணிக்கு மீசாலை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

உதவிப் பிரதேச செயலர் செல்வி இ.நவரத்தினம் தலைமையில் நடைபெறும் கண்காட்சியை யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் ஆரம்பித்து வைப்பார். (ம-9)

### புதிய குருக்கள் திருநிலைப்படுத்தல்

யாழ்.கத்தோலிக்க திருச்சபைக்கு புதிய குருக்களைத் திருநிலைப்படுத்தும் சடங்கு இன்று யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் நிறைவேற்றப்படும் குருத்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலியில் 5 அருட்சகோதரர்கள் குருக்களாக அபிஷேகம் செய்யப்படவுள்ளனர். (த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்குரஸ்ஸவில்...

01↘ களைப் போன்ற பகுதியளவில் தயாரிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான துப்பாக்கிகளை பொலிஸார் அங்கு கண்டு பிடித்துள்ளனர்.

பலகைத் தொழிற்சாலை என்ற போர்வையில் இந்த ஆயுதத் தயாரிப்பு நிலையம் இயங்கியுள்ளது. இந்த முற்றுகையின்போது ஒரு நபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

மேற்படி துப்பாக்கிகள் தலா 50,000 ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா விலையில் விற்கப்பட்டதாகவும் இவற்றில் பெரும்பாலானவை இரட்டைக் குழல் துப்பாக்கிகள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எந்தத் தோட்டாவையும் பயன்படுத்தக்கூடிய துப்பாக்கிகளைத் தயாரிக்கும் ஆற்றலை 40 வயதான மேற்படி சந்தேக நபர் கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சந்தேக நபரிடமிருந்து துப்பாக்கிகளை வாங்கிய நபர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (த)

## புதிய கட்சி...

01↘ ஆரம்பிக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கொட்டகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

ஜனநாயக கட்சி என்னும் அரசியல் கட்சியைப் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்களை தேர்தல் திணைக்கத்துக்கு அனுப்பி வைத்துள்ளோம். அவர்களின் அனுமதி கிடைக்கும் வரை காத்திருக்கிறோம்.

பொன்சேகாவின் வழி நடத்தலில் உருவாகவிருக்கும் இந்தக் கட்சியின் தலைவராக நான் இருப்பேன். நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுண ரணதுங்கவும் அனோமா பொன்சேகாவும் கட்சியின் இணை உப தலைவர்களாகச் செயற்படவுள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்படுவார் என்று தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜய்ந்த - ஏனைய உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள் கட்சி பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கூறினார். (த)

## ஜெனிவாத் தீர்...

01↘ திப்பில், இராஜாங்கத்திணைக்களப்பேச்சாளர் விக்ரோரியா நுலன்ட்டிடம், ஹிலாரிகிளின்ரன் ஜி.எல். பீரிஸ் சந்திப்பின் இறுதியான விவரங்கள் உள்ளதா என்று கேள்வி எழுப்பட்டது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், வூட்ரோ வில்சன் நிலையத்தில் உரையாற்றியபோது அமெரிக்கா உள்ளிட்ட 23நாடுகளின் ஆதரவுடன் ஐ.நா மனிதஉரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டதீர்மானத்தை இலங்கை நிராகரிப்பதாகக் கூறியதைச் செய்தியாளர்கள் அவரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதற்குப் பதிலளித்த இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியாநுலண்ட்,

இலங்கைச் சந்திப்புத் தொடர்பாக அழகாகவும் விரிவாகவும் கடந்த வெள்ளிக் கிழமை பேசியதாக நினைக்கிறேன். அப்போது முழுமையான விபரங்களை வெளிப் படுத்தினேன். நாங்கள் ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தின் பின்னால் நிற்கிறோம். அதன்படியே செயற்படுகிறோம். அதையே தொடர்வோம் என்று கூறியுள்ளார்.

அதேவேளை இந்தச் செய்தியாளர் சந்திப்பில் சரத் பொன்சேகா விடுதலை தொடர்பாக அவர் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(த)

## வவுனியாவில்.....

01↘ தின் இணை ஏற்பாட்டாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோர் வவுனியா நகர மக்களை சந்தித்து மேற்படி விடயங்கள் தொடர்பாக விபரித்தனர்.

அத்துடன் வவுனியாவில் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் அரசியல் கைதிகளையும் இவ்விருவரும் நேரில் பார்வையிட்டனர். இது தொடர்பாக சந்திரசேகரன் கூறுகையில்,

''தமக்கு எதிராக குற்றச்சாட்டுகள் இருப்பின் வழக்குத் தொடருமாறும் இல்லையாயின் தம்மை விடுதலை செய்யுமாறும் கைதிகள் கோரிக்கை வலியுறுத்தினர். இக்கோரிக்கையில் நியாயமானவை எனத் தெரிவித்த சுனில் ஹந்துன்நெத்தி, இக்கைதிகளின் விடுதலைக்காக தொடர்ந்தும் குரல்கொடுப்போம் எனத் தெரிவித்தார். இவ்விடயத்தில் அரசியல் பேதங்களுக்கு அப்பால் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணையுமாறு நாம் கோருகிறோம்'' என்றார். (த-400)

## பொன்சேகா விடுதலையில்....

01↘ சரத் பொன்சேகாவை விடுவிக்க எந்தச் சர்வதேச அழுத்தங்களும் எனக்கு வரவில்லை. அவர்கள் கூறுவதுபோல அமெரிக்காவோ அல்லது வேறெந்த நாடுகளோ எமக்கு அழுத்தங்களைத் தரவில்லை. எம்முடன் அமெரிக்கா சிறந்த நட்புறவுடன் இருக்கின்றது.

பொன்சேகாவின் விடுதலை குறித்து டிரான் அலஸ் எம்.பி. என்னுடன் பல தடவைகள் பேச்சு நடத்தினார். அவரின் அயராத முயற்சியினால்தான் பொன்சேகாவுக்கு இந்த விடுதலை கிடைத்தது. ஆனாலும் இப்போது விடுதலை செய்யப்பட்ட விதம் மற்றும் இதர விடயங்கள் குறித்து பொன்சேகா, டிரான் அலஸ் எம்.பியுடன் கருத்து முரண்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக நான் அறிகிறேன்.

தந்தையாரை விடுதலை செய்யுமாறு பொன்சேகாவின் மகள் எனக்குக் கடிதமொன்றை எழுதியிருந்தார். ஆனால் அதில் கையொப்பமிடவில்லை. கையொப்பமிடாத கடிதங்களை ஏற்றுக் கொள்ள முடியாதென நான் டிரான் அலஸ் எம்.பியிடம் தெரிவித்திருந்தேன்.

பொன்சேகாவை எதிர்க் கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அரசியலில் ஈடுபடாமல் அவர் எவ்வாறு ஆட்சி மாற்றத்தைச் செய்யப்போகிறார் என்பதுதான் தெரியவில்லை.

பொன்சேகாவுக்கு எதிரான சில வழக்குகள் தொடர்ந்து நடக்கும். சட்டமா அதிபர் திணைக்களம் தனது கடமையைச் செய்யும். எப்படியாயினும், இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புகளில் எந்த மாற்றத்தையும் என்னால் செய்ய முடியாது. அப்படிச் செய்ய முற்படுவது எதிர்காலத்தில் தவறான முன்னுதாரணங்களுக்கு வழிசமைத்து விடும். ஒருவரையும் கட்டுப்படுத்த முடியாமற் போய்விடும்.

- என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி மஹிந்த.

## பொன்சேகா போன்று .....

01↘ அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கடைசி வரை களத்தில் நின்ற பல விடுதலைப் போராளிகள் விடுவிக்கப்பட்டு விட்டார்கள். ஆயினும் எனது பிள்ளைக்கு இதுவரை விடுதலை கிடைக்கவில்லை. இது எந்த வகையில் நியாயமானது. எனது மகன் சிறையில் பத்து வருடங்களைக் கழித்து விட்டான். அவனை பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவித்து என்னுடன் சேர்ந்து வாழ வழி செய்யுங்கள்' என்றார் கிளிநொச்சியைச் சேர்ந்த தாய் ஒருவர்.

'கணவர் இல்லாமையால் கடந்த 6 வருடங்களாக எமது குடும்பம் பெரிதும் துன்பப்படுகிறது. எனது இரு பிள்ளைகளுடன் நான் பல கஷ்டங்களை எதிர்கொண்டு வருகிறேன். அவர்களை படிபிக்க முடியாத நிலை கூட ஏற்பட்டுள்ளது. என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. பொருளாதாரச் சுமை, வருமானமின்மை காரணமாக நொந்துபோயுள்ளேன். இனியாவது எனது கணவரை விடுவித்து உதவுங்கள்' என்று கண்ணீருடன் கருத்து வெளியிட்டுள்ளார் வலிகாமம் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பத் தலைவி ஒருவர்.

'அவரைக் கைது செய்து 9 வருடங்கள் ஆகிவிட்டது. விடுவார்கள் என்று எதிர் பார்த்திருந்து களைத்துப் போய் விட்டேன். இந்த முறையாவது ஒரு நல்ல முடிவு கிடைக்க வேண்டும் என மனதில் வேண்டிக் கொண்டு இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்துக்குச் செல்கிறேன் என்றார் மட்டக்களப்பைச் சேர்ந்த குடும்பத்தலைவி ஒருவர்.

இவ்வாறு ஏனைய மாவட்டங்களில் இருந்து ம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்ற வவுனியா வந்துள்ள பெற்றோர்கள் தமது கோரிக்கைகளை கண்ணீருடன் உதயனிடம் முன் வைத்தனர்.

இதேவேளை,

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி இன்று வவுனியாவில் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெறவுள்ளது. சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைதொடர்பிலும் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா நகர சபை மைதானத்தில் இந்தக் கவன யீர்ப்புச் சத்தியாக்கிரகம் காலை 7 மணி முதல் நடத்தப்பட உள் ளது.

தம்மை விடுவிக்குமாறு கேட்டுதமிழ்அரசியல்கைதிகள் சிறைகளில் பட்டினிப் போராட்டம் நடத்தி வருகையில், அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் நிபந்தனையற்று அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும் இந்தச் சத்தியாக்கிரகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கனேடியத் .....

01↘ திகதி இரவு கோரமான முறையில் இவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தக் கொலை தொடர்பாக உடன் விசாரணைகளை நடத்துமாறு கனேடியத் தூதரகம் இலங்கை அரசுக்கு அழுத்தங்களை வழங்கியிருந்தது.

இதனையடுத்து கொழும்பிலிருந்து விசேட பொலிஸ் குழு ஒன்று கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பொலிஸ் விசேட குழுவே சந்தேகத்தின் பேரில் ஐந்து பேரைக் கைதுசெய்து விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றது. (உ-16-6)

## தமிழ் கைதி...

01↘ அத்துடன், இதற்கு விசேட செயற்பாட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும். மேற்கூறப்பட்ட விடயங்களை அரசு செய்யும் என்றும் அவர் தெரிவித்தார். (த)

## கோரிக்கை நிறை .....

01↘ ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக மாறியுள்ளதாகச் சிறைச்சாலை தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 192 கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் 12 பேரின் உடல் நிலை மோசமடைந்துள்ளது. களுத்துறை சிறைச்சாலையில் மூவரது உடல்நிலையும் வவுனியா சிறைச்சாலையில் 6 பேரின் உடல் நிலையும் மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிறைச்சாலைகளில் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் 180 தமிழ் கைதிகளும் ,அநுராதபுரம் சிறைச்சாலையில் 80 கைதிகளும், பூசா தடுப்பு முகாமில் 10 கைதிகளும் ,வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலையில் 32 கைதிகளும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 17 ஆம்திகதி முதலும் களுத்துறை மற்றும் வவுனியா சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் 18 ஆம் திகதி முதலும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் நிலையில் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சில் நேற்று முன்தினம் உயர் மட்டக் கூட்டம் இடம் பெற்றிருந்தது.

கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கை தொடர்பில் ஆராயப்பட்ட கூட்டத்தில் இந்த முடிவுகள் தமிழ் அரசியல் கைதி களுக்கு இது வரை அறிவிக்கப்படவில்லை. இதனால் தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெற்று வருகின்றது. (த)

## ஒட்டிப் பிறந்த....

01↘ வைக்கப்பட்டுள்ளது.யாழ். போதனா வைத்தியசாலையில் 22ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த மல்லாகத்தைச் சேர்ந்த சூரியகுமார் வசந்தா தேவி என்பவருக்கு அறுவைச் சிகிச்சை மூலம் உடல் ஒட்டியநிலையில் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன.

போதனா வைத்தியசாலைக்கு பல்வேறு தேவைக்காகச் சென்றிருந்த பலர் அந்தக் குழந்தைகளைப் பார்க்க முண்டியடித்ததைக் காண முடிந்தது.

இரண்டு குழந்தைகளினதும் நெஞ்சு, வயிறு என்பன ஒட்டிய நிலையில் உள்ளன. இரண்டு தலை, நான்கு கைகள், நான்கு கால்கள் காணப்படும் இந்தக் குழந்தைகளின் உடலில் உரோமங்கள் செறிவாகக் காணப் படுகின்றன.

இது தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்றுப் பெண் நோயியல் வைத்திய நிபுணர் குலசிங்கம் சுரேஸ்குமாரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

இது வைத்தியசாலை வரலாற்றில் அரிதான ஒரு விடயம். குழந்தைகளின் உறுப்புக்கள் ஆரம்பத்திலேயே பிரியாது, தாமதமாகப் பிரிந்துள்ளன. இதனாலேயே ஏனைய உறுப்புக்கள் பிரிந்த போதும்நெஞ்சுப்பகுதியும்வயிற்றுப் பகுதியும் பிரியவில்லை.

குழந்தைகள் பிறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் கதிர்வீச்சுப் பரிசோதனை மூலமாக இரட்டைக் குழந்தைகள் என்பது தெளிவாகியது. ஆனால் அவை ஒட்டிய நிலையில் உள்ளதா? என்பதனைப் பரிசோதிக்கக் கூடிய வசதிகள் இங்கில்லை என அவர் தெரிவித்தார். (த-10-4-17)

## அரசியல் கைதிகள் .....

01↘ ரும் யாழில் படையினர் நிலைகொண்டுள்ளதற்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்றும் அவர் கூறினார்.

அரசியல் கைதிகள் இருக்கின்றனர் எனக்கூறி நாடாளுமன்றத்தையும் சர்வதேச சமூகத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தவறாக வழிநடத்துவதற்கு முயற்சிக்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையிலும் வவுனியா, களுத்துறை ஆகிய சிறைச் சாலைகளிலும் தடுத்துவைக் கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருந்துவரும் விடயம் குறித்தும் அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றில் விசேடகூற்றொன்றை விடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நாடாளுமனற உறுப்பினர் இரா. சம்பந்தன் உரையாற்றினார்.

நிலையியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் சம்பந்தன் எழுப்பிய கேள்விக்கு இன்று பதிலளிக்கப்படும் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அதற்கமைய, நேற்று நாடாளுமன்றில் கூற்றொன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் [illegible]மாறு:-

எந்தவொரு அரசியல் கைதியையும் அரசு தடுத்துவைக்கவில்லை. அரசியல் கைதியென்று இங்கு எவரும் இல்லை. சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவர்களும், விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருக்கலாம் என சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களுமே தவிர, அவர்கள் அரசியல் கைதிகள் அல்லர்.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து 359 பேரும், சந்தேகத்தின் பேரில் 309 பேரும் இவ்வாறு தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். இவர்கள் அரசியல் கைதிகள் அல்லர். பயங்கரவாத அமைப்புடன் தொடர்பைப் பேணியவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அரசியல் கைதி எனக் கூறி சம்பந்தன் நாடாளுமன்றத்தையும், சர்வதேச சமூகத்தையும் தவறாக வழிநடத்த முயன்றமையையிட்டு அரசு கவலையடைகின்றது.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களுள் அங்கவீனர்களும் உள்ளனர் என்றும், அவர்களை விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறப் படுவதற்கும் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது.

பயங்கரவாத நடவடிக்கையின் போதே அவர்கள் அங்கவீனமாக்கப்பட்டனர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சரணடைந்தவர்களை அரசு புனர்வாழ்வளித்து விடுதலை செய்துள்ளது. ஏன், அவர்களுக்குக் கடன் உதவிகளைக்கூடச் செய்து கொடுக்கின்றது.

தற்போது உண்ணாவிரதம் இருந்துவரும் கைதிகள் சிறைச்சாலைகளில் வழங்கும் உணவுகளை உட்கொள்ள மறுக்கின்றனர். அவர்கள் வெளியில் இருந்து வழங்கப் படும் உணவுகளை உட் கொள்கின்றனர் என எமக்குத் தகவல் கிடத்துள்ளது. கைதிகளைப் பார்வையிட வரும் உறவினர்கள் உணவு சகிதமே வருவர்.

தற்போது புனர்வாழ்வளிக்கப்பட்டு வருபவர்கள் 75 பேர் அடுத்த மாதம் 02 ஆம் திகதி (2012. 06.02) உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளனர். மீதியுள்ள 597 பேரும் புனர்வாழ்வளிக்கப் பட்டு விடுதலை செய்யப் படுவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் தாக்கப் பட்ட சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் படையினரை நிலைநிறுத்துவதற்கும், மாணவன் தாக்கப்பட்டமைக்கும் இடையில் எது வித சம்பந்தமுமில்லை.

புனர்வாழ்வளித்து அரசு மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து இவர்கள் கதைப்பதில்லை.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் புனர்வாழ்வு அளிக்கும் செயற்பாட்டில் அரசு ஈடுபட்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களுக்கு சட்ட பூர்வமாக நிவாரணம் வழங்கப் படும் - என்றார் நிமல். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதிகளின் விடுதலை கோரி

# இன்று

# மாபெரும் சத்தியாக்கிரகம்

விடுதலையை நோக்கி

ஒன்றிணைவோம் வாரீர்!



செந்நீரும் கண்ணீரும்
சாதிக்காததை
எங்கள் ஒற்றுமை
சாதிக்கட்டும்.

இன்னும் ஒரே ஒரு தடவை
எமக்காகக் குரல் கொடுப்போம் வாரீர்!



*திகதி: 24.05.2012 வியாழக்கிழமை*
*இடம்: வவுனியா நகரசபை*
*விளையாட்டு மைதானம்*
*ஆரம்பம்: காலை 7 மணி*

*ஒருங்கிணைப்பு:*
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் வயல் காணிகளில் ஊர்காவல் படையினர் நெற்செய்கை

## கூட்டமைப்பின் மூதூர் பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

திருகோணமலை, மே 24

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட படுகாடு, முதலைமடு, பட்டித்திடல், மணற்சேனை, பெரியவெளி, மல்லிகைத் தீவு, கங்குவேலி, மேன்காமம், பாரதிபுரம், முன்னம்போடி ஆகிய இடங்களில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் வயல் காணிகளில் தெஹிவத்தையைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவரின் உதவியுடன் ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்கள் அத்துமீறி நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூதூர் பிரதேச சபை உறுப்பினர் த.தமிழ்ச் செல்வன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக மூதூர், சேருவில பிரதேச செயலர் மற்றும் மாகாணக் காணி ஆணையாளர் போன்றோருக்கு தெரியப்படுத்தப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை என்று அவர் தெரி வித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுக்கு இது தொடர்பில் மனு மூலம் அறிவித்திருந்தோம். இந்தப் பிரச்சினை குறித்து அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் இதுவரை தீர்வு எதுவும் கிடைக்கவில்லை என்று அவர் கூறினார்.

நாட்டில் நல்லிணக்கம் பற்றிப் பேசும் அரசு, தமிழ் மக்களின் விடயத்தில் மட்டும் பாராமுகமாக இருப்பது ஏன்? தமிழ் பேசும் மக்களுடைய காணிகளை மீண்டும் அவர்களிடம் ஒப்படைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-40)

## நவுண வெளி அம்பாள் ஆலயத்தில் 12 வருடங்களின் பின்னர் வழிபாடு

தென்மராட்சி,மே 24

பளை வேம்பொடுகேணி பிரிவில் உள்ள நவுண வெளி அம்பாள் ஆலயத்தில் 12 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் மக்கள் வழிபாட்டை மேற்கொண்டனர்.

போர் அனர்த்தங்களால் ஆலயம் சேதமடைந்து காணப்பட்ட போதிலும் ஆலய சுற்றாடலில் காணப்பட்ட பற்றைகளைத் துப்புரவு செய்து கற்பூரம் ஏற்றி வழிபட்டனர்.

ஆலய கட்டடங்கள் சேதமடைந்தும், ஆலய சுற்றாடலில் காணப்பட்ட மரங்கள் முறிந்து வீழ்ந்தும் கிடப்பதைக் கண்ட சிலர் அம்பாளின் முன்னால் கதறி அழுதனர்.

ஆலய சுற்றாடலில் உள்ள குடியிருப்புகளில் இன்னும் இரண்டு மாதங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படும் என்று படைத்தரப்பினரும் வெடிப் பொருள்கள் அகற்றும் பிரிவினர் உறுதியளித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட போது இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தின் போது ஆலயத்துக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட போதிலும் மக்கள் விடாப்பிடியாக வற்புறுத்தியதை அடுத்து ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை ஏ-9 வீதியிலிருந்து வேம்பொடுகேணி, செல்வபுரம் ஊடாக புலோப்பளைக்குச் செல்லும் வீதி நேற்று முன்தினம் பொது மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

### வாகன விபத்தில் இருவர் காயம்

அம்பாறை, மே 24

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லாறு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந் துள்ளனர்.

கல்லாறு பொலிஸ் சாவடிக்கு முன்பாகச் சென்று கொண்டிருந்த காரொன்றுடன் சிறிய லொறி மோதியே இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இருவரும் களுவாஞ்சிக் குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணையை களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-30)

## சோஆ நிறுவனத்தால் மாலை நேர வகுப்புக்கள்

வவுனியா,மே 24

மெனிக்பாம் நலன்புரி பாடசாலையிலுள்ள மாணவர்களின் நன்மை கருதி 'சோஆ' நிறுவனத்தால் மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆனந்த குமாரசாமி மற்றும் கதிர்காமர் நலன்புரி பாடசாலைகளிலுள்ள தரம் 10, தரம் 11 மாணவர்களின் நன்மை கருதியே இந்த மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றது.

கணிதம், விஞ்ஞானம், வரலாறு, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு இந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களையும் ஏனைய ஆசிரியர்களுடன் இணைத்து இந்த வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

தினமும் மாலை 2 மணிமுதல் மாலை 5 மணி வரை வகுப்புக்கள் இடம் பெற்று வருகின்றன. தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதற்கான வசதி வாய்ப்புக்கள் இல்லாத நலன்புரி நிலையங்களில் இத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் சோஆ நிறுவனத்தின் இந்த முயற்சியைப் பெற்றோர் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

இதன் மூலம் இரு பாடசாலைகளிலும் உள்ள சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-400)

### பொலிஸ்–பொதுமக்கள் நல்லுறவு

வவுனியா சிதம்பரபுரம் சிவில் பாதுகாப்பு குழுவினரால் பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக் கூட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்திற்கு வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜ வித்தியாலயத்தின் அதிபர் எஸ். வரதராஜா த்லைமை தாங்கினார்.

இந்தக் கூட்டத்தில் சிதம்பரபுரம் திருப்பழனி முருகன் ஆலயச் சூழல், சிதம்பரபுரம் சிவில் பாதுகாப்புக் குழுவின் எதிர்காலத் திட்டங்கள், இந்தப் பகுதியில் குற்றச் செயல்களைத் தடுக்கும் முறைகள், ஸ்ரீநாகராஜ வித்தியாலயத்தின் செயற்பாடுகள், பெற்றோர், மாணவர்களின் ஒத்துழைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் சிதம்பரபுரம் சிவில் பாதுகாப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி எ.ஆர். திஸாநாயக்க சிதம்பரபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.பிரபாகரன், வவுனியா மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுவின் பொறுப்பதிகாரி மஹிந்த, கிராமசேவையாளர் எஸ்.அரியரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (க-402)

## தீவுப் பகுதியின் கல்வித் தரத்தை உயர்த்துவது குறித்து ஆலோசனை

தீவுப்பகுதியின் கல்வித் தரத்தை உயர்த்துவது தொடர்பாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அந்தப் பகுதியைச் சேர்ந்த அதிபர்களுடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆலோசனைகளை மேற்கொண்டார்.

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்துள்ளமை குறித்து அவர் கவலை தெரிவித்தார்.

மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்தும் பொருட்டு பின் தங்கிய நிலையில் உள்ள பாடசாலைகளுக்குப் பயிற்சி பெற்ற விசேட ஆசிரியர்களை அவ்வப்போது அனுப்புவதற்கு இதில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கடல் கடந்த தீவுகளில் விசேட கடமைகளை மேற்கொள்ளவும் விடுமுறை காலங்களில் இது தொடர்பான முக்கிய கருத்தரங்குகளை நடத்தவும் நடவடிக்கை எடுக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. தற்போது வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் சாதாரணதரத்துக்கான பெறுபேறுகளை உயர்த்துவதற்குச் சாதகமாக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் போன்று தீவுப்பகுதியிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தீவுப் பகுதியில் உள்ள சாதாரண தர வகுப்புக்களைக் கொண்ட 28 பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட ஏனைய பாடசாலைகளின் அதிபர்களும் கலந்து கொண்டனர். (ம-7)

### சமாதான நீதிவான்கள் சத்தியப் பிரமாணம்

திருகோணமலை, மே 24

மூதூர் குமாரசாமி வித்தியாலயத்தின் ஆசியரும், மூதூர் கத்தீப் மார்க்கச் சங்கத்தின் தலைவருமான மூதூர், ஆஸிம்நகரைச் சேர்ந்த மௌலவி நிஸார் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் திருகோணமலை மாவட்ட நீதிவான் முன்னிலையில் இவர் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இதே வேளை மூதூர் ஜாயா வீதியைச் சேர்ந்த நஜாத் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-40)

## வில்லியம் ஒல்டின் உருவச்சிலை சேதம்



மட்டக்களப்பு,மே 24

மட்டக்களப்பு பொது நூலகத்துக்கு முன்பாக நிறுவப்பட்டுள்ள அருட்தந்தை வில்லியம் ஒல்டின் உருவச் சிலை நேற்று புதன்கிழமை சேதமாக்கப்பட்டுள்ளது என்று புளியந்தீவு மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குரு எஸ்.எஸ்.டெரன்ஸ் தெரிவித்தார்.

குறித்த சிலையில் கை மற்றும் கையிலிருந்த விளக்கு ஆகியன சேதப்படுத்தப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

தகவல் ஒன்றையடுத்து குறித்த சிலை நிறுவப்பட்டுள்ள இடத்துக்குச் சென்று பார்த்தபோது மேற்படி உருவச்சிலை சேதப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டேன் என்று அவர் தெரிவித்தார்.

1816 ஆம் ஆண்டு மட்டக்களப்புக்கு வருகை தந்த ஐரோப்பிய நாட்டவரான அருட்தந்தை ரட்ரெவவில்லியம் ஒல்ட் மட்டக்களப்பு மெதடிஸ்த் மத்திய கல்லூரியை உருவாக்கியதுடன் அருட்பணிகளிலும் ஈடுபட்டு வந்தவர். இவரின் நினைவாக 2001 ஆம் ஆண்டு மட்டக்களப்பு பொது நூலகத்துக்கு முன்பாக உருவச்சிலை நிறுவப்பட்டிருந்தது.

இதேவேளை, மட்டக்களப்பு மற்றும் ஆரையம்பதி ஆகிய பிரதேசங்களில் நிறுவப்பட்டிருந்த ஐந்து சிலைகள் இனந்தெரியாத [illegible] குறிப்பிடத்தக்கது.(ச)

### போட்டியில் முதலிடம்

கிழக்கு மாகாண தமிழ் மொழி தினப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் 158 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தினைப் பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண தமிழ் மொழி தினப்போட்டி கடந்த 20, 21 திகதிகளில் கோணதிருமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்றது.

இதில் மட்டக்களப்பு மாவட்டம் 158 புள்ளிகளையும், திருகோணமலை மாவட்டம் 136 புள்ளிகளையும் அம்பாறை மாவட்டம் 130 புள்ளிகளையும் பெற்றுள்ளது.

இந்தப்போட்டியில் கிழக்கு மாகாணத்தின் மூன்று கல்வி மாவட்டங்களில் இருந்தும் 13 கல்வி வலயங்களுக்குட்பட்ட 80 பாடசாலைகளின் போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

போட்டியில் பங்குபற்றிய 13 வலயங்களுக்குள் 91 புள்ளிகளைப் பெற்று திருகோணமலை வலயம் முதலாமிடத்தையும், 87 புள்ளிகளைப் பெற்று மட்டக்களப்பு வலயம் இரண்டாமிடத்தினையும் 67 புள்ளிகளை [illegible] கல்வி வலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளன.

### வைத்தியசாலைக்கு உபகரணத் தொகுதி

திருகோணமலை, மே 24

மூதூர் தள வைத்தியசாலைக்குப் பல வருடகாலமாகக் கோரப்பட்டு வந்த உபகரணத் தொகுதிகள் 40 லட்சம் ரூபாய் செலவில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் மூலமாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

பிரசவ விடுதி, அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு என்பவற்றுக்கான சிகிச்சை உபகரணங்கள் இன்றிப் பல்வேறு சிரமங்களை வைத்தியசாலை வட்டாரங்கள் எதிர்கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச-40)

## குளங்களுக்கு அருகில் குடியிருப்புக்கள் வவுனியாவில் வெள்ள அபாயம்

நெளுக்குளம்,மே 24

வவுனியாவில் குளங்களுக்கு அருகில் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளதால் மழைகாலத்தின் போது வெள்ளத்தினால் பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

வவுனியாவில் அண்மைக்காலமாக இடப்பெயர்வுகளுக்கு பிற்பாடு பண்டாரிக்குளம், குடியிருப்புகுளம், மகாறம்பைக்குளம், திருநாவற்குளம், பட்டாணிச்சூர்குளம் ஆகிய வவுனியா நகரை அண்மித்த குளங்கள் உட்பட பல குளங்களுக்கு அருகில் வீடுகள் கட்டப்பட்டு பொதுமக்கள் வசித்து வருவதனால் குளங்கள் மூடப்படும் அபாயமும் தொடர்ச்சியான மழைகாலங்களில் நீர் வழிந்தோடும் வாய்ப்புக்கள் அற்று நீர் குடியிருப்புக்களில் தேங்கி வெள்ளப்பெருக்கு ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. வவுனியா மாவட்டத்தில் போருக்குப் பின்னர் சில கால்வாய்கள் புனரமைக்கப்பட்டிருந்தாலும் குளங்களுக்கு செல்லும் கால்வாய்க்கு இடையில் குடியிருப்புக்கள் அமைந்துள்ளன. தேர்தலில் தாம் வெற்றி இலக்கை அடைய வேண்டும் என்ற இலக்கில் அவசர அவசரமாக சில குளங்களுக்கு அருகில் கட்சிகள் பொதுமக்களுக்கு காணிகள் வழங்கியுள்ளனர். இலவசமாக காணிகளைப் பெற்றவர்கள் குளங்களை மூடி குடியிருப்புக்களை அமைத்துள்ளனர்.

**வவுனியா நகரை அண்மித்த குளங்கள் உட்பட பல குளங்களுக்கு அருகில் வீடுகள் கட்டப்பட்டு பொதுமக்கள் வசித்து வருவதனால் குளங்கள் மூடப்படும் அபாயம்.**

இவ்வாறான குடியிருப்புக்கள் அதிகரித்துள்ள போதும் குளங்கள் அகழ்ந்து பெருப்பிக்கவோ குடியிருந்த மக்களை அகற்றவோ சம்பந்தப்பட்ட தரப்பினர் முனையாது இருப்பது எதிர்காலத்தில் வெள்ள அபாயத்திற்கு வழிவகுக்கும். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நல்லிணக்கம் சார்ந்த நடவடிக்கையாக இருக்கட்டும்

தங்களை விடுதலை செய்யக் கோரி சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அவசரமாக ஓர் அறிக்கையை வெளியிட்டு சிறையில் வாடும் கைதிகளுக்கு உறுதிப்பாடொன்றை வழங்குமாறும் வற்புறுத்தியிருந்தார்.

இது ஓர் அவசரமும் அவசியமுமான விடயம் என்பதால் தான் அரசு காத்திரமான உறுதிப்பாடொன்றை வழங்க வேண்டும் என்று சம்பந்தன் கோரினார். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளில் சிலர் மயக்க நிலைக்குச் சென்றுள்ளார்கள், அவர்களைச் சென்று பார்த்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்ட போதும் உடல் நிலை மோசமடைந்துள்ள கைதிகளும் கூட உண்ணாவிரதத்தைக் கைவிட மறுத்துள்ளனர். சிறையில் கிடந்து வாடுவதைவிட உண்ணாவிரதம் இருந்து உயிரை மாய்த்துக் கொள்ள அவர்கள் துணிந்துவிட்டார்கள் என்பதையே இது காட்டுகின்றது.

இவர்களை உடனடியாக உண்ணாவிரதத்தைக் கைவிடச் செய்வதற்கு அரசு ஓர் உறுதிப்பாட்டை வழங்க வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர் கேட்டிருப்பது நீதியும் நியாயமுமான ஒரு கோரிக்கை.

ஆனால் அரச தரப்பில் இருந்து உடனடியாக ஆறுதல் அளிக்கும் பதில் கிடைத்ததாகத் தெரியவில்லை. இதில் மூன்று அமைச்சுக்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் மறுநாள் (நேற்று) பதில் அளிப்பதாக அமைச்சர் சிறிபால டி சில்வா கூறியிருந்தார். அவர் என்னவிதமான பதிலை வழங்கினார் என்பது இந்தப் பத்தியை நாம் எழுதி முடிக்கும் வரை தெரியவரவில்லை.

அடிக்கடி நாம் சுட்டிக்காட்டி வந்திருப்பதுபோல் இது ஒரு மனிதாபிமான விடயம். மனிதநேயத்துடன் இதனைக் கையாள்வதற்கு அரசு முன்வரவேண்டும். இதில் அரசியல் இலாபத்துக்கு இடமில்லை. கைதிகளுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் எழுப்புவதால் கைதிகளின் விடுதலை மூலம் வரக்கூடிய நல்ல பெயர் கூட்டமைப்புக்குச் சென்றுவிடுமே என்று அரசோ வேறு எவருமோ சிந்திப்பார்களானால் அது சிறுபிள்ளைத்தனமாகும். மாறாக இந்த விடயத்தில் அரசு கரிசனை எடுத்து அவர்களின் விடுதலையை உறுதி செய்யுமானால் அரசு மீதான அபிப்பிராயமே மேலோங்கும். உலகக் கவனத்தையும் ஈர்க்க முடியும். நல்லிணக்கம் சார்ந்த நடவடிக்கையாகவும் பார்க்கப்படும்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்துகொள்ளும் படி கூட்டமைப்பினரை நச்சரித்து வரும் அரச தரப்பினர் அவர்களின் இந்தக் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை எடுத்தால் அவர்களை உற்சாகப்படுத்தியதாகவும் அரசு கருதிக் கொள்ளலாம்.

எதுவானாலும் சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகளின் விடுதலையைக் கோரி இன்று வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் "இந்தக் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதியும் அமைச்சர்களும் கடந்த காலத்தில் வழங்கியிருந்த உறுதி மொழிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. கைதிகளில் பலர் அங்கவீனமுற்றவர்களாக உள்ளனர். பெண்கள் பலர் திருமணம் முடித்து குழந்தைகள் உள்ளவர்களாக சிறையில் வாடுகின்றனர். குடும்பப் பொறுப்பை சுமக்க வேண்டிய பல இளைஞர்கள் சிறைகளிலேயே அடைபட்டுக்கிடக்கின்றனர். எந்தவித விசாரணைகளும் இன்றி தமிழ் அரசியல் கைதிகளை சிறைகளில் அடைத்து வைத்திருப்பதனால் அவர்களது முழுவாழ்க்கையுமே அழிந்து சின்னாபின்னமாகியுள்ளது. போர் முடிந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இந்தக் கைதிகளின் விடுதலை பற்றி அரசு சிந்திக்காமல் இருப்பதானது வேதனைக்குரியதும் கண்டனத்துக்குரியதுமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இன்று நடைபெறும் சத்தியாக்கிரகத்தில் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், கைதிகளின் பெற்றோர், உறவினர்கள், காணாமல்போனோரின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் பொதுமக்களும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் போராட்டம் இன்றோடு முடிவடைந்து விடக்கூடாது. அரசு திர்க்கமான ஒரு முடிவை அறிவிக்கும் வரை வெவ்வேறு வடிவங்களில் இந்தக் கோரிக்கையை கூட்டமைப்பு கொண்டு நடத்துவது அவசியம்.

இது உயிர்களோடு சம்பந்தப்பட்ட விடயம். உயிரை இழந்து விட்டால் திரும்பப் பெற இயலாது என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழ் இனம் எத்தனையோ பெறுமதிமிக்க உயிர்களை இழந்து நிற்கின்றது. இனியும் இழப்புக்கு இடமில்லை.

இந்த இளைஞர்களின் விடுதலை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் மகிழ்ச்சியடைவதாய் இருக்கும். அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தி அவர்கள் செய்த குற்றம்தான் என்ன என்பதை நிரூபித்துத் தண்டனை வழங்க வேண்டும். இல்லையெனில் இது வெறும் பழிவாங்கல்கள் நடவடிக்கையாகவே பார்க்கப்படும்.

# நெடுந்தீவில் 9 வருடங்களாக கலாசார உத்தியோகத்தர் இல்லை

யாழ்ப்பாணம், மே 24

நெடுந்தீவு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடம் சுமார் 9 வருடங்களுக்கு மேலாக நிரப்பப்படாதுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் இந்தப் பிரதேசத்தின் கலாசார விழுமியங்கள் அழிவடையும் நிலையில் காணப்படுவதாகவும் இதனை நிவர்த்தி செய்யும் முகமாக உடனடியாக கலாசார உத்தியோகத்தரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் புராதன ஆலயங்கள், கோட்டைகள், பிரசித்தி பெற்ற பெருக்கு மரங்கள், சுண்ணாம்புக் குகைகள், தேவாலயங்கள் என்பன காணப்படுகின்றன. அவற்றைப் பாதுகாக்க வேண்டியது அனைவரது கடமையும் ஆகும்.

**மேலதிகமாக நியமிக்கப்பட்டவர்களில் ஒருவரையாவது இந்தப் பிரதேச செயலகத்துக்கு நியமித்திருக்கலாம் என நெடுந்தீவு மக்கள் அங்கலாய்க்கின்றனர்.**

அண்மையில் வழங்கப்பட்ட கலாசார உத்தியோகத்தர்களுக்கான நியமனத்தின் போதும்கூட அரசியல் தலையீடு காரணமாக இந்தப் பகுதிக்கான நியமனம் தடுக்கப்பட்டுள்ளது. இங்கு கலாசார உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டவரும் அரசியல் செல்வாக்குக் காரணமாக வேறு இடத்துக்கு மாற்றம் பெற்றுவிட்டார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி, காரைநகர் மற்றும் வவுனியா ஆகிய பிரதேச செயலகங்களில் ஏற்கனவே ஒருவர் இருக்கும் போதும் மேலதிகமாக தற்போது வழங்கப்பட்ட நியமனத்தில் மற்றொரு கலாசார உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மேலதிகமாக நியமிக்கப்பட்டவர்களில் ஒருவரையாவது இந்தப் பிரதேச செயலகத்துக்கு நியமித்திருக்கலாம் என நெடுந்தீவு மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

எதிர்காலங்களிலாவது அரச தலையீடுகளை விடுத்து நேர்மையான முறையில் நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும் இது தொடர்பாக அரச உயர்மட்டத் தலைவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்ட போதும் எந்த விதமான தீர்வும் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது. (ம-1)

# வடக்கில் தொழில் நீதிமன்றம்: நீதி அமைச்சிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 24

வடமாகாணத்தில் தொழிலாளர்களின் வசதி கருதி தொழில் நீதிமன்றம் ஒன்றை அவசரமாக ஆரம்பித்து வைப்பது குறித்து நீதி அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்புவது என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் தொழில் சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான சமூக கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாணப் பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த சமூக கலந்துரையாடலில் 30 இற்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தொழில் நீதி மன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இந்தக் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

இந்தத் தொழில் நீதிமன்றத்தை ஆரம்பிப்பது தொடர்பில் உடனடியாகவே நீதியமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கான பதிவேடுகளைச் சரியான முறையில் கையாள்வது குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. (த-17)

# கூட்டுறவுத் துறையில் அங்கத்தவரை இணைக்க விழிப்புணர்வுச் செயற்பாடு

யாழ்ப்பாணம்,மே 24

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கூட்டுறவுத்துறையில் இந்த ஆண்டு புதிய அங்கத்தவர்களை இணைப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் புதிதாக 20 ஆயிரம் அங்கத்தவர்களை இணைக்கும் திட்டம் கடந்த 2011 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதில் பெரும்பாலான சங்கங்கள் அக்கறை காட்டவில்லை.

கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாகப் புதிதாக உறுப்பினர்களை இணைத்து சங்கங்களின் அபிவிருத்தியை மேலும் அதிகரிக்க இந்த ஆண்டிலும் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கெனக் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கும் சங்க நிர்வாகம் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கென சங்கத்தின் ஒவ்வொரு கிளைகளிலும் புதிய கிளைக்குழு உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளர்கள் ஆர்வம் காட்ட வேண்டும்.

கூட்டுறவுத்துறை தற்போது ஓரளவு முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. அதனை இன்னும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்-என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# கட்சியைப் பலப்படுத்த ஐ.தே.க. நடவடிக்கை

கொழும்பு,மே 24

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனது கட்சியைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சி மும்முரமாக ஈடுபட்டுவருகின்றது. பிரதேச ரீதியாக இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்குக் கிழக்கில் ஓரிருவரே அமைப்பாளர்களாகச் செயற்பட்டு வரும் நிலையில் பிரதேச ரீதியாகக் கட்சியைப் பலப்படுத்துவதற்கு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் முதற்கட்டமாகப் பிரதேச ரீதியாக அமைப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது. அதே நேரத்தில் கிழக்கில் மாவட்ட அமைப்பாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர். (ம)

# சாதாரணதர மாணவர்களுக்கு சமய பாட வழிகாட்டல் கையேடு

தென்மராட்சி,மே 24

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் தென்மராட்சி கல்வி வலய சைவ சமய பாட ஆசிரிய ஆலோசகரால் தயாரிக்கப்பட்ட சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான சைவ சமய பாட கற்றல் கையேடுகளை வெளியிட்டு வைக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவிற்கு முதன்மை விருந்தினராக [illegible] பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர்.

சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள வலயத்தைச் சேர்ந்த ஆயிரத்து 200 மாணவர்களுக்கு சைவசமய பாட கற்றல் கையேடு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் அங்கத்தவர்களின் பங்களிப்பு மற்றும் கல்வி புலமைப் பரிசில் நிதி ஆகியவற்றின் மூலம் 100இற்கு மேற்பட்ட வறிய மாணவர்களுக்கு மாதாந்தம் கல்வி நிதி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் சாதாரணதரப் பரீட்சையில் சைவ சமய பாடசித்தி வீதம் 95ஆக இருந்த போதிலும் அதனை 100 வீதமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறப்படுகிறது.

பரீட்சை சித்தி வீதம் குறைவடைந்துள்ள பாடங்களின் உதவிக் கல்விப் பணிப்பாளர்களும், ஆசிரிய ஆலோசகர்களும் இவ்வாறான கையேடுகள் வெளியிடுவதன் மூலம் சிறந்த பரீட்சைப் பெறுபேற்றினை பெறமுடியுமென வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

சமய பாட ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம் இந்தக் கையேட்டை தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30ஆசிரியர்களின் சம்பளம் நிறுத்தம் அவர்களின் தவறே காரணம்: வலயம்

## இவ்வாறு கூறுகிறார் துணுக்காய் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே 24

பலமுறை அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதிலும் தமது சுயவிவரக் கோவையைப் பூர்த்தி செய்வதற்குரிய ஒத்துழைப்பை வழங்கத் தவறிய ஆசிரியர்களின் சம்பளமே தற்போது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் துணுக்காய் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன்

துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த சுமார் 30 ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாமை தொடர்பாகக் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

போர் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. போரின் போது ஆவணங்கள் தொலைந்து போன ஆசிரியர்களுக்கு அவற்றைப் பெற்றுத் தருவதற்குப் போதிய அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

பலர் இதில் அக்கறை செலுத்தியதுடன் உரிய ஆவணங்களையும் பெற்றுத் தந்து அவர்களின் சுய விவரக் கோவையைப் பூர்த்தி செய்வதற்கு ஒத்தாசை வழங்கியுள்ளனர். ஆனால் சுமார் 30 ஆசிரியர்களின் கோவைகள் பூர்த்தியாகவில்லை

''இவர்களுக்குக் கடந்த மாதம் 25 ஆம் திகதி சுய விவரக் கோவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஆவணங்களைப் பெற்றுத்தருமாறு இறுதி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் இதனைச் செய்யவில்லை. சம்பளத்தை மட்டுமே எதிர்பார்க்கின்றனர்.

தொடர்ந்தும் சுயவிவரக் கோவைகளை பூர்த்தி செய்யாமல் இருப்பது பெரும் பாதகத்தை ஏற்படுத்துவதோடு விசாரணைகளுக்கும் வழிவகுக்கும். குறிப்பாக விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய இலக்கத்தைப் பெறுவது அவசியமாகவுள்ளது. இதில் மேலும் காலம் தாழ்த்தினால் பாதிக்கப்படப் போவது இந்தக் குறிப்பிட்ட ஆசிரியர்களே'' என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்ததார்.

இதேவேளை இந்தக் குறிப்பிட்ட ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்படாமை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையான கண்டனத்தைத் தெரிவிப்பதாக அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த கால இறுதிப் போரின் போது மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதியின் ஆசிரியர்கள் பலரின் சுய விவரக் கோவைகள் தொலைந்துள்ளன. இந்த விடயத்தை வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரின் கவனத்துக்கு எமது சங்கம் கொண்டு வந்தது. சுயவிவரக் கோவை தொலைந்த ஆசிரியர்கள் அவற்றைப் பெறுவதற்கு மாற்று ஏற்பாடு செய்யும்படி கேட்டிருந்தோம். எனினும் அவற்றை செய்யாமல் ஆசிரியர்களின் சம்பளத்தை வழங்காது தடுப்பது எந்த விதத்திலும் நியாயமானதல்ல எனத் தெரிவித்தார்.

மேலும் நடமாடும் சேவை மூலம் ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது சங்கத்தின் வேண்டுதலாகும்.

அத்துடன் சம்பளத்தை உடனடியாக ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம் எனவும் அவர் - மேலும் தெரிவித்தார்.

(க-03)

# கேதீச்சரம் பெருந்திருவிழா நாளை ஆரம்பம்



மன்னார்,மே 24

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் பெரும் திருவிழா நாளையதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றப் பெருவிழாவுடன் ஆரம்பமாகவுள்ளதாக ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் 10.20 மணிவரை கொடியேற்றத் திருவிழா இடம்பெறுமெனவும், இரவுத் திருவிழா நடைபெறுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

திருவிழாவின் ஒன்பதாம் நாளாகிய ஜூன் 02 ஆம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவம் இடம்பெறும். அடுத்த நாள் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், இரவு கொடி இறக்க நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

நேரில் வரும் அடியவர்கள் பால், தயிர், பழவகை, பூசைக்குரிய திரவியப் பொருள்களை எடுத்துவருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் 10 நாள்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் 13 ஆண்டுகள் பூசை நிகழ்வுகள் தடைபட்டதுடன் தற்போது பெருந்திருவிழா இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# நலன்புரி பாடசாலை குறைகளை அகற்றுவதற்கு அமைச்சர் பணிப்பு

வவுனியா,மே 24

வவுனியா மெனிக்பாம் நலன்புரிப் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை உடன் நிவர்த்தி செய்யுமாறு மீள்குடியேற்ற அமைச்சர் எம்.எச்.குணரத்ன வீரக்கோன் அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரின் இணைப்புச் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கதிர்காமர் வித்தியாலயத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை, வகுப்பறைச் சீர்திருத்தம் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பாக அண்மையில் நலன்புரி முகாமுக்கு வருகை தந்த மீள்குடியேற்ற அமைச்சரிடம் வித்தியாலய அதிபர் கடிதம் மூலம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனை அடுத்தே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் காணப்படும் குறைபாடுகளை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உடன் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இந்தப் பணிப்புரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

# 6 மாத கால அவகாசம் கேட்கிறார் அரச அதிபர்

எனக்கு ஆறுமாத காலம் அவகாசம் வழங்குங்கள். அதன் பின்னர் எனது நடவடிக்கை தொடர்பாகத் தீர்மானியுங்கள்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வவுனியா மாவட்டத்தின் 34 ஆவது அரச அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்ட எம்.கே.பந்துல ஹரிச்சந்திர. கடந்த 18 ஆம் திகதி வவுனியா செயலகத்தில் பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின்னர் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''நான் உங்களில் ஒருவன். நான் உங்களுடன் இணைந்து சேவையாற்றவே வந்துள்ளேன்'' என்றும் தெரிவித்தார்.

வவுனியாவில் ஒன்பது தமிழ் பேசும் அரச அதிபர்களின் பின்னர் பத்தாவதாக நியமிக்கப்பட்டவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வவுனியா அரச அதிபராகக் கடமையாற்றிய திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் மட்டக்களப்புக்கு இடமாற்றமாகிச் சென்றுள்ளார்.

இதேவேளை மன்னாருக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-402)



வவுனியாவில் தனியார் பஸ்களை நிறுத்தும் தரிப்பிடம் துரிதகதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. (421)

# மக்களை வதைக்கும் சேனைப் புலவு உள்வீதிகள்

நெடுங்கேணியிலுள்ள சேனைப்புலவுக் கிராமத்தின் உள்வீதிகள் சில புனரமைக்கப்பட்டாத நிலையில் மோசமாகக் காட்சியளிப்பதால் அப்பகுதி மக்கள் பெரும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராம மக்கள் போருக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ள போதிலும் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். இதில் மோசமான வீதிகள் இவர்களைப் பெரும் சிரமங்களுக்கு ஆளாக்கி வருகின்றன.

யானைகள் மக்களைத் துரத்தும் போது ஓடித் தப்புவதற்குக்கூட இந்த வீதிகள் ஒத்துழைப்பதில்லை. அண்மையில் கூடக் காட்டு யானையால் தாக்கப்பட்டு ஒருவர் இங்குள்ள வீதியொன்றில் உயிரிழந்துள்ளார்.

எனவே இங்கு வாழும் மக்களின் அவல நிலையை உணர்ந்து இங்குள்ள உள் வீதிகளைப் புனரமைத்து வழங்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-435)

# அபிவிருத்திப் பணிகளை எதிர்நோக்கும் பாடசாலை

வேப்பங்குளம்,மே 24

வவுனியா கல்நாட்டியகுளம் அ.த.க பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளை மேலும் மேம்படுத்த வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையின் சுற்றுவட்ட வேலிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. மேலும் கட்டட வேலைகளும் மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன. பாடசாலையின் வேலிகள் சீராக அமைக்கப்படாததால் இரவு வேளைகளில் கால்நடைகளின் தங்குமிடமாகப் பாடசாலை மாறியுள்ளது. இதனால் காலையில் பாடசாலை ஆரம்பிக்கும் போது பல்வேறு சிரமங்கள் தோன்றியுள்ளன.

மேலும் பாடசாலையின் உட்பகுதியிலும் கால்நடைகள் அசிங்கப்படுத்தி வருகின்றன. இதேவேளை வவுனியாவிலுள்ள சில கிராமப் பாடசாலைகளில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருப்பதை அவதானிக்க முடிந்தது (க-421)

# ஆங்கில தினப் போட்டி

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்டப் ஆங்கில தினப் போட்டிகள் இன்று முதல் இடம்பெறவுள்ளன.

புதுக்குடியிருப்புக் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் இன்று வியாழக்கிழமை கைவேலி வித்தியாலயத்திலும், கரைத்துறைப்பற்று கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலும், இடம்பெறவுள்ளதாக முல்லைத்தீவு வலய ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.செல்வராசா அறிவித்துள்ளார்.

(க-400)

# பேட்டுக் கோழிக்காக சிறுவனைத் தாக்கிய சேவல்

வவுனியா,மே 24

தனது வீட்டில் மீன்பிடி வலையில் சிக்கித் துடித்த பேட்டுக் கோழியைக் காப்பாற்ற முயற்சித்த சிறுவன் சேவலினால் கடுமையாகத் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தான்.

இந்த விசித்திரமான சம்பவம் மன்னார் மூன்றாம் பிட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

மன்னார் மூன்றாம் பிட்டி அ.த.க.பாடசாலையில் தரம் 3 இல் கல்விபயிலும் மாதுசன் என்பவரின் வீட்டில் மீன்பிடி வலையில் சிக்கிய பேட்டுக் கோழி ஒன்று அதிலிருந்து மீள முடியாமல் துடித்தது. இதனை அவதானித்த மாணவன் அந்தக் கோழியை வலையில் இருந்து விடுவிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தான்.

அப்போது சிறிது தூரத்திலிருந்து இதனை அவதானித்த சேவல் ஒன்று மாணவன் கோழியை ஏதோ துன்புறுத்துவதாக எண்ணிக் கோபாவேசத்துடன் விரைந்து வந்து சிறுவனைத் தனது அலகால் கடுமையாகக் கொத்தி காயப்படுத்தியது.

இதனால் சிறுவனுடைய கால் மற்றும் கைப் பகுதியில் சிறு காயங்கள் ஏற்பட்டதுடன் சொண்டுப்பகுதியில் (உதடு) பெரிய காயம் ஏற்பட்டு மன்னார் மூன்றாம்பிட்டி வைத்தியசாலையில் தையல் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-400)

# விஞ்ஞான ஆசிரியர் செயலமர்வு

வவுனியா, மே 24

முல்லைவலயப் பாடசாலைகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளைய தினம் வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இரண்டாம் தவணைக்கான வினாப்பத்திரம் தயாரித்தல் தொடர்பாக இதில் கலந்துரையாடவுள்ளதால் தரம் 6 தொடக்கம் 11 வரையான விஞ்ஞான பாடம் கற்பிக்கும் சகலரையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.ராஜா கேட்டுள்ளார்.

(க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சிக்கு தீ அணைப்புப் பிரிவு தனியாக ஏற்படுத்தப்பட வேண்டும்

## நெல்லியடி கடை எரிந்த சம்பவத்தை அடுத்துக் கோரிக்கை

வடமராட்சி,மே 24

வடமராட்சிக்குத் தனியாக தீ அணைப்புப்பிரிவு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெல்லியடியில் மின் ஒழுக்கால் நேற்று முன்தினம் கடை ஒன்று தீப்பிடித்த சம்பவத்தை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகள், கரவெட்டி, பருத்தித்துறைப் பிரதேச சபைகள் ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களும் ஒருங்கிணைந்து தீ அணைப்புப் பிரிவை ஏற்படுத்தினால் பெரும் நன்மை கிடைக்கும்.

நெல்லியடி வர்த்தக சங்கத்தின் உபதலைவர் மு.சுந்தரலிங்கம் தீ விபத்துசம்பவ இடத்துக்குச் சமூகமளித்திருந்த கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசுவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

நெல்லியடி நகர்ப்பகுதியில் முன்னரும் பல தடவைகள் கடைகள் சில மின் ஒழுக்குகளால் தீ விபத்துக்குள்ளாகியிருந்தன.

அவை பெரும் இழப்பை ஏற்படுத்தவில்லை. இந்த விபத்தோ பெரிய சேதத்தையும், நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

தீ விபத்து ஏற்பட்டு அரை மணி நேரத்துக்குப் பின்னரே சபைகளின் தண்ணீர் பவுசர்கள் வந்து சேர்ந்தன. அது தவிர்க்க முடியாது தான். ஆனால் தீயணைப்புப் பிரிவு இருந்தால் தாமதமின்றி வந்து தீயை அணைத்திருக்க முடியும்.

இந்தப் பெரிய விபத்து தீயணைக்கும் பிரிவின் சேவையை அவசியமாக உணர்த்தி நிற்கின்றது.

தீயணைக்கும் பிரிவு ஒன்றை வடமராட்சிப் பிரதேசத்திற்கென தனியாக அமைத்தால் நெல்லியடி நகர வியாபாரிகளுக்கு மாத்திரமல்ல பருத்தித்துறை, மந்திகை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி போன்ற பகுதிகளும் நன்மையடைய முடியும்.

இந்த முயற்சிகளுக்கு நெல்லியடி வர்த்தகர் சங்கம் தன்னாலான ஒத்துழைப்புகளை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றது என்று நெல்லியடி வர்த்தக சங்க உபதலைவர் இந்தக் கலந்துரையாடலின் போது கூறினார். (ம-8)

### மின் இணைப்புக்களை பராமரிக்க கோரிக்கை

நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள மின் இணைப்புகளை இலங்கை மின்சாரசபை அடிக்கடி கண்காணித்து, பராமரிக்க வேண்டும், இதனால் மின் ஒழுக்குகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று நெல்லியடி வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது. கடைகள் நெருக்கமாக உள்ள நகர்ப்பகுதியில் இத்தகைய நடவடிக்கைகள் அவசியமானது என சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதே வேளை தீயணைப்புக்கு உதவிய பொது மக்கள், வர்த்தகர்கள், பொலிஸ், இராணுவம் மற்றும் பருத்தித்துறை நகரசபை மற்றும் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கும் வர்த்தக சங்கம் நன்றி கூறியுள்ளது. (ம-8)

## கைதடி தொழில் பூங்காவில் சமையலறை அமைக்க நிதி

யாழ்ப்பாணம்,மே 24

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கைதடி தொழிற் பூங்காவுக்கு சமையல் அறை ஒன்றை அமைப்பதற்கு சமூக சேவைகள் திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகச் சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஐந்து லட்சம் ரூபா நிதி மூலம் புதிதாக சமையல் அறை விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்தத் தொழில் பூங்காவில் இதுவரை காலமும் சமையல் அறை இல்லாமல் அங்கு தங்கியிருந்த விழிப்புலனற்றோர் பெரும் சிரமப்பட்டு வந்தனர்.

இது தொடர்பாக சமூக சேவைகள் திணைக்களத்திடம் எமது சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது. இதனையடுத்து இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது-என்றார். (த-17)

## குப்பைகளைப் பசளையாக்க சாவகச்சேரியில் நிலையம்

தென்மராட்சி,மே 24


சாவகச்சேரி நகரசபையால் தினமும் சேகரிக்கப்படும் குப்பைகளை இயற்கைப் பசளையாக்கும் தொழில்நுட்ப பரிகரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிலையம் அமைக்க சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சின் திண்மக் கழிவு முகாமைத்துவப் பிரிவினர் 6 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் உள்ள கண்ணாடிப்பிட்டி வெளியில் இந்த நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த நிலையத்துக்கு செல்வதற்கான வீதி ஒரு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

நகர்ப்பகுதியில் தினமும் சேகரிக்கப்படும் குப்பைகளை இந்த நிலையத்தில் இயற்கைப் பசளைகளாக்கி இந்தப் பகுதி விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விநியோகிக்க நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ம-9)



இலங்கைப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவலகங்கள் அமைச்சின் பணிப்புரைக்கு அமைவாக யாழ்.மாவட்டத்தில் உள்ள யாழ்.செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் உதவி அரச அதிபர் பணிமனைகளில் 1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குடியரசு தினக் கொண்டாட்டங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தேசியக் கொடியேற்றுகிறார். ஊழியர்கள் உள்ளனர். (ம-86)

## மூன்று ஆலயங்களில் சிலைகள் திருட்டு

யாழ்ப்பாணம், மே 24

தீவகப் பிரதேசத்தில் ஒரே நாளில் மூன்று ஆலயங்களில் மிகப் பெறுமதி வாய்ந்த சிலைகள் மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டில் ஈடுபட்டோரைப் படிக்க அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா கேட்டுள்ளார்.

கடந்த சில நாள்களில் வேலணை ஆராவத்தை முருகன் கோயிலில் பெறுமதி வாய்ந்த சிலைகள் மற்றும் பொருள்களும் திருடப்பட்டுள்ளன.


அதேபோல அல்லைப்பிட்டி பிள்ளையார் ஆலயத்திலும் அல்லைப்பிட்டி யுவானியார் கிறிஸ்தவ ஆலயத்திலும் சிலைகள், சுருவங்கள் திருடப்பட்டுள்ளன.

இதனால் ஆலய நிர்வாகத்தினர் இந்தச் சம்பவங்களால் கவலையடைந்துள்ளனர். இது தொடர்பான முறைப்பாடுகளையும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-41)

## மல்லாகம் தெற்கு கல்லாரையில் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு

வலி.வடக்கு,மே 24

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மல்லாகம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கல்லாரைப் பகுதி மக்களின் நீண்ட நாள் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தெல்லிப்பழைப் பொலிஸாரால் முடிவு கட்டப்பட்டுள்ளது.



கடந்த வாரம் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக வருகை தந்த கஸ்தூரி ஆராய்ச்சி சிவில் பாதுகாப்புக் குழுவின் குறித்த பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அலுவலர் சாஜன்ட் ராஜபக்ஷவுடன் சென்ற வேளை அந்தப் பகுதி மக்கள் தமது குடிதண்ணீர் பிரச்சினை சம்பந்தமாக முறையிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன், கிராம அலுவலரும் பகுதிப் பொலிஸ் அலுவலரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக சுமார் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் குழாய்க் கிணறு கல்லாரை வளர்மதி சனசமூக நிலைய முன்றலில் அமைக்கப்பட்டது. அத்துடன் குடிதண்ணீர் விநியோகமும் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தால் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளதாக கிராம அலுவலர் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்சி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லியனகே கமகே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு குழாய்க்கிணறு மூலம் குடிதண்ணீர் பெறும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கிராம அலுவலர் எஸ்.சிவநாதன், சிவில் பாதுகாப்புக்குழுத் தலைவர் எஸ்.முத்துநாயகம் அதிகாரியும் கலந்து கொண்டனர். (ம-86)

## கூரைகளைப் பதம் பார்க்கும் பருவப் பெயர்ச்சிக் காற்று

### மீளக்குடியமர்ந்த மக்கள் சிரமம்

கொழும்புத்துறை மணியந்தோட்டப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் குடிசைகளின் கூரைத் தகரங்கள் தற்போது வீசும் கடும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன. இதனால் அந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே அரையும், குறையுமாக இருந்த இந்தக் குடிசைகளை காற்று மேலும் சேதப்படுத்தியுள்ளது.

குடாநாட்டில் தற்போது பருவப்பெயர்ச்சிக் காற்றுப் பலமாக வீசிவருகிறது. இந்தக் காற்றினால் குடிசைகளின் கூரைப்பகுதிகளே அதிகம் சேதமடைகின்றன.

மணியந்தோட்டம் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் குடிசைகளுக்குக் கூரையாகத் தகரங்களே பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கூரைத் தகரங்களையே தற்போது வீசும் பருவப்பெயர்ச்சிக் காற்று பதம் பார்த்து வருகிறது.

கடற்கரையை அண்டியதாக அமைந்துள்ள குடிசைகளே காற்றினால் அதிகம் சேதத்துக்குள்ளாகின்றன. இதனால் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## சுதுமலையில் பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,மே 24

சுதுமலை மூத்த நயினார் கோயிலை அண்மித்துள்ள வீதி ஒன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சந்திரன் சறோஜாதேவி (வயது-43) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

இது குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4)

## அனுமதி பெற்று கட்டடங்கள் அமையுங்கள்

### காரைநகர் பிரதேச சபைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 24

காரைநகர் பிரதேசத்தில் புதிதாகக் கட்டடங்களை அமைப்பதற்கு முன்னர் பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு சபையின் தலைவர் வே.ஆனைமுகன் வலியுறுத்தியுள்ளார்.

பிரதேச சபையின் அனுமதியைப் பெறாமல் சிலர் கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள் என்பவற்றை அமைத்து வருவதாகச் சபைக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இவ்வாறு அனுமதி பெறாமல் கட்டடங்களை அமைப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணப் பதிவு கட்டாயம் டில்லியில் வருகிறது சட்டம்

டில்லி மாநிலத்தில் வசிப்பவர்கள் அனைவரும் திருமணத்தை முறையாக பதிவு செய்யாவிட்டால் அபராதம் விதிக்கப்படும் என்று டில்லி மாநில அரசு முடிவு செய்துள்ளது.

டில்லி மாநிலத்தில் வசிப்பவர்கள் அனைவருக்கும் திருமணப் பதிவு கட்டாயமாக்கப்படுகிறது. இதற்கான சட்டத் திருத்தம் அடுத்த சட்டசபை கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படவுள்ளது.

திருமணம் நடந்து 60 நாள்களுக்குள் திருமணத்தை பதிவு செய்யாவிட்டால் ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமணப் பதிவைக் கட்டாயமாக்குவது குறித்து மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு டில்லி மாநில அரசு கோரிக்கை வைத்தது.

இதைப் பரிசீலனை செய்த உள்துறை அமைச்சகம் கடந்த வாரம் டில்லியின் கோரிக்கைக்கு பச்சைக் கொடி காட்டியது.

இதைத்தொடர்ந்து இந்து திருமண சட்டத்தில் மாற்றம் கொண்டுவர டில்லி மாநில அரசு முடிவு செய்துள்ளது. இந்த சட்ட திருத்தம் வரவிருக்கும் சட்டசபைக் கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்த சட்டப்படி டெல்லி வாசிகள் அனைவரும் தங்கள் திருமணத்தைக் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும். 60 நாள்களுக்குள் திருமணத்தை பதிவு செய்யாவிட்டால் அவர்களுக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்.

தவறான தகவல் தருபவர்களுக்கு 3 மாத சிறைத் தண்டனை அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மணமகன் அல்லது மணமகள் வசிக்கும் இடம் அல்லது திருமணம் நடந்த இடத்துக்கு அருகில் உள்ள பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். மணமக்களுடன் சாட்சி ஒருவர் பதிவு அலுவலகத்துக்கு வரவேண்டும் என்பனவே மேற்பட்ட சட்ட விதிமுறைகளாகும். (வ)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நிர்ப்பந்தியுங்கள்

## இந்திய அரசுக்கு வைகோ வலியுறுத்தல்



இலங்கைச் சிறைகளில் விசாரணையின்றி வாடும் ஈழத்தமிழர்களை விடுவிக்க இந்திய அரசும், இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

மனிதகுல வரலாற்றில் கொடூரமான இனக்கொலைகளில் ஒன்றாக அண்மைக் காலத்தில் பேரழிவு அவலமாக ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்த, பேரினவாத இலங்கை அரசு, உலகத்தின் கண்களில் மண்ணைத்தூவி உண்மைகளை மூடி மறைத்து வருகிறது.

உலகம் தடை செய்த குண்டுகளை வீசியும், இந்தியா உள்ளிட்ட வல்லரசு நாடுகளின் உதவியால் கிடைத்த ஆயுதங்களைப் பயன்படுத்தியும், குறிப்பாக இடைவிடாத வான்வழித் தாக்குதல் குண்டு வீசியும், லட்சக்கணக்கான தமிழர்களை, இலங்கை அரசு படுகொலை செய்தது.

இலங்கையில் விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் என 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை கைது செய்து, பல்வேறு சிறைகளில் கடந்த 3 ஆண்டுகளாக அடைத்து வைத்துள்ளனர். வெள்ளைக் கொடியுடன் வந்து தங்களை ஒப்படைத்துக்கொண்ட விடுதலைப் புலிகளான நடேசன், புலித்தேவன் போன்றோரை அவர்களை குடும்பத்துடன் கொன்றது இலங்கை இராணுவம். அப்படி வந்தவர்களில் 4,200 இற்கும் மேற்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்ற தகவல்களை, இன்று வரை அறிய முடியவில்லை. அவர்களுள் பெரும்பாலானோர், இராணுவத்தால் கொல்லப்பட்டதாகவே தெரிகிறது.

எவ்வித விசாரணையும் இன்றி 3 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் 234 பேர், எங்களை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். இல்லையென்றால் விடுவிக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி 6 ஆவது நாளாகக் காலவரையற்ற உண்ணாவிரதத்தில் உள்ளனர்.

தமிழ் இனப்படுகொலையின் கூட்டுக்குற்றவாளியான காங்கிரஸ் கட்சி தலைமையிலான இந்திய அரசு, மேலும் மேலும் குற்றச்சாட்டுக்கும், பழிக்கும் ஆளாகாமல், தமிழர்களைச் சிறையில் இருந்து விடுவிக்க, இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்-என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

### தூதர் விவகாரத்தில் இத்தாலி நிர்ப்பந்தம் தரவில்லை

திருவனந்தபுரம், மே 24

இத்தாலிகடற்படையினர் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் இந்தியா மீது இத்தாலி அரசு எந்த நிர்ப்பந்தமும் செலுத்தவில்லை என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

கொச்சிக் கடல் பகுதியில் 2 மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட இத்தாலிக் கடற்படையினர் மீது கடந்த வாரம் கொல்லம் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. மேலும், அவர்களின் பிணை மனுவும் நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டது. இதனால் அதிருப்தி அடைந்த இத்தாலி அரசு, இந்தியாவுக்கான தனது தூதுவரைவாபஸ்பெற்றது. மேலும், ரோமில் உள்ள இந்திய தூதரை அரசு நேரில் அழைத்து விளக்கமும் கேட்டது.

இதுகுறித்து வெளியுறவு துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா டில்லியில் அளித்த பேட்டியில்,

மீனவர்கள் கொல்லப்பட்ட வழக்கில் இத்தாலி கடற்படையிர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பான வழக்கு கேரள நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. தங்கள் படையினரை விடுவிக்க இத்தாலி அரசு இந்தியாவை நிர்ப்பந்திப்பதாகக் கூறுவதில் உண்மையில்லை. - என்றார்.

## என்னைக் கொலை செய்ய மாவோயிஸ்டுகள் சதி

### இவ்வாறு கூறுகிறார் மம்தா

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுக் கட்சி, மாவோயிஸ்ட்டுகளுடன் இணைந்து என்னைக் கொலை செய்ய சதி செய்துள்ளது என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிக்கைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-


இந்தத் திட்டத்துக்கு வடகொரியா, வெனிசுலா, ஹங்கேரி போன்ற வெளிநாட்டு சக்திகள் நிதியுதவி அளித்துள்ளன என்றும் இந்த சதித் திட்டத்தை நிறைவேற்ற உதவுமாறு, பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யுடன் வெளிநாட்டு சக்திகள் பேசி உள்ளன.

மேற்கண்ட சக்திகள் அனைத்தும் சேர்ந்து எனக்கு மரண தண்டனை விதித்துள்ளன. பேஸ்புக் இணையத்தளம், மின்னஞ்சல் வாயிலாக தினமும் என்னைப் பற்றி அவதூறுச் செய்திகளையும், புகைப்படங்களையும், பொய்யான பெயர்களில் வெளியிட்டு வருகின்றனர்-என்று மேலும் தெரிவித்தார். என்னைக் கொலை செய்ய மாவோயிஸ்ட்டுகள் சதி செய்கிறார்கள் - இவ்வாறு கூறுகிறார் மம்தா




# நாட்டின் முக்கிய பிரச்சினைகள் ஊழலும், மாவோயிசமுமே

## மன்மோகன் சிங் கருத்து



ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, இரண்டாவது முறையாக பதவியேற்று, மூன்று ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதையொட்டி, கூட்டணிக் கட்சித்தலைவர்கள் மற்றும் எம்.பி.க்களுக்கு, பிரதமர் மன்மோகன்சிங், விருந்து அளித்தார். இதில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் கடந்த மூன்றாண்டு செயற்பாடுகள் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.

மாவோயிஸம் மற்றும் ஊழல் என்பன இந்திய மத்திய அரசுக்கு இன்னமும் சவாலான இரு முக்கிய பிரச்சினைகளாக இருப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைமையிலான ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மத்தியில் ஆட்சிப்பொறுப்பை ஏற்று மூன்று வருடங்கள் நிறைவடைந்ததை கொண்டாடும் வகையில் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் கூட்ட ணிக் கட்சிகளின் அரசியல் தலைவர் கள் கலந்து கொண்டனர். இதில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்ததாவது:-

வேகமான பொருளாதார வளர்ச்சி மற்றும் தீவிரமாகக் கட்டுப்படுத்தப்பட்டு வரும் வறுமை என்பன மத்திய அர சின் சாதனைகளாக உள்ளன. எனினும் ஊழல் மற்றும் மாவோயிஸ்ட்டுக்கள் சவாலாக இருக்கின்றன.

நாம் அதிகளவு சாதித்துள்ளோம் என்று சொல்வதில் சந்தேகம் இல்லை. எனினும், இன்னமும் அதிகமாகச் செய்யவேண்டியுள்ளது. மக்கள் கோபமடைவதுடன், வெறுப்படையும் முக்கிய காரணியாக ஊழல் இருக்கிறது. ஊழல்வாதிகளுக்கு முன் மாதிரியான தண்டனை கொடுப்பதில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபட உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் - என்றார்.

நிகழ்வில் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி தெரிவித்ததாவது:-

2014 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலைச் சந்திக்க இன்னமும் இரு வருடங்களே உள்ளன. அதற்கு இன்னமும் அதிகமாகத் தயாராக வேண்டியுள்ளது. நாம் வாக்குறுதிகளை மட்டும் கொடுத்துக் கொண்டிருக்கமுடியாது. எமது செயற்பாட்டை கொண்டே மக்கள் நம்பிக்கை கொள்வார்கள் - என்றார். இந்தநிகழ்வில் காங்கிரஸின் மூன்றாண்டு நிறைவையொட்டி நூல் பதிப்பும் வெளியிடப்பட்டது.

இதேவேளை பிரதமர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விருந்துபசார நிகழ்வில், காங்கிரஸ் அரசின் கூட்டணியில் உள்ள மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி, தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகளைத் தேர்தல் ஆணையம் ஆரம்பித்துள்ளது. இதுதொடர்பாக ராஜ்யசபா செயலாளர் மற்றும் சட்டசபைச் செயலாளர்களுடன் தேர்தல் ஆணையாளர் குரேஷி ஆலோசனை நடத்தினார். எதிர்வரும் 30 ஆம் திகதி அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்த உள்ளார்.

தேர்தலுக்கான அட்டவணை ஜூன் இரண்டாவது வாரத்தில் வெளியிடப் [illegible] லின் பதவிக்காலம் ஜூலை 24 ஆம் திகதி முடிவடைகிறது. அதற்கு மறுநாள் புதிய ஜனாதிபதி பதவியேற்க வேண்டும். இதைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகளைத் தேர்தல் ஆணையகம் ஆரம்பித்துள்ளது.


ஜனாதிபதித் தேர்தல் அதிகாரியாக செயற்படவிருக்கும் ராஜ்யசபா செயலாளர் ஜெனரல் வி.கே.அக்னிஹோத்ரி, மாநில சட்டசபை செயலர்கள் உள்பட 50 இற்கும் அதிகமான அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையகம் கடந்த திங்கட்கிழமை ஆலோசனை நடத்தியது. இந்த ஆலோசனை கூட்டத்தில் தலைமை தேர்தல் ஆணையாளர் குரேஷி உட்பட இரண்டு தேர்தல் அதிகாரிகள்கலந்துகொண்டனர். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்டவிதிகளை குரேஷி அதிகாரிகளுக்கு விளக்கினார். ஜூலை 16- 19 ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்த ஆணையம் முடிவு செய்திருப்பதாக டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு ஜூன் இரண்டாவது வாரத்தில் வெளியிடப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுப் படைகள் 2014 இல் ஆப்கானிலிருந்து வெளியேறும்

ஆப்கானிஸ்தானில் அந்நியப் படைகள் தொடர்ந்து இருப்பது எதிர்விளை வைத்தான் தரும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார்.

சிக்காகோ நகரில் நேட்டோ நாடுகளின் மாநாடு நடைபெற்றது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட ஒபாமா, ''எந்த நாடும் தனது இறையாண்மை கேள்விக்குள்ளாக்கப்படுவதைச் சகித்துக் கொள்ளாது. பத்தாண்டுகள் அன்னியப் படைகள் ஒரு நாட்டில் இருப்பது அந்த நாட்டு மக்களிடையே அதிருப்தியையே ஏற்படுத்தும். அவர்களுடைய உணர்வுகளை பாதிக்கக் கூடிய விஷயம் இது. அந்த நாட்டில் அன்னியப் படைகள் வெகு காலம் இருப்பது எதிர் விளை வைத்தான் ஏற்படுத்தும்''- என்றார்.




''இவ்வளவு காலம் சர்வதேசப் பாதுகாப்புப் படை இருந்ததால் தலிபானின் அடித்தளம் தகர்க்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அவர்கள் இன்னும் சக்தி வாய்ந்த எதிரிகளாக இருந்து வருகிறார்கள். நமது வெற்றி மிக வலிமையானது அல்ல.

ஆனால், எல்லாம் சிறப்பாக இருக்கிறது. நமது வேலை முடிந்தது என்று எப்போதுமே கூற முடியாது. ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்புதலைப் பெற்ற சர்வதேசப் பாதுகாப்பு உதவிப் படை 2014இல் ஆப்கானிஸ்தானை விட்டு முற்றிலும் வெளியேறி விடும். ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புக்கு அந்த நாட்டு மக்களே முற்றிலும் பொறுப்பேற்பார்கள். இது நாள்வரை, ஆப்கானிஸ்தானில் நாம் ஈடுபடுத்தி வந்த வளங்களை இனி அமெரிக்காவில் முதலீடு செய்வோம்'' என்று கூறினார்.

ஆப்கானிஸ்தானில் ஐ.நா. பாதுகாப்புப் படை எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்து வரும் நாடுகளின் பெயரைக் குறிப்பிட்டு நன்றி கூறிக் கொண்டு வந்த ஒபாமா, பாகிஸ்தான் பெயரைக் குறிப்பிடாமல் விட்டார். அறுபதுக்கும் மேற்பட்ட நேட்டோ நாடுகளின் தலைவர்கள் அமர்ந்திருந்த வட்ட மேசையில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அல் சர்தாரி அமர்ந்திருந்த போதிலும் அந்த நாட்டின் பெயரை ஒபாமா குறிப்பிடவில்லை.

பாகிஸ்தான் நேட்டோ அமைப்பில் உறுப்பினராக இல்லையென்பது ஒரு புறமிருந்தாலும், ஆப்கான் நடவடிக்கைகளில் உதவி புரியும் இதர நாடுகளின் பெயர்களைக் குறிப்பிட்ட போதிலும் பாகிஸ்தான் பெயர் விடப்பட்டது.

## தீவிரவாதத்தை பாகிஸ்தான் கட்டுப்படுத்த வேண்டும்



வாஷிங்டன், மே 24

தீவிரவாதத்தை ஒழிக்க பாகிஸ்தானின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புத் தேவை என்று ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் ஹர்ஸாய் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற நேட்டோ நேச நாடுகள் மாநாட்டின் இறுதியில் கருத்து வெளியிட்ட அவர்,

ஆப்கானிஸ்தானில் நீடித்த அமைதி நிலவுவதற்குத் தலிபான்களுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். எல்லை கடந்த தீவிரவாதத்துக்கு எதிராகத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றுக்குப் பாகிஸ்தானின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு வேண்டும் என்றார்.

''பாகிஸ்தான் எங்களுடைய அண்டை நாடு. அதனுடன் நல்லுறவு இருக்க வேண்டும். முன் எப்போதையும் விட பாகிஸ்தானுடன் நட்பு மனப்பான்மையுடனும் வெளிப்படையாகவும் பேச்சு நடத்த வேண்டியிருக்கிறது. இதற்காக ஒரு வார காலத்துக்குள் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸாகிலானியை ஆப்கானிஸ்தானுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்திருக்கிறேன்'' என்றும் கூறினார்.

பாகிஸ்தான் பகுதியிலிருந்து தீவிரவாதிகள் செயற்படும் விதத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கிறது என்று தான் கூறி வருவதை மீண்டும் வலியுறுத்திப் பேசினார் ஹர்ஸாய்.

ஆப்கானிஸ்தானை ஒட்டியுள்ள பாகிஸ்தானின் எல்லை மாகாணமான வஸிரிஸ்தானினின் தலைநகர் மிரம்ஷா, ஹக்கானி தீவிரவாத இயக்கத்தினரின் கேந்திரமாக இருக்கிறது என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் கிடையாது. தீவிரவாதிகளுக்குப் புகலிடமாக விளங்கும் வேறு பல இடங்களும் பாகிஸ்தானுக்குள் இருப்பதை அந்த நாட்டு அரசு மறுக்காது.

ஆனால் இந்த விஷயங்களை முன்பு வெளிப்படையாகப் பேச முடிந்ததில்லை. தீவிரவாதம் அதிகரித்து வருவது இரு நாடுகளின் ஸ்திரத்தன்மைக்கும் ஊறு விளைவிக்கும். அமெரிக்காவின் துணையோடு தீவிரவாதத்தை ஒழிக்க முனைய வேண்டும் என்று'' அவர் குறிப்பிட்டார்.


## மாலியின் ஜனாதிபதி மீது தாக்குதல்

ஆபிரிக்க நாடான மாலியின் இடைக்கால ஜனாதிபதியான டியோன் கௌன்டா ட்ராரோ ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இடைகால ஜனாதிபதி பதவியிலிருந்து டியோன்கௌன்டா ட்ராரோ இராஜினாமாச் செய்ய வேண்டுமெனக் கோரி ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட நூற்றிற்கும் மேற்பட்டோர் ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்து அவரைத் தாக்கியுள்ளனர்.

இதன்போது தலையில் காயமேற்பட்ட நிலையில் இடைக்கால ஜனாதிபதி டியோன்கௌன்டா ட்ராரோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் தலையில் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது என வைத்தியாசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



இந்தத் தாக்குதலின் போது பாதுகாப்புப் பிரிவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 3பேர் கொல்லப்பட்டனர் எனவும் மேலும் சிலர் காயமடைந்துள்ளனர் எனவும் ஜனநாயக மீட்புக்கான தேசிய குழுவின் பேச்சாளரான பெக்ரி மரிகோ தெரிவித்துள்ளார்

## நேபாளத்தில் வேலை நிறுத்தம்

நேபாளத்தில் பொதுசன அமைப்புகள் நடத்தி வரும் வேலைநிறுத்தம் நான்காவது நாளை எட்டியுள்ளது. பல இடங்களில் போக்குவரத்தும் முற்றிலுமாகத் தடைப்பட்டது.

இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக பாதிக்கப்பட்டது. புதிதாக அமைக்கப்படும் அரசியலமைப்பில் தங்களுக்கென்று சுயாட்சி பெற்ற மாகாணங்கள் வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேபாள தேசிய பழங்குடியின கூட்டமைப்பு உள்ளிட்ட பல இயக்கங்கள் போராடி வருகின்றன. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இயக்கங்கள் மாவோயிஸ்ட் அமைப்பு சார்ந்தவை என்பதால் வேலைநிறுத்தம் வெற்றி பெற்றுள்ளது.

பல இடங்களில் வாகனங்களை உடைப்பது போன்ற அசம்பாவித சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இதனிடையே இந்த வேலை நிறுத்தம் தொடர்பாகச் சர்ச்சைக்குரிய வகையில் கருத்துத் தெரிவித்துள்ளார் என நேபாள மாவோயிஸ்ட் கட்சித் தலைவர் பிரசண்டாவுக்கு நேபாள காங்கிரஸ் உள்ளிட்ட கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, 'நேபாளத்தில் கூட்டாட்சி முறைக்குத் தடையாக இருப்பவர்களுக்கு எதிரான போராட்டம் இது' என்று பிரசண்டா கருத்துத் தெரிவித்திருந்தார்.



கிழக்கு காசாப்பகுதியில் இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட சன்னி முஸ்லிம் பிரிவு நபர் ஒருவரின் சடலத்தைத் தாங்கி அந்த பிராந்திய மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

## சிறுவனை சுரங்கத்தில் சிறைப்படுத்திய பெற்றோர்

வீட்டிலிருந்த குளிர்சாதனப் பெட்டியை திறந்து பொருள்களை எடுத்த குற்றத்திற்காக 11 வயதான சிறுவனை ஒரு வருடகாலம் கடும் குளிரான அருவருப்பு மிக்க நிலக்கரி கிடங்கொன்றில் சிறைப்படுத்தி வைத்திருந்தனர் எனக் கூறப்படும் அந்தச் சிறுவனின் தாய் மற்றும் வளர்ப்புத் தந்தை ஆகியோரை பொலிஸார் கைது செய் துள்ளனர். இந்தச் சம்பவம் பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது.

பிரிட்டனின் பிளெக்பூல் பகுதியில் யன்னல்களற்ற வெளிச்சமற்ற இந்த நிலக்கரிக் கிடங்கொன்றில் இந்தச் சிறுவன் பல கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளான்.

இந்தச்சிறுவன் அருவருப்பு மிகுந்த அந்த நீலக்கரி சுரங்கத்தில் ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலை வரை அடைத்துவைக்கப்பட்டுள்ளனர் என சமூக சேவையாளர்கள் பிரெஸ்டன் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

ஒரு ஒளி விளக்கு மட்டுமே வைக்கப்பட்டிருந்த மேற்படி சுரங்கத்துக்குள் இந்தச் சிறுவன் நித்திரை கொள்வதற்காக அசுத்தமான மெத்தையொன்று வழங்கப்பட்டுள்ளது. பை ஒன்றையே அவன் தனது போர்வையாகப் பயன்படுத்தியுள்ளான்.

மலசலக்கூடத்தைப் பாவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது, அவன் தனது அறையின் கிழக்குப் பக்க தரையை பயன்படுத்த வேண்டியிருந்தது.

குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து பொருள்களை எடுத்த குற்றத்திற்காக மேற்படி சிறுவன் யன்னல்களற்ற அறையில் ஒருவருடம் சிறைப்படுத்தப்பட்டுள்ளான் என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவன் 11 ஆவது வயதிலிருந்து 12 வயது வரை இவ்வாறு அடைக்கப்பட்டிருந்தார். பொலிஸார் மற்றும் சமூக சேவையாளர்கள் இணைந்து மேற்படி சிறுவனை இந்த நிலக்கரி சுரங்கத்துக்குள் இருந்து மீட்டுள்ளனர்.

இந்தச் சிறுவனின் 40 வயதுக்குட்பட்ட பெற்றோருக்கான தண்டனை அடுத்த வாரம் அறிவிக்கப்படவுள்ளது

## சர்வதேச அரங்கில் உரையாற்ற உள்ளார் சூகி

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கின்ற மியன்மாரின் ஜனநாயகக் கட்சித் தலைவி ஆங் சாங் சூகி சர்தேச தொழிலாளர் நிறுவனத்தின் மாநாடு ஒன்றில் உரையாற்ற உள்ளார்.

1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளிநாடு ஒன்றில் ஆங் சாங் சூகி உரையாற்றவுள்ள முதல் சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சாங் சூகிக்கு அண்மையில் மியன்மார் அரசி கடவுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இராணுவ ஆட்சியாளர்களால் அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த போது ஆங் சாங் சூகிக்கான உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த மாதம் நடத்தப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலில் ஆங் சாங் சூகி வெற்றிபெற்றதை அடுத்து மியன்மாரில் ஜனநாயகம் ஏற்பட்டுள்ளது என சர்வதேச சமூகம் குறிப்பிட்டுவருகின்றது.

மியன்மார் நீண்ட காலமாக இராணுவ ஆட்சிக்கு உள்பட்டிருந்த நிலையில் தற்போது அங்கு ஜனநாயக வழிமுறைகள் பின்பற்றப்படுவதை வலுப்படுத்துவதாக சூகியின் சுற்றுப்பயணம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரின் இந்தப் பயணம் சர்வதேச அளவில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள [illegible] நாடுகளின தடைகளை நீக்கவும் வழிகோலியுள்ளது.

## எகிப்தில் தேர்தல்

எகிப்தின் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு அந்த நாட்டு மக்கள் தயாராகிவருகின்றனர். முன்னாள் ஜனாதிபதி ஹோஷ்னி முபாரக் பதவி விலக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுகின்றது. 50 மில்லியன் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்தத் தேர்தல் நியாயமான முறையில் நடத்தப்படும் என்று தற்போது எகிப்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள இரர்ணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகிதத்தில் அச்சிட்ட மையை அழிக்கும் தொழில்நுட்பம் கண்டுபிடிப்பு

லண்டன், மே 24

காகிதத்தில் அச்சிட்ட மையை அகற்றி விட்டு, அதே காகிதத்தை மீண்டும் பயன்படுத்தவல்ல, புதிய கதிரியக்கத் தொழில்நுட்பத்தைக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளது.

பிரிட்டனின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் புதிய கதிரியக்கத் தொழில்நுட்பத்தை கண்டறிந்து உள்ளனர்.


இந்தத் தொழில்நுட்பம் மூலம், காகிதத்தில் அச்சிட்ட மையை விரைவாக அழித்து விட்டு, அதே காகிதத்தை மீண்டும் பயன்படுத்த முடியும்.

இதன் மூலம் காகித உற்பத்திக்குத் தேவையான காட்டு மரங்களை அழிப்பதைப் பெருமளவு குறைப்பதோடு, சுற்றுச் சூழல் பாதுகாப்பை அதிகரிக்க முடியும்.

இந்தக் கண்டுபிடிப்பு பற்றிய செய்திகள் வெளியிடப்பட்ட போதிலும் குறித்த தொழில்நுட்பம் பொதுமக்களின் பாவனைக்கு இன்னமும் வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

# பல்கேரியாவில் நிலநடுக்கம்

### உயிர்ச் சேதங்கள் ஏதுமில்லை



சோபியா, மே 24

பல்கேரியாவில், நேற்று முன்தினம் அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டதில் கட்டடங்கள் குலுங்கின. ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள இத்தாலியில், இரண்டு நாள்களுக்கு முன் நிலநடுக்கம் ஏற்பட்டதில் ஏராளமான கட்டடங்கள் தரைமட்டமாயின. ஆறு பேர் உயிரிழந்தனர்.

இதற்கிடையே, தென் கிழக்கு ஐரோப்பிய நாடான பல்கேரியாவில் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. தலைநகர் சோபியா அருகே உள்ள பெர்னிக் மற்றும் ரோடோமிர் நகரங்களுக்கிடையே, 5.8 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின. இதனால், நித்திரையிலிருந்த மக்கள் பீதியடைந்து சாலைகளுக்கு ஓடி வந்தனர். இந்த நில நடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சொத்து இழப்புக்கள் குறித்து தகவல்கள் ஏதும் இதுவரை வெளியாகவில்லை.

# ஸ்பெயினில் கல்விப் போராட்டம்

மாட்ரிட், மே 24

ஸ்பெயின் அரசு கல்விக்கான கட்டண சலுகையை தனது வரவு செலவுத் திட்டத்தில் நிறுத்த முடிவு செய்ததால் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினர்.

ஸ்பெயின் அரசு வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கான செலவை நிறுத்தி வைத்ததால் நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் 10 ஆயிரம் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மாணவ குடும்பத்தினர் போராட்டம் நடத்தினர்.

ஸ்பெயினின் தலைநகர் மாட்ரிட்டில் நடந்த எதிர்ப்புப் பேரணியில் கல்வி என்பது செலவு அல்ல அது ஒரு முதலீடு அதனால் அதை நிறுத்தாதே என்ற வெள்ளைப் பதாகைகள் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பேரணியில் பங்கேற்றவர்கள் பச்சை நிற உடைகளை அணிந்து போராடினர்.

கடந்த மாதத்திலிருந்து ஸ்பெயின் மக்கள் பொருளாதார நெருக்கடி, விலைவாசியுயர்வு வேலையில்லாப் பிரச்சினை போன்றவற்றுக்குத் தீர்வுகாண வீதியில் இறங்கி போராடி வரும் நிலையில் இந்த மாணவர்களின் போராட்டமும் அதற்கு வலுச்சேர்க்கும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் மாணவர் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசு உடனடி பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதாக தெரியவருகின்றது.

# பர்வேஷ் மீதான பிடியாணை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்

இஸ்லாமாபாத், மே 24

பெனாசிர் பூட்டோ கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்புக்கு நீதிமன்றம் விதித்துள்ள பிடியாணை, அவர் கைதாகும் வரை நடைமுறையில் இருக்கும் என்று சர்வதேச பொலிஸிடம் பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப், நாட்டில் இருந்து வெளியேறி லண்டனிலும், துபாயிலுமாக வசித்து வருகிறார். பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள முஷாரப்புக்கு அந்த நாட்டு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. இந்தப் பிடியாணையை பாகிஸ்தானின் விசாரணை அமைப்பான எப்.ஐ.ஏ, சர்வதேச பொலிஸாரிடம் கையளித்துள்ளது.

இந்த நிலையில்,

> இந்தப் பிடியாணை எவ்வளவு நாள் நடைமுறையில் இருக்கும் என்று கேட்டு சர்வதேச பொலிஸ் கடிதம் அனுப்பியது. முஷாரப் கைதாகும் வரை அது நடைமுறையில் இருக்கும் என நீதிமன்றம் கூறியிருக்கிறது.

இந்தப் பிடியாணை எவ்வளவு காலம் நடைமுறையில் இருக்கும் என்று எப்.ஐ.ஏயிடம் விளக்கம் கேட்டு சர்வதேச பொலிஸ் கடிதம் அனுப்பியது. இது பற்றி, எப்.ஐ.ஏ பொதுசன தொடர்பாளர் சவுத்ரி ஜூபகர் அலி நேற்றுமுன்தினம் கருத்து வெளியிடுகையில், பெனாசிர் கொலை வழக்கில் முஷாரப் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அந்த வழக்கின் விசாரணைக்கு இதுவரை முஷாரப் முன்னிலையாகவில்லை. இதனால், தீவிரவாதத் தடுப்பு சிறப்பு நீதிமன்றம் அவருக்கு பிடியாணை பிறப்பித்தது.

இந்தப் பிடியாணை எவ்வளவு நாள் நடைமுறையில் இருக்கும் என்று கேட்டு சர்வதேச பொலிஸ் கடிதம் அனுப்பியது. முஷாரப் கைதாகும் வரை அது நடைமுறையில் இருக்கும் என நீதிமன்றம் கூறியிருக்கிறது. எனவே, இதை சர்வதேசப் பொலிஸூக்குத் தெரிவித்துள்ளோம். முஷாரப் எப்போது பாகிஸ்தானுக்கு வந்தாலும் அவர் கைது செய்யப்படுவார் என்று கூறினார்.

இந்த நிலையில், முஷாரப் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட பாகிஸ்தான் செல்ல முயற்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A'தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே.0212226944

நல்லூர் பாம் சென்ரர் கனகபுரம் வீதி, கிளிநொச்சி. தொ.பே. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. தொ.பே. 0778996085

(சி/323) (45-7-9)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
05★ 01★ 1950
மறைவு
05★ 06★ 2011

அமரர் சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (பாலன்)
திதி: சதுர்த்தி

ஆண்டு ஒன்று ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் - எம்
நெஞ்சை விட்டு அகலாது

இல.01.கரப்பன்காடு, வவுனியா. (18294) (2-6-9) - குடும்பத்தினர்.

**மூன்றாண்டு கழிந்த பின்னும் ஈரமாய் உங்கள் நினைவில்**



கதிரமலைநாதன் சிகானி

மண்ணில்
14★01★1996

விண்ணில்
24★05★2009

வருடங்கள் மூன்று சென்றதம்மா
வையகத்திலிருந்து நீ மறைந்து
வாடுகிறோம் நாளும் உனை நினைத்து
ஆசைமகளாய் அன்புச் சகோதரியாய்
எம்மோடு வாழ்ந்த காலங்கள் என்றும்
அழியாது எம் நெஞ்சங்களை விட்டு
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சு. கதிரமலைநாதன் (பிரான்ஸ்) தொ.பே. 0141 6000 26

பெரியப்பா (சி. தர்மகுலராசா), பெரியம்மா(த. நித்தியகலா), ஏழாலை கிழக்கு, ஏழாலை.

(18415)(6-45)

**வயறிங் வேலைகள் செய்து தரப்படும்**



உங்கள் வீடுகளில் வயறிங், பைப்லைன் மற்றும் பெயின்ரிங் வேலைகள் குறைவான செலவிலும் குறுகிய காலத்திற்குள் பாதுகாப்பான முறையில் உடனடியாக செய்து தரப்படும்.

தொடர்பு : 077 8048143, 075 6731564 (சி/1487)

**கட்டட இடிபாடுகள் விற்பனை**

தேவஸ்தான வளவிலுள்ள கட்டட இடிபாடுகளை கூறுவிலை கோரிப் பெற்றுக்கொள்ளலாம்.
நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(சி/332) (45.6.9)

**மலிவு விற்பனை**

யாழ்நகரில் எங்கும் இல்லாத மலிவு விலையில் Japan Sony Waga Flat TVகள் 21", 25"-13500/=, 29"-16000/=, பைனியர் அம்பிளிபர் -13000/=, 12" Box - 12000/=, CD-ரேடியோ, கசெற்-3000 /=, DVD - 4000/=

தொடர்புகளுக்கு: 077 0440570
சோனி றேட்றசென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக)
56, K.K.S. வீதி, சுன்னாகம்.

(84477) (45-7-9)

**நாஹா மருத்துவ நிலையம்**

கடுமையாக எலும்புகள் பாதிப்புற்ற வாதம், மூட்டு, தீராதபுண்கள், அல்சர், குழந்தையில்லா கெற்ப நோய்க்கான சாதனை புரியும் மருந்தியல்

கிழமை நாள் - 3pm - 7pm
சனி, ஞாயிறு - 8.30am - 2pm
T.P : 077 3212740

வங்கி முன்லேன், சத்தாவத்தை வைரவர் கோவிலடி (ஜெயநிலீடு), மானிப்பாய்

(18475)(6-7-8)

**வீடு, காணி விற்பனைக்கு**

மட்டுவில் வடக்கு, முத்துமாரி அம்மன் கோயிலடி, சாவகச்சேரியில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் 12 ½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0774654982

(18295)(2-6-7)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், அத்தியடி புது வீதியிலுள்ள 2½ பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 7850933

(18453)(6-7-8)

**உதவிப் பூசகர் தேவை**

மேற்படி பதவிக்கு ஒழுக்கமும், திறமையும் உள்ள பிராமண குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ஆலய வீதியில் இருப்பிட வசதி செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலயம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
விண்ணப்ப முடிவுதிகதி: 28.05.2012

(18382) (45-7-9)

சிவமயம்

இணுவில் அருள்மிகு

**ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோயில்**

**தீர்த்த மஹோற்சவ உற்சவம்**

காலம்:- நந்தன வருஷ வைகாசி தமிழ் 12, - 25.05.2012

நேரம்:- மாலை 4 மணிக்கு தீர்த்த உற்சவம் (விஷேட அம்சம்:- நாதஸ்வர தவில் கச்சேரி இடம்பெறும்)

★ காசி மகா தீர்த்தம் அபிஷேகம் செய்யப்படும்.

- தீர்த்த உபயகாரர்கள்.

(18446) (2-6-9)

**மாபெரும் புத்தக கண்காட்சியும் விற்பனையும்**

இடம்:- கேட்போர் கூடம் (Auditorium)
யாழ் மத்திய கல்லூரி
திகதி :- 21,22,23,24,25,26,27 மே 2012

நேரம் –
9.00 a.m. - 7.00 p.m.



சகலவிதமான புத்தகங்களும் நியாயமான விலைக் கழிவுடன் விற்பனை செய்யப்படும்

ஒழுங்கமைப்பாளர்

ஜெயா புத்தகசாலை

91- 99, U.G. Floor, People's Park Complex, Colombo -11. Tel: 2438227, 7400711 Fax : 2332939

(17997)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(20)

### மனதை இலேசாக்கிக் கொள்ளுங்கள்

ஏதோ ஒரு கணத்தில் இந்த உலகம் மகிழ்ச்சியற்றதாயும், வாழ்க்கை அர்த்தமற்றதாயும் தெரியும். ஆழ்ந்த வருத்தத்தில் ஒரேயடியாய் வீழ்ந்துவிட்ட உணர்வு ஏற்படும். ஒரு தோல்வி, ஒரு பிரச்சினை, ஒரு நெருக்கடி, ஒரு இழப்பு அல்லது பிரிவு அல்லது ஒரு புறக்கணிப்பு அதற்குக் காரணமாக இருக்கும்.

**'தோல்வி என்பது முடிந்த முடிவாகிவிடாது**
**தீர்க்கப்படாத பிரச்சினை என்று எதுவும் இல்லை**
**எந்தவொரு நெருக்கடியிலும் இருந்து மீள முடியும்.'**

இழப்பு ஈடுசெய்ய முடியாததாயினும், அது ஏற்படுத்துகிற வலி கொஞ்சக் காலந்தான்.

பிரிவின் வேதனையைக் காலம் மாற்றும். புறக்கணிக் கப்படுகிறோம் என்கிற உணர்வு நீங்க தாழ்வு மனப்பான்மையை விட வேண்டும். தகுதி உடையவர்களுக்கு எங்கும் வரவேற்பு உண்டு.

உங்களைக் கவலைக்குள்ளாக்குகிற எதுவும் அப்படியே நிலைத்து விடுவதில்லை. சுயபச்சாதாபத்தை தன்னிரக்கத்தை விடுங்கள். உங்கள் உடலோ, மனமோ, உளைச்சலுக்கு உள்ளாகாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். அந்த வகையில் ஓய்வு கொள்வதே நல்ல வழி. உங்களுக்கு எப்போது ஓய்வு தேவை என்பதை உடலும், மனமும் கூறிவிடும். அப்போதே வேலையில் இருந்து விடுபட்டு ஓய்வு கொள்ளுங்கள். இறுக்கம், மன அழுத்தம் ஏற்படாதபடி தடுத்துக்கொள்ள அதுவே உபாயம்.

**'சலிப்புறும் நிலையைத்**
**தவிர்த்து விடுங்கள்**
**தனித்திருக்கும் நிலையும்**
**உங்களைத் தவிப்பிற்குள்ளாக்கும்'**

உடம்பைத் தணிவுறச் செய்யவும், மனதை இலகுவாக்கிக் கொள்ளவும் ஏதேனும் ஒரு பொழுது போக்கு உதவும்.

### பழகும் முறை

அலுவலகத்தில் உங்களுக்கு ஏற்படுகிற கவலை, பரபரப்பு, மன இறுக்கம், குழப்பம் இவற்றுக்கு யார் காரணம்? ஒன்று நீங்கள் அல்லது உங்களைச் சுற்றியிருப்பவர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் இடையே உண்டாகிற பழக்கம் எப்போதும் ஒரே மாதிரி இருந்துவிடாது.

எதிராளி உங்களிடம் அன்னியோன்யமாகப் பழகுவார். நீங்களும் அவரை நம்பி உங்களுடைய அந்தரங்க விசயங்களை அவரோடு பகிர்ந்து கொள்வீர்கள். ஒரு கட்டத்தில் உங்கள் பழக்கம் வெறுத்தொதுக்கும் படியாய் மாறிவிடக் கூடும். எரிச்சல், பொறாமை, தவறான பேச்சு இப்படி ஏதோ ஒன்று அதற்குக் காரணமாக இருக்கும்.

உங்களுடைய பலம் என்ன, பலவீனம் என்ன என்பதையெல்லாம் அவர் அறிந்திருப்பார். சமயம் கிடைக்கும் போது உங்கள் மீது புழுதிவாரித் தூற்றத் தயங்கமாட்டார். முடிந்தவரெல்லாம் உங்களுக்கு இடையூறு செய்வார். நிர்வாக மேலிடத்தில் உங்கள் மதிப்பு குறையும். நிம்மதியையும், தூக்கத்தையும் இழப்பீர்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்? அளவுக்கு மீறி ஒருவரை நம்புவது தான். நட்பில் எல்லை வகுத்துக் கொள்ளுங்கள்.

வேலையில் முழுக் கவனம் செலுத்துங்கள், சக ஊழியர்களுடன் வம்பளப்பு வேண்டாம். வீட்டுப் பிரச்சினைகளை மனதில் சுமந்து கொண்டு வேலை செய்யாதீர்கள். உங்களையறியாமலேயே. வேலையில் தவறு நேர்ந்து நிர்வாகத்தின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

சிலர் உங்களுடைய தயாள குணத்தைப் பயன்படுத்தி உங்களையே அடிக்கடி சார்ந்து நிற்பார்கள். உங்கள் பணத்தையோ உழைப்பையோ அடுத்தவர் சுரண்ட இடமளிக்காதீர்கள்.

எப்படி மற்றவர் உங்களை நடத்த வேண்டும் என்று விரும்புவீர்களோ, அப்படியே அவர்களை நடத்துங்கள். அப்போதுதான் அவர்களுடைய ஒத்துழைப்பை, நம்பிக்கையை நீங்கள் பெற முடியும்.

### வழியாயில்லை வாழவும்...

உலகம் இரட்டைத் தன்மை (duality) கொண்டது. மேடு-பள்ளம், வெயில்-குளிர், இரவு-பகல் இப்படி வாழ்க்கையும் இரட்டைத் தன்மை கொண்டதுதான். மகிழ்ச்சி-வருத்தம், சிரிப்பு-அழுகை, வெற்றி-தோல்வி என்று மாறி மாறி வந்துகொண்டே இருக்கும். நிலையாமை ஒன்றையே நிலையாய்க் கொண்ட உலகமிது. இங்கே இழப்புகளை எண்ணி ஏன் வருந்துவது?

'என்னிடம் பணம் இல்லை. என் கவலைகளுக்குக் காரணம் ஏழ்மை. நான் பணக்காரனாகி விட்டால் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பேன்...' நம்முடைய பண வேட்டையின் பின்னணியில் இப்படியொரு எண்ண ஓட்டம் இருக்கும். பணம் வந்ததும் வேட்டையை நாம் நிறுத்திக் கொள்வதில்லை. மேலும் பணம் சேர்க்க வேண்டும் என்கிற வெறியில் வேட்டையைத் தொடர்கிறோம். எந்தப் பணம் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தரும் என்று எதிர்பார்த்தோமோ அது நம்மை ஏமாற்றி விடும். பணத்தின் வரவுக்கேற்ப தேவைகள் அதிகரித்து, ஆசைகள் அதிகரித்து, தேவைகளும், ஆசைகளும் வளர வளர கவலைகள் வந்துவிடும்.

**'இது போதாது என்கிற கவலை**
**இது நிலைக்குமா என்கிற கவலை**
**உறக்கம் போயிற்று என்கிற கவலை**
**ஆரோக்கியக் குறைவு என்கிற கவலை'**

பணவேட்டையில் இறங்குகிறவர்கள் எதை எதையோ இழந்துதான் தங்களுடைய வெற்றியை அடைகிறார்கள். பணம் ஓர் அளவிற்கு மேல் நன்மைக்குப் பதில் தீமைகளையே அதிகம் செய்யத் தொடங்கி விடுகிறது.

கட்டிட ஒப்பந்தக்காரர் ஒருவர் சொந்த மாநிலத்திலும் அண்டை மாநிலங்களிலும் ஒப்பந்தப் பணிகள் செய்து பலநூறு கோடிகளைச் சம்பாதித்தார்.

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# வாழ்வில் அறிவினைத் தேடுவோரின் பொக்கிஷமாகத் திகழ்வன நூல்களே

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர்

தமது வாழ்வில் அறிவினைத் தேடுவோருக்கு பொக்கிஷமாகத் திகழ்வன நூல்களே. அவ்வாறான நூல்களை நாம் தேடிச் சென்று கற்பது எமது தலையாய பணியாகும். நல்ல நூல்களைத் தெரிவு செய்வதற்காக கண்காட்சிகள் வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கண்காட்சியினை மாணவர்கள் மட்டுமல்ல பெற்றோர், பொதுமக்கள் பார்ப்பதுடன் நின்றுவிடாமல் பயனுள்ள நூல்களைக் கொள்வனவுசெய்து வாசிக்க வேண்டும். தரமான பயனுள்ள அறிவுத் திறன்களை வளர்க்கும் நூல்களை வாங்கி நமது வீடுகளில் சேகரிக்கும் போது எங்களை அறியாமல் வீட்டிலேயே நூலகங்களை உருவாக்க முடியும்.

இந்த நூலகங்கள் எதிர்கால சந்ததியினரின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகராட்சி மன்ற பொதுநூலகத்தில் அண்மையில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி ஆரம்பநாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாலச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கணினி மற்றும் தொலைக் காட்சிகள் மூலம் பாடத்திட்டங்களை மாணவர்கள் கற்க முற்படுகின்றனர். ஓர் ஆசிரியரிடம் கற்கும் பாடத்தினை மேலும் வளர்த்துக்கொள்ள நூல்களைத் தவிர வேறொன்றும் எமது தேவைக்கேற்ற விதத்தில் உதவுவதில்லை.

இவ்வாறான புத்தகக் கண்காட்சியினை நடத்த ஏற்பாடு செய்த சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர் தொடர்ந்தும் இவ்வாறான கண்காட்சியினை கிராமப்புறங்களிலும் நடத்தி மக்களிடையே நூல்களை வாசிக்கும் தன்மையை உருவாக்க வேண்டும்.

இந்தியா தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் 10 நாள்களுக்கு பெரும் அளவில் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது. இந்தக் கண்காட்சியில் அங்குள்ள நூற்றுக்கும் மேற்பட்ட புத்தக பிரசுர நிறுவனங்கள் தமது பிரசுர நூல்களைக் காட்சிப்படுத்துகின்றன.


இந்தக் கண்காட்சியினை இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து பார்வையிடுகின்றனர். அங்கு காட்சிக்கு வைக்கப்படும் தொண்ணூறு சதவீதமான நூல்கள் விற்று முடிக்கப்படுகின்றன.

இதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவெனில் அங்குள்ளவர்களின் வாசிப்புத் தன்மையே.

நூல்களைப் போல் சிறந்த நண்பன் கிடையாது என எமது முன்னோர்கள் கூறியுள்ளனர். எமது மக்களுக்கு தொலைக்காட்சிகளின் தொடர் நாடகங்களைப் பார்ப்பதில் உள்ள அக்கறை புத்தகங்கள் வாசிப்பதில் ஏற்படுவதில்லை மாணவர்கள் ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் பாடத்திட்டங்களை தெளிவுறக் கற்க பயனுள்ள நூல்கள் உள்ள நூலகங்களைத் தேடி வரவேண்டும்.

நூல்கள் பல கொண்டு உருவாக்கப்படும் ஆடைகளின் மூலம் பயன்களைப் பெறுவது போல பல நூல்களைத் தாங்கி நிற்கும் நூலகங்களுக்கு வந்து கற்று சிறந்த கல்விமான் என்ற பெயர் பெற வேண்டும் - என்றார்.

(எ-9)



ஜே/78 கிராமசேவகர் பிரிவுக்குள் அடங்கும் அத்தியடி மகளிர் அமைப்பினால் கைலாச விநாயகர் முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்ற ஆத்திசூடி மனனப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற மாணவர்களும் ஆசிரியர்களும்.

## வடமாகாண எழுத்தாக்க போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 24

மாகாணநிலைத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் -2012 இன் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. விவரம் வருமாறு:-

**தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

முதலாம் இடம் க.கஜனா சாவகச்சேரி மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம் த.மேரி தயாளினி மன்/புனித வளனார் றோ.க.த.வி, மூன்றாம் இடம் இ.மோகனவதனி வ/ இந்துக் கல்லூரி.

**கவிதை ஆக்கம்**

முதலாம் இடம் பு.ஆரத்தியா வடமத்திய மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம் அ.அருண் மன்/ தூயயோசப்வாஸ் ம.வி, மூன்றாம் இடம் ஜெ.ஜனார்த்தகன் மு/ மல்லாவி மத்திய கல்லூரி,

**சிறுகதை ஆக்கம்**

முதலாம் இடம் ம.லூட்ஸ் பூரணி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இரண்டாம் இடம் சி.விதுர்சனா மு/ கலைமகள் வித்தி, மூன்றாம் இடம் அ.பா.ஸஹ் ஹரா வ/ முஸ்லிம் ம.வி,

(தொடரும்)

# இளைய தலைமுறை சிறந்த முறையில் நேரத்தை செலவு செய்ய வேண்டும்

## வர்த்தகர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் தெரிவிப்பு

வலி.வடக்கு,மே 24

கடந்த காலங்களில் விளையாட்டுப் போட்டிகள் என்றால் ரசிகர்களும் பார்வையாளர்களும் விளையாட்டு மைதானத்தைச் சுற்றி நிரம்பி வழிவார்கள். இன்று இத்தகைய நிலைமை மாறிவிட்டது. இளைய தலைமுறை இதில் இருந்து விடுபட்டு தேவையற்ற செயல்பாடுகளில் முனைந்து கவலைக்குரிய செயல்களில் ஈடுபடுகின்றது என பிரபல வர்த்தகப் பிரமுகர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்திய கிரிக்கெட் போட்டி பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தொழில் அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

இளைய தலைமுறையினர் தமது நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தொலைபேசிகளுடன் சந்திக்கு சந்தி நிற்பதைத் தவிர்த்து எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும் செயல்களில் ஈடுபடுவதுடன் தம்மையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மைதானங்களில் விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் உடல், உள விருத்தியைப் பெற்றுக் கொள்வதுடன் நாட்டிற்கும் சமூகத்திற்கும் கூட பயனுள்ள மனிதனாக வாழவும் முடியும்.

இளைஞர்கள் சீர்கெட்டுச் செல்வதினால் குடும்பங்களின் மகிழ்ச்சியும் சீர்குலைக்கப்படுகின்றன.

இத்தகைய நிலைமைகளை ஏற்படுத்தாது மாலைப் பொழுதை பயனுள்ள முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்- என்றார்.

(எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலெக்ரிக்' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## வெற்றிக் கொண்டாட்டமும் மரத்தடிக் கல்வியும்

வன்னியில் நடந்த போரில் தமிழ் மக்கள் மீது பெற்ற வெற்றியை அரசும் சிங்கள மக்களும் கொண்டாடும் நிகழ்வுகள் கடந்த 19ஆம் திகதி, பெருமெடுப்பிலான இராணுவ அணிவகுப்புடன் நடத்தப்பட்டன.

இலங்கையின் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ அமர்ந்திருந்து பார்ப்பதற்கு வசதியாகத் தனியான செங்கம்பள மண்டபம் உள்ளிட்ட அலங்காரங்களுடன் நடைபெற்ற இந்தப் பிரமாண்டமான அணிவகுப்பு மற்றும் அதனுடன் இணைந்த கொண்டாட்டங்களுக்குப் பல மில்லியன் ரூபாக்கள் வாரியிறைக்கப்பட்டன என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அந்த நிகழ்வுகள் நடந்து நான்கு நாள்களே கழிந்துள்ள நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பில் மத்திய கல்லூரி மாணவர்கள் தொடர்ந்தும் மர நிழலின் கீழேயே அமர்ந்திருந்து கல்வி கற்கிறார்கள் என்ற செய்தி வெளியாகி உள்ளது.

போரினால் இடம்பெயர்ந்த இந்தக் கல்லூரி 2011 செப்டெம்பர் மாதம் முதல் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது. 9 மாத காலம் கடந்து சென்றுவிட்டபோதும் அந்த மாணவர்களுக்கு வகுப்பறைக்கான நிரந்தரக் கட்டங்கள் எவையும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்ற உண்மையை அந்தச் செய்தி புட்டுக் காட்டுகிறது.

புதுக்குடியிருப்பு போரில் மிகப் பலமாகப் பாதிக்கப்பட்ட பகுதி. அதனை மீளக்கட்டியெழுப்புவதில் அரசு கொண்டுள்ள அக்கறையை அறிவதற்குப் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சிறந்த உதாரணம்.

இந்தத் தருணத்தில், சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் எழுதியுள்ள கருத்துக்களை இங்கு பார்ப்பது மிக முக்கியமானது. அண்மையில் வன்னிக்கு நேரில் வந்து பார்த்துவிட்டுப் போய் அவர் எழுதியுள்ள கருத்துக்கள் அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையை வெளிப்படையாகப் படம்போட்டுக் காட்டுகின்றன.

இத்தனைக்கும் ரங்கஜெயசூரிய என்ற அந்தப் பத்திரிகையாளர், சிறிலங்கா அரசின் போரை மிகத் தீவிரமாக ஆதரித்தவர். போர் நடந்த காலங்களில் அவர் அதனை ஆதரித்து அவர் எழுதிய கட்டுரைகள் சிங்கள மக்கள் மத்தியில் மிகப் பிரபலமானவை.

அப்படிப்பட்ட ரங்க ஜெயசூரிய 'லக்பிம' வாரப் பத்திரிகையில், ''சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கான மறுவாழ்வுச் செயற்பாடுகள் மிக வேகமாகப் பூர்த்தி செய்யப்பட்டன. தென்பகுதிக் கரையோரத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்துக் கிராமங்களும் விரைவில் புனரமைக்கப்பட்டன. அதனுடன் ஒப்பிடும்போது கடந்த மூன்று ஆண்டுகளில் போரால் பாதிக்கப்பட்ட வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கான மறுவாழ்வுச் செயற்பாடுகள் மந்த நிலையிலேயே காணப்படுகின்றன'' என்று எழுதுகிறார்.

அரசை ஆதரிக்கக் கூடிய சிங்களப் பத்திரிகையாளர் ஒருவரின் நேர்மையான வாக்குமூலமாக இதனைக் கொள்ளமுடியும். 9 மாதங்களின் பின்னரும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவர்கள் இன்னமும் மர நிழல்களின் கீழ் பயில்வதற்கான காரணத்தை அது தெளிவாக முன்வைக்கிறது.

போருக்குப் பின்னர் தமிழர்களுடன் அரசு உண்மையான நல்லிணக்கத்துக்கு விரும்பியிருந்தால் காலி முகத்திடலில் ஆடம்பரக் கொண்டாட்டங்களை நிறுத்தி அந்தப் பணத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியை மறுசீரமைத்திருக்க வேண்டும். இந்த அரசு அப்படி இல்லை என்பதுதான் விபரீதம்.

# பொன்சேகாவும் பூட்டோவும்

■ தமிழில்- வி.எஸ்.ரி

*சிங்கள மூலம்- உப்புல் யோசப் பெர்னாண்டோ*



வட மத்திய மாகாண சபைத்தேர்தலில் ஜானக பெரேரா தோல்வியடைந்ததையடுத்து அரசு மீண்டும் அவருக்கான பாதுகாப்பை நிறுத்தி விட்டது. கடைசியில் அநுராதபுரத்தில் வைத்து ஜானகபெரேரா குண்டுத் தாக்குதல் மூலம் படுகொலை செய்யப்பட்டார். அவரது படுகொலை தொடர்பாக எதிர்க்கட்சிகள் அரசு மீது விரல் நீட்டி குற்றம் சாட்டியபோதும், அரசோ வெட்கமின்றி அது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதென அறிக்கை வெளியிட்டது.



''சரத் பொன்சேகாவை அரசு கைது செய்து சிறையில் அடைத்தமை தவறுதான். ஆயினும் தீமைக்கு மத்தியிலும் ஏதோ ஒரு சிறு நன்மையும் இருக்கக்கூடும். சரத்பொன்சேகா கைதாகி சிறையில் அடைப்பட்டிருக்காது வெளியில் இருக்க நேர்த்திருந்தால் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும். சிறையில் இருந்ததால் இப்போது அவருக்கு அச்சுறுத்தல் எதுவும் கிடையாது''

சரத் பொன்சேகா, அரசினால் கைது செய்யப்பட்ட வேளையில் ஒரு பிரபல்யமான பௌத்த மதத்தலைவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

குறித்த பௌத்தமதத் தலைவர் அந்த வேளையில் தெரிவித்த மேற்கண்ட கருத்து நூற்றுக்கு நூறு வீதம் உண்மையே. விடுதலைப் புலிகளின் கொலை இலக்குப் பட்டியலில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களில் இருந்தவர்கள் முறையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, மற்றும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோராவர். கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக இவர்களை நெருங்க விடுதலைப் புலிகளால் இயலவில்லை.

இராணுவ சேவையிலிருந்து விலகி எதிர்கட்சி பொதுவேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேளையிலும், சரத் பொன்சேகாவுக்கு அரச பாதுகாப்பு வழங்க வேண்டி நேர்ந்தது. ஆயினும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் சரத் பொன்சேகாவுக்கான அரச பாதுகாப்பு நீக்கப்பட்டதுடன், அவர் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுச் சிறையிலும் அடைக்கப்பட்டார். வெளியில் இருந்திருந்தால் அவரது பாதுகாப்பு கேள்விக்குறியாக அமைந்திருக்கும்.

தற்போது தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழந்த நிலையிலேயே சரத்பொன்சேகா விடுதலையாகியிருக்கின்றார். முன்னாள் இராணுவத் தளபதி, இராணுவ ஜெனரல் பதவி, அனைத்தையும் அவர் இன்று இழந்துள்ளார். இலங்கைப் போரின் வரலாற்றிலிருந்தோ, இராணுவ சேவை வரலாற்றிலிருந்தோ அவரது பெயர் நீக்கப்பட்டுவிட்டது.

சரத் பொன்சேகா தற்போது ஒரு சாதாரண குடிமகன் என்பதால், அரசு அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியதில்லை என வியாக்கியானம் முன் வைக்கவும் கூடும். முன்னர் ஜெனரல் பதவி வகித்து ஓய்வு பெற்ற வேளையில், ஜெனரல் ஜானக பெரேரா தமக்குப் பாதுகாப்பு ஏற்பாடு செய்து தருமாறு விடுத்த வேண்டுகோள் அந்தவேளை அரசால் நிராகரிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து யாழ்.குடா நாட்டை விடுவித்தவரெனப் பெயரெடுத்த ஜானக பெரேரா சேவையிலிருந்து விலகிய பின்னர் ஐ.தே.கட்சி சார்பில் வடமத்திய மாகாணசபை முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிட்டார் அப்போதுயில் தமக்கு அரச பாதுகாப்பு வழங்குமாறு அவர் கோரியபோதிலும், அவரது உயிருக்கு அச்சுறுத்தல் எதுவும் விடுக்கப்பட்டதாகத் தகவல் கிடைக்காததால் அத்தகைய பாதுகாப்பை வழங்க இயலாதென அரசு மறுத்திருந்தது. ஆயினும் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் விடுதலைப் புலிகளின் கொலை இலக்குப் பட்டியலில் தாமும் இடம் பெற்றிருப்பதாக ஜானகபெரேரா திரும்பத் திரும்பக் கூறி பாதுகாப்பு வழங்குமாறு கோரினார், ஆயினும் முன்னாள் இராணுவத்தினர் சகலருக்கும் பாதுகாப்பு வழங்குவதென்பது இயலாததொரு விடயம் எனக் கூறி அரசு அவரது கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

அதனை எதிர்த்து ஜானகபெரேரா நீதிமன்றத்தை நாடியபோது அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆயினும் வட மத்திய மாகாண சபைத்தேர்தலில் ஜானக பெரேரா தோல்வியடைந்ததையடுத்து அரசு மீண்டும் அவருக்கான பாதுகாப்பை நிறுத்தி விட்டது. கடைசியில் அநுராதபுரத்தில் வைத்து ஜானகபெரேரா குண்டுத் தாக்குதல் மூலம் படுகொலை செய்யப்பட்டார். அவரது படுகொலை தொடர்பாக எதிர்க்கட்சிகள் அரசு மீது விரல் நீட்டி குற்றம் சாட்டியபோதும், அரசோ வெட்கமின்றி அது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதென அறிக்கை வெளியிட்டது.

அந்த வேளையில் சரத்பொன்சேகா இராணுவத் தளபதியாகச் செயற்பட்டு வந்தார். ஜானக பெரேராவின் பாதுகாப்புக் குறித்து அரசு கடைப்பிடித்த நிலைப்பாட்டை அந்த வேளை சரத்பொன்சேகா ஆதரித்தாரா என்பது தெரியவரவில்லை. ஆயினும் ஜானக பெரேராவின் பரிதாப சாவு அந்த வேளையில் தமது எதிர்காலப் பாதுகாப்புக் குறித்து சரத்பொன்சேகாவையும் சிந்திக்க வைத்திருக்கும்.

இலங்கை நாட்டுக்காக பணியாற்றிய சேவையாற்றி ஓய்வுபெறும் பாதுகாப்புப் படைகளின் உயரதிகாரிகளின் பாதுகாப்புப் பிரச்சினை குறித்து அரசு அரசியல் சாயம் பூசிய மூக்குக்கண்ணாடி மூலம் நோக்குவது இந்த நாட்டின் துரதிஷ்டமாகும்.

இதற்கு மற்றுமோர் உதாரணமும் உண்டு கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்த இராணுவ மேஜர் லக்கி அல்கம சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், 1999 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் வேளையில் ஐ.தே.கட்சிக்காக உழைத்தார். அந்த வேளையில் அவர் தமக்கு அரச பாதுகாப்புக்கோரிய போதிலும், பதவியிலிருந்த சந்திரிகாவின் தலைமையிலான அரசு அவருக்குப் பாதுகாப்பு வசதி செய்து கொடுக்க மறுத்தது. கடைசியில் அவர் ஜாஎலவில் வைத்து விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.

தற்போது சிறைத்தண்டனையிலிருந்து விடுவிக்கப்படும் சரத்பொன்சேகாவுக்கும் தற்போதுள்ள மிகப்பெரிய சவால் அவரது பாதுகாப்பே.

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப், இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய வேளையில் பெனாஸீர் பூட்டோ பாகிஸ்தானை விட்டு தப்பியோடி வெளிநாட்டில் வாழ்ந்துவந்தார். பெனாஸீர் பூட்டோவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுச் சுமத்தி, அவர் பாகிஸ்தானுக்கு திரும்பி வந்தால் கைதுசெய்யப்படுவார் என ஜனாதிபதி முஷாரப் அறிவித்தார்.

இடையில் அமெரிக்கா சமரசம் மேற்கொண்டதன் காரணமாக சில கால அஞ்ஞாதவாசத்தின் பின்னர் பெனாஸீர் பூட்டோவுக்குபாகிஸ்தானுக்குத் திரும்பி அரசியலில் ஈடுபடும் வாய்ப்புக் கிட்டியது. பாகிஸ்தான் பொதுமக்களது அமோக ஆதரவுடன்அரசியல் நடவடிக்கைகளில் முனைப்புக்காட்டி வந்த வேளையில் பொதுக் கூட்டமொன்றில் வைத்து பெனாஸீர் பூட்டோ கடுங்கோட்பாட்டுத் தரப்பினரின் குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார். ஆயினும் அந்தப் படுகொலையில் முஷாரப் தலைமையிலான அரசுக்குத் தொடர்பு இருப்பதாக அந்த வேளையில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.


முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் படுகொலைச் சம்பவமும் இத்தகையதொன்றே. 1991 ஆம் ஆண்டில் பிரேமதாச தலைமையிலான ஐ.தே.கட்சி அரசிலிருந்து கருத்து முரண்பாடால் அவர், விலகிக் கொண்டார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை அந்த வேளையில்முன்னின்று மேற்கொண்ட அவர் அரசிலிருந்து வெளியேறி எதிரணியில் இணைந்த வேளையில், அவருக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பை அரசு நீக்கிக் கொண்டது.

தமக்குக் கிடைத்த அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் லலித் அத்துலத்முதலியைப் படுகொலை செய்ய இலக்கு வைத்து வந்த நிலையில், பிரேமதாசவுக்கும் தமக்கும் நெருக்கமான நண்பரொருவரிடம்லலித் அத்துலத்முதலி, பிரபாகரன் தம்மைப் படுகொலை செய்யத் திட்டமிட்டு வருவதாகவும், தம்மைக் கொலைசெய்த பின் பிரபாகரன் பிரேமதாசவை விட்டு வைக்கப் போவதில்லை எனவும், பிரேமதாசவைக் கொலை செய்து விட்டு தம்மை விட்டுவைத்தால் நான் ஜனாதிபதியாகி விடுவேன் என்பதால்தான் தம்மை முதலில் கொன்றுவிடப் பிரபாகரன் திட்டமிட்டுள்ளார் என்றும் ஆதலால் தம்முடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் அது பிரேமதாசவுக்கு பாதுகாப்பாக இருக்கும் எனவும் அவரிடம் கூறுங்கள் எனத் தெரிவித்திருந்தாராம்.

குறிப்பிட்ட அந்த நண்பர் இந்த விடயத்தைப் பிரேமதாசவுக்குத் தெரிவித்த போதிலும், பிரேமதாசா அது குறித்து எவ்வித அக்கறையும் எடுத்துக் கொள்ளவில்லை. கடைசியில் லலித் அத்துலத்முதலியின் அனுமானம் நிஜமாகியமை வரலாறு.

இன்று பிரபாகரனும் இல்லை; விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலும் இல்லை. ஆயினும் விடுதலைப் புலிகளது கொலைப்பட்டியலில் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தவர்களுக்கான அச்சுறுத்தல் எப்போதும் இருந்துதான் ஆகப் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் இன்னும் பார்க்கவில்லையா?

## நேரடி அனுபவ அறிக்கை

**யாழ்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மிகப் பிரமாண்டமான மருத்துவக் கண்காட்சி நடை பெற்று வருகின்றது. அதைப் பல ஆயிரக்கணக் கான மக்களும் மாணவர்களும் பார்வையிட்டுப் பயனடைகின்றனர்.**

■ உமா

வடக்கின் மக்கள் தொகை புள்ளி யொன்றில் சந்தித்தது போல தற்போது காட்சியளிக்கிறது யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட வளாகம். அலை மோதும் சனக்கூட்டத்தையும் தினமும் ஆயிரக் கணக்கில் படையெடுத்து வரும் பாட சாலை மாணவர்களையும் அங்கு காண முடிகிறது.

தென்னிந்திய சினிமாப் படங்களுக்கும் மெகா தொடர் நாடகங்களுக்கும் மட் டுமே அதிகளவான மக்களால் நேரம் ஒதுக்க முடிகிறது என்ற பொதுசன அபிப்பிராயத்தை மருத்துவக் கண்காட்சி முறியடித்துள்ளது.

'சுக வாழ்வை நோக்கி' என்ற தொனிப் பொருளிலான மருத்துவக் கண்காட்சி, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இடம் பெற்று வருகிறது. யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களால் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கடந்த திங்கள்கிழமை கண்காட்சியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்திருந்தார். எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இதனைப் பார்வையிட முடியும்.

கடந்த எட்டு வருட இடைவெளியின் பின்னர் இடம்பெற்றுவரும் இந்தக் கண்காட்சியைப் பார்வையிடுபவர்களுக்கு பயன்கள் ஏராளம்.

கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக நுழையும் முகப்பு வாயில் தொடக்கம் வெளியேறும் இடம் வரை மிகவும் அழகிய உருவ அமைப்புகள் பிரமிக்கத்தக்க வகையில் அலங்கரிக்கப்பட்டு நிலைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் ஆழமான கருத்துகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

யாழ்.நகரிலுள்ள ஒல்லாந்தர் காலத்து கோட்டையின் பிரதான நுழைவாயிலின் அமைப்பை ஒத்ததாக ஓலைகளால் நேர்த்தியாக அமைக்கப்பட்ட மாதிரி அமைப்பை மருத்துவ பீடத்தின் பிரதான நுழைவாயிலில் காணமுடிகிறது. அதனூடாக மருத்துவ பீடக் கட்டடத் தொகுதியை அடைய முடியும்.

உள்ளே சென்றதும் ஆச்சரியப்பட வைக்கும் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்ட உருவ வடிவமைப்புகள் பலவற்றைத் தரிசிக்க முடியும். மனித உடலமைப்பும் அவற்றின் பகுதிகளும் இவ்வாறான உருவ அமைப்புகளாகக் காட்சி தருகின்றன.

ஐந்து விரல்களும் அகலத்திறந்துள்ள உள்ளங்கை போன்ற பெரிய உருவ அமைப்பின் ஊடாக உள்ளே சென்றே முதலாவது காட்சிக் கூடத்தைக் காணமுடியும்.

காட்சிக் கூடங்கள் ஒவ்வொன்றும் எந்த விடயத்தை வெளிப்படுத்துகின்றவோ அதே போலவே காட்சிக் கூடங்களின் வடிவமைப்புகளும் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளன.

பத்துக்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்கள் அங்கு உள்ளன. சுவாசத் தொகுதி, குருதிச் சுற்றோட்டத் தொகுதி, மையநரம்புத் தொகுதி, சமிபாட்டுத் தொகுதி, சிறுநீர் தொகுதி, புற்று நோயியல் மற்றும் குற்றவியல் மருத்துவம், அகம் சுரக்கும் தொகுதி, தொற்று நோயியல் மற்றும் வெப்ப மண்டல நோயியல் தொகுதி, மகப்பேற்று மற்றும் பெண்கள் நோயியல் தொகுதி, குழந்தை மருத்துவம் என காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுவாசத் தொகுதி காட்சிக் கூடத்தை பார்வையிடுவதற்கு மூக்குப் போன்ற வடிவில் அமைக்கப்பட்டுள்ள நுழைவாயில் வழியாக செல்ல முடியும். அவ்வாறுதான் சமிபாட்டுத் தொகுதி காட்சிக் கூடத்தைக் காண்பதாயின் நேர்த்தியான பல்வரிசை அமைப்பைக் கொண்டுள்ள வாய்த் தோற்ற வடிவில் அமைக்கப்பட்டுள்ள நுழைவாயினுள் பிரவேசிக்க வேண்டும்.

காட்சிக் கூடங்களில் செய்முறை விளக்கம், விவரணப் படங்கள் வீடியோக் காட்சிகள், விளக் கப் படங்கள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டு வருகிறது. மருத்துவ பீட மாணவர்கள் மிகவும் இலகுவான முறையில் தெளிவு படுத்துவதை அவதானிக்க முடிகிறது.










இதன் காரணமாக காட்சிக் கூடங்களில் சனக்கூட்டம் அலை மோதி வருகிறது. கண்காட்சியை முழுமையாகப் பார்வையிட்டு, முடிப்பதாயின் சுமார் 3 மணித்தியாலங்களுக்கு மேலாக செலவிட வேண்டி இருக்கும்.

இந்தக் கண்காட்சி உடல் உள ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும், எட்டிப் பிடித்துள்ள நோய்களைத் துரத்த விரட்டுவதற்கும் வேண்டிய ஆலோசனைகள் அறிவுரைகள் பெறுவதற்கும், மருத்துவ ரீதியான அறிவை மேலும் விருத்தி செய்வதற்கும் பார்வையாளருக்கு பயனுள்ளதாக அமையும். கண்காட்சியைப் பார்வை யிட்டவர்கள் சிலரிடம் கருத்துக் கேட்டபோது இந்த நம்பிக்கையை அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

இந்தக் கண்காட்சி நிகழ்வினை பார்வையிடுவதுக்கு வருகை தந்திருந்த பாடசாலை மாணவர்களில் ஒரு சிலர் அவ்வப்போது மயங்கி வீழ்வதை அவதானிக்க முடிந்தது. அலைமோதும் சனத்திரள் காரணமாக ஏற்படும் அசௌகரியங்களால் மாணவர்கள் மயங்கி வீழ்ந்து இருக்கலாம். எமது பகுதி இளம் சமூகத்தினரின் உடல் ஆரோக்கி யம் குன்றி இருப்பதனையே இது எடுத் துக் காட்டுகிறது. எனவே எமது சமூ கத்தின் போஷாக்கு நிலையிலும் உடல் உள ஆரோக்கியத்திலும் அதிக கவனம் செலுத்தவேண்டி உள்ளது என்ற விடயமும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதுக்கு கண்காட்சி பெரிதும் உதவும்.

இந்தப் பிரமாண்டமான மருத்துவக் கண்காட்சியை மிகச் சிறப்பாக நடத்தி மக்களுக்கு மருத்துவ விழிப்புணர்வை ஏற்படுத்தி நிற்கும் மருத்துவபீட மாணவர்கள், எதிர்காலத்தில் எமது பகுதி மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கி மக்களின் உடல் உள ஆரோக்கியத்தை பேண முன்வருவார்கள் என நம்பலாம்.

இட வசதிகளின் தேவை கருதி மருத்துவ பீடத்தின் மூன்றாம் மாடி வரை காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நோயாளர்கள், முதியவர்கள், உடல் அங்கங்களை இழந்தவர்களுக்கு மாடிப்படிகளில் ஏறிக் கண்காட்சியைப் பார்வையிடுவதுக்கு சிரமமாக இருக்கிறது என்று ஒரு விமர்சனத்தைத் தவிர இந்தக் கண்காட்சி மிகவும் சிறப்பானதாக அமைந்துள்ளது. இவ்வாறான ஆக்கபூர்வமான நிகழ்வுகளால் எமது மண் மேலும் சிறப்புப் பெருமை அடைய வேண்டும்.

வருடத்துக்கு ஒருமுறை இதுபோன்ற மருத்துவக் கண்காட்சிகள் தொடர்ச்சியாக நடைபெறுமானால் யாழ். குடாநாட்டிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

இந்தக் கண்காட்சியில், மருத்துவத் துறையால் குணப்படுத்தவே முடியாது என்று பொதுமக்களால் கருதப்படும் புற்று நோய் போன்ற ஆபத்துமிகு நோய்களுக்கு, அதனை உரிய மருத்துவ பராமரிப்பின் ஊடாக குணப்படுத்தலாம் என்ற விடயம் காட்சிபூர்வமாகத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

மாரடைப்பு, நீரிழிவு, குழந்தை மருத்துவம் மற்றும் உளவியல் விருத்தி போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களின் ஆலோசனையின்படி மருத்துவ பீட மாணவர்களால் அமைக்கப்பட்டுள்ள குறித்த நோய்கள் தொடர்பான காண்பியங்கள் பார்ப்போர் மனதில் என்றும் அகலாமல் இருக்கக் கூடியவை. இதுவரை நோய் என்பதற்கு வடிவம் காணாமல் அருவ நிலையில் நோக்கியவர்களுக்கு இந்தக் கண்காட்சி உரிய வரைவையும் அதற்கான விளக்கத்தையும் வழங்கியிருக்கின்றது. அது இன்னும் பல ஆண்டுகளுக்கான விழிப்புணர்வை வழங்கும் என்பதில் பார்க்க வந்த எவரிடத்திலும் ஐயமில்லை.

பாடசாலை மாணவர்கள் இந்தக் கண்காட்சியில் உச்சக்கட்டமான பயனை அடைந்திருக்கிறார்கள். இப்போது பாடசாலைக் கல்வித் திட்டத்தில் விஞ்ஞானம் துறைசார்ந்த பாடங்கள் காட்சி பூர்வமான கற்றலை வேண்டி நிற்கிறது. "வண்ணமயப்பட்ட படிமங்களூடாக மாணவர்கள் மனதில் ஆழப் பதியவைத்தல்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கல்வித் திட்டம் மாற்றம் பெற்று விட்டது. ஆனால் அதற்கான கற்றல், கற்பித்தல் வசதிகள் இன்றியே வடக்கில் பல பாடசாலைகள் இயங்குகின்றன. இந்த நிலையில் மருத்துவ பீடக் கண்காட்சி மாணவர் மனதில் அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்திருக்கின்றது.

மனித உடலின் பாகங்கள் தொகுதி வாரியாக அமைக்கப்பட்டு அதற்கான விளக்கங்களும் இலகுவான முறையில் அளிக்கப்படுகின்றன. பாடப் புத்தகத்தில் படமாகப் பார்த்துப் படித்த மாணவர்களுக்கு இந்தக் கண்காட்சி படிமரீதியான விளங்கப்படுத்தலை வழங்கியிருக்கிறது.

இதுவரை காலமும் குறைந்தளவிலான அறிவியல் நோக்கைக் கொண்டிருந்த வடக்குப் பகுதிக்கு இந்தக் கண்காட்சி விரிவான பார்வையை வழங்கியிருக்கிறது. அச்சு ஊடகங்கள், சமூக வலைத் தளங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் என அனைத்தி லும் வடக்கின் அறிவுசார் தேட்டத்தின் வெளிப்பாடான இந்தக் கண்காட்சி பொதுமக் களைச் சென்றடைவதற்கான வழிவகை செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்களும் இன்னும் பார்க்கவில்லை என்றால், இன்றே பார்த்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருப்பட வேண்டாமா?

சில பேரிடம் ஐந்து நிமிடம் பேசிக்கொண்டிருந்தால் போதும் பல பேருடைய பல குறைகளைப் பட்டியல் போட்டு பரபரப்பாகப் பேசுவார்கள். ''அவர் அப்படி... இவர் இப்படி...'' என்று அந்தரங்க அசிங்கங்களை ஆசை ஆசையாக அம்பலப்படுத்துவார்கள். ஆனால் தங்களது தவறுகளையோ, பிழைகளையோ சிறிதளவும் ஆராய மாட்டார்கள். வருந்தவும் மாட்டார்கள்.

மகா ஞானிகள், அருளாளர்கள், தீர்க்கதரிசிகள் எப்போதும் குறைகண்டு கொண்டே இருப்பார்கள். பிறர் மீது அல்ல... தன்மீது.. தன் நெஞ்சின் மீது.. ''இழவுற்ற நெஞ்சே!'' என்பார்கள். ''பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையன்'' என்று தன்னைத் திட்டுவார் மணிவாசகர். அருணகிரிநாதரும், பட்டினத்தாரும் தம்மைக் கேவலப்படுத்திய மாதிரி யாராவது பேசுவார்களா? தன்னையே வார்த்தைகளால் அடித்துக் கொண்டவர் வள்ளலார்.

இப்படித் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொண்டால் தன்னம்பிக்கை போய்விடாதா என்று கவலைப்பட வேண்டாம். வாழ்க்கை என்பது பூரணத்தை நோக்கிய ஒரு பயணம். குற்றம் குறைகளில் இருந்து விடுபட்டு நிறைவாகிய இறைநிலை எய்துதலே வாழ்வின் அர்த்தம். இறைவன் குறையற்ற நிறை, பிழையற்ற நிலை என்பதே ஞானிகளின் முடிவு. ''குறைவிலா நிறையே கோதிலா அமுதே'' என்றே கடவுளை மாணிக்கவாசகர் பாடுகிறார்.

எந்தக் குறையும் இல்லாத இறைவனில் இருந்துதான் நாமும் வெளிவந்தோம். பலப்பல பிறவிகளாக நமது பயணம் நீடிக்கிறது. ஒவ்வொரு பிறவியிலும் பாவ, புண்ணியங்களைச் சேகரித்துச் சேகரித்து மாயையால் பெரும் பாவிகளாக ஆகிவிடுகிறோம். மீண்டும் தூய இறைநிலை பெறுவதே நமது பயணத்தின் இலக்காக வேண்டும்.

சொக்கத் தங்கத்தில் நகை செய்ய முடியாது. எனவே கொஞ்சம் செம்பு கலப்பார்கள். அதை மாற்றி வேறு நகை செய்யும்போது வேலை சுலபம் கருதி இன்னும் கொஞ்சம் செம்பு சேர்த்து சில ஆசாரிகள் நகை செய்வார்கள். மாறி மாறி இப்படிச் செய்யும்போது நகையின் மாற்று 24,22,18 என்று வெகுவாகக் குறைந்து தரமற்ற தங்கமாகிவிடும்.

நதி பனிமலையில் இருந்து பளிங்கு போன்று புறப்படும். பயன்படுத்தப் பயன்படுத்த சாக்கடையாகி விஷம் பரப்பும்.மனிதனின் கதையும் இதேதான். வாழ வாழ மனிதன் மேலும் மேலும் சாக்கடையாகின்றான். பிறவிக்குப் பிறவி மாற்று குறைந்த தங்கமாகிறான். இந்தக் கீழான பயணத்தை மடை மாற்றி தூய்மை நோக்கிய பயணமாக வாழ்வை உணர்ந்தவர்களே அருளாளர்கள். சாக்கடை நதி கடலில் கலந்து ஆவியாகி மழை நீராகச் சுத்திகரிக்கப்படுவது போல, கடவுள் என்ற கடலில் கலந்து தூய்மையாவதற்கே ஞானி விரும்புகிறான். தங்கம் நெருப்பிலும் அமிலத்திலும் சுத்தமாவது போல, ஞானக்கனலில் தன்னை எரித்துத் தூய்மை பிறப்பெடுக்கவே மகான்கள் விரும்புகிறார்கள். அதனால்தான் தங்கள் பிழைகளைப் பற்றியே ஓயாமல் பேசுவார்கள். சிந்திப்பார்கள். அல்பர்கள்தான் பிறர் பிழையே பேசி காலத்தைப் பாழாக்குவார்கள்.

இப்போது அற்பமானவர்கள் இன்னும் ஒரு படி மேலே போய்விட்டார்கள். தங்கள் தவறுகளையும் ஒழுக்கக் கேட்டையும் நியாயப்படுத்துகிறார்கள். இன்னும் ஒரு படி மேலே போய் பெருமைப்படுகிறார்கள்.

''எத்தனை போத்தல் அடிச்சாலும் ஐயா ஸ்ரெடியா இருப்பேன் தெரியுமா?'' என்று குடிகாரர்கள் கௌரவப்படுத்திக் கொள்கிறார்கள்.

தன் தவறுகளுக்கு வெட்கப்பட்டு ஞானியாகாவிட்டாலும் பரவாயில்லை... பெருமைப்பட்டு அஞ்ஞானியாகலாமா? ஒரு நகைச்சுவை. பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த முன் வரிசைப் பயணி கையில் பேப்பர் வைத்திருந்தார். சாரதி அவரைப் பார்த்து பேப்பரைப் படித்துச் சொல்லுங்கள் என்றார். ''கண்ணே தெரியவில்லை- எல்லாம் மங்கலாக வட்டம் வட்டமாகத் தெரிகிறது-இதில் பேப்பரை எப்படிப் படிப்பது'' என்று இழுத்தார்.''எனக்கும் கூடத்தான் ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை, ஒரே மங்கலாக, பசை பசையாகத் தெரிகின்றது. ஒரு குத்துமதிப்பாக சமாளித்து எப்படி செலுத்துகிறேன். அப்படி குத்துமதிப்பாக பேப்பரைப் பார்த்துச் சொல்லு என்றார் சாரதி.



சுகி.சிவம்

தனது தவறுகள் குறைகள் இன்று யாருக்கும் வருத்தமாகத் தோன்றுவதே இல்லை. பெருமையாக வேறு இருக்கிறது.உருப்பட வேண்டாமா?

# சிறந்த கூட்டுப் பொறுப்புடன் செயற்படும் ஞானசம்பந்தர் கலை மன்றம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)




கர்ணன்

புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலை மன்றத்தின் நிறுவுனரான திருஞானசம்பந்தர் காலமானதும் அவரது மனைவி புவனேஸ்வரி அம்மையார் இறக்கும் வரை ஓய்வூதியத்தில் 80 வீதத்தைக் கலை மன்றத்தின் வளர்ச்சிக்கு வழங்கிக் கொண்டிருந்தார்.

இதன் மூலம் மன்றம் நிறுவப்பட்ட நோக்கத்தை வளர்ப்பதற்கு முக்கிய கர்த்தாவாகத் திகழ்ந்தார். அக்காலத்திலேயே ஆயிரம் ரூபாவை நன்கொடை யாக வழங்கியதுடன், அடுத்த ஆண்டான 1963 இல் நிதி உதவி வழங்கி மன்றக் கட்டடத்தைப் பூர்த்தி செய்ய உதவினார். அக் கட்டடம் 9.2.1964 இல் மிகக்குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டது.

ஞானசம்பந்தர் கலை மன்றத்தினால் நடத்தப்படும் கலை நிகழ்வுகள், நாடகங்களை நடத்துவதற்கு மேடை இருக்கவில்லை. அவ்வப்போது வாங்குகள், கட்டில்கள், டிராக்டர் வண்டிப் பெட்டிகள் என்பவற்றைக் கொண்டே மேடையமைக்கப்பட்டு கலைநிகழ்வுகளும், நாடகங்களும் மேடையேற்றப்பட்டு வந்தன. கலையரங்கு இல்லாத குறையைப் போக்க 1978 களில் புவனேஸ்வரி அம்மையார் 6 ஆயிரம் ரூபாவை வழங்கி கலைஅரங்கு ஒன்றைக் கட்டினார் கள். அக்கலை அரங்கு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி பருத்தித்துறை உதவி அரச அதிபராகக் கடமையாற்றிய வி.வேலும் மயிலும் என்பவரால் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதே தினத்தின் மன்றத்தின் 17 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்ட போது அப்போதைய பருத்தித்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவருமான அமரர் கே.துரைரத்தினம் அமரர் புவனேஸ்வரி அம்மையாரின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

கலையரங்கு இல்லாத குறையைப் போக்க 1978 களில் புவனேஸ்வரி அம்மையார் 6 ஆயிரம் ரூபாவை வழங்கி கலை அரங்கு ஒன்றைக் கட்டினார்கள். அக்கலை அரங்கு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி பருத்தித்துறை உதவி அரச அதிபராகக் கடமையாற்றிய வி.வேலும்மயிலுவால் திறந்து வைக்கப்பட்டது.

தற்போது புவனேஸ்வரி கலை அரங்கு மேலும் விஸ்தரிக்கப்பட்டு, சிறப்பாகவர்ணம் தீட்டப்பட்டு உள்ளது. அக்கலை அரங்கில் மன் றத்தின் ஆண்டு விழாக்கள், கலை விழாக்கள், அரங்கேற்ற நிகழ்வுகள் பொதுக் கூட்டங்கள் உள் ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் வருடந் தோறும் இடம்பெற்று வருகின்றன.

இந்தப்பகுதி மக்களின் ஆதரவுடன் மன்றத்தை ஆரம்பித்து அதற்கென காலத்துக்குக் காலம் பெரும் நிதிப் பங்களிப்பினை வழங்கி அர்ப் பணிப்புடன் சேவை புரிந்த அமரர் புவனேஸ்வரி அம்மையார் தான் மன்றத்தின் மூலகர்த்தா ஆவார். இவருக்கு உறுதுணையாக இருந்து அமரர் கோ.குமாரவேலு செயலாற்றினார். இவர்களது பணியால் ஞானசம்பந்தர் கலைமன்றம் உயர்ந்து நிமிர்ந்தது.

மன்றம் ஆரம்பிக்கப்பட்ட 1962 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த பொதுக் கூட்டங்கள் 49 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவந்துள்ள போதிலும், நிர்வாகத்திற்கான உறுப்பினர்கள் போட்டியின்றியே தெரிவு செய்யப்பட்டு வருவது மன்ற வளர்ச்சிக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகும்.

இம்மன்றத்தில் சாதாரண அங்கத் தவராகி சேவை செய்தவர்களே நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். பல வருடங்களாக நிர்வாகத்தில் அங்கம் வகித்து மன்றத்தின் நோக்கத்தை நன்கு அறிந்து, சேவை செய்தவர்கள் பொருளாளர், செயலாளர், உபதலைவர், தலைவர் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். இதனால் சிறந்த கூட்டுப்பொறுப்புடைய நிர்வாகமாக மன்றம் இயங்கி வருகின்றது. கூட்டுப் பொறுப்பான நிர்வாகம் தான் 49 ஆண்டுகளுக்கு மேலாக தளராது பணி செய்து வருகின்றது. மன்றத்தை வளர்த்து பெருமை கண்ட அமரர்களான பெரியார்களின் நினைவு தினங்கள் மன்றத்தின் முதல்வி அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் அன்னதானத்துடன் நினைவு கூரப்படுகின்றன.

மன்றத்தினால் நடத்தப்பட்டுவரும் கலை வகுப்புகளான தையல், நடனம், சங்கீதம், வீணை மற்றும் முன்பள்ளிச் சிறார்களுக்கான கணினிப் பயிற்சி வகுப்புகள் அருகாமையில் உள்ள வீடுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

எல்லா வகுப்புகளையும் ஒழுங்காகவும், ஒரே இடத்தில் நடத்துவதற்கும், பயிற்சிக் கருவிகளை வசதியாக வைத்து பயிற்சி வழங்குவதற்கும், மன்றத்தின் அனைத் துப் பணிகளையும் ஒருமித்த இடத்தில் மேற்கொள்வதற்கும் வசதியாக மன்றத்துக் கென இருமாடிக் கட்டடம் மிக அத்தியாவசியமானது என நிர்வாகசபையினால் உணரப்பட்டுள்ளது.

மன்றத்திற்கென இருமாடிக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு பிரதேச செயலர் ஊடாக யாழ்.அரச அதிபருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மாடிக்கட்டடம் கட்டப்பட்டால் ஒரு ஆண்டில் 250 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கலைப் பயிற்சிகளை வழங்கமுடியும் என கலை மன்றநிர்வாகக் குழு நம்பிக்கை தெரிவிக்கின்றது. இத்திட்டம் நிறைவேற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகரை கடத்தியவர்கள் கைது

மாவனெல்லை, மே 24

மாவனெல்லையில் வர்த்தகரைக் கடத்திக் குடும்பத்தினிரிடமிருந்து 2.5 மில்லியன் ரூபா கப்பம் கோரினார்கள் என்ற குற்றச்சாட்டில் கொழும்பு குற்றப் பிரிவினரால் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வர்த்தகர் தொழில் விடயம் காரணமாக தனது வாகனத்தில் சென்றபோது கடந்த வாரம் மாவனெல்லையில் கடத்தப்பட்டார்.

இதன் பின்னர் சிலர் 2.5 மில்லியன் ரூபா கொடுத்தால் இவர் விடுவிக்கப்படுவார் என அவரது குடும்பத்தினருக்குத் தகவல் அனுப்பினர். கடத்தப்பட்டவரின் குடும்பத்தினர் இதைப் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

குற்றவியல் பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய, பணத்தை பெற்றுக்கொள்ள மாவனெல்லையின் குறித்த ஓர் இடத்துக்கு வருமாறு குடும்பத்தினர் சந்தேகநபர்களிடம் கூறினர். இதற்கமைய மாவனெல்லையில் குறிப்பிட்ட இடத்துக்கு பணம் பெறுவதற்காக வந்த மூவரை பொலிஸார் மடக் கிப்பிடித்தனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் கண்டியில் இடம்பெற்ற பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## குளவி கொட்டி 14 தொழிலாளர் வைத்தியசாலையில்

திம்புள்ள, மே 24

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திம்புள்ள கீழ்ப்பிரிவு தோட்டத்தில் ஐந்தாவது மலைப் பகுதியில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண் தொழிலாளர்களுக்கு குளவிகள் கொட்டியதில் 14 பேர் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கொட்டகலை பிரதேசத்தில் தோட்டங்களில் தொழிலாளர்கள் அடிக்கடி குளவி கொட்டுதலுக்கு உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

மேல்கொத்மலை நீரணையில்

## மதில் அமைக்கக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

தலவாக்கலை, மே 24

தலவாக்கலை, மேல் கொத்மலை நீரணைப் பிரதேசத்தில் ஒன்பது வயது சிறுவன் ஒருவன் தவறி விழுந்து உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து, இந்த நீர ணைப் பிரதேசத்தில் பாதுகாப்பு மதில்களை அமைக்கு மாறு கோரி மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தலவாக்கலை - கூம்வூட், லொக்கில், நானுஓயா, பாமர்ஸ்டன் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தொழிலுக்குச் செல்லாமல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தலவாக்கலை நகருக்கு அண்மையில் உள்ள மேல் கொத் மலை நீரணைப் பிரதேசத்தில் பாதுகாப்பு மதில் அமைப்பது தொடர்பில் திட்டச் செயற்பாட்டாளர்கள் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருவ தாக பிரதேச மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். (ச)



முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கண்டிக்கு சென்று மஹாநாயக்க தேரரிடம் ஆசி பெற்றுக்கொண்டார். அருகில் அவரது பாரியார் அனோமா பொன்சேகாவும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரியவும் காணப்படுகின்றனர்.

# யானைத் தாக்குதலை தடுக்க கிழக்கில் நடவடிக்கை தேவை

### மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

எருவில், மே 24

மட்டக்களப்பு, படுவான் கரை பிரதேசத்தில் காட்டு யானைகளினால் ஏற்படும் பாதிப்புக்களை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரிடம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட விவசாயப் பாதிப்புகளை சீர்செய்தல், குறிப்பிட்ட காலத்துக்குள் சேதமாக்கப்பட்டுள்ள 60இற்கும் மேற்பட்ட வீடுகளை புனரமைக்க நடவடிக்கை எடுத்தல், யானைகளை வேறு இடத்துக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தல், பாதுகாப்பு வேலி அமைக்கப்படாத இடங்களுக்கு வேலி அமைத்தல் போன்ற கோரிக்கைகள் உள்ளடங்கிய மனு மாவட்ட அரச அதிபருக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**காட்டு யானைகளின் தாக்குதலால் இதுவரை 60இக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.**

படுவான்கரை பிரதேசத்தில் உள்ள வெல்லாவெளி, பட்டிப்பளை, செங்கலடி, வவுணதீவு போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்கள் சில வருடங்களாக காட்டு யானைகளின் தொல்லைகளால் பாதிப்படைந்துள்ளன.

காட்டு யானைகள் 60வீடுகளுக்கு மேல் உடைத்தும், தளபாடங்களை சேதப்படுத்தியுள்ளதுடன் வீட்டில் உள்ள நெல், அரிசி, மா, உப்பு, சோளன் போன்றவற்றையும் தொடர்ச்சியாக சாப்பிட்டு வருகின்றன. அத்துடன் விவசாயத் தோட்டங்கள் அனைத்தையும் சேதமாக்கி வருகின்றன.

இந்த யானைகள் பகல் நேரங்களில் இந்தப்பகுதியில் உள்ள சிறிய காடுகளில் தங்கியிருந்து விட்டு மாலை 7 மணி தொடங்கி அதிகாலை 3 மணிவரையும் தொடர்ச்சியாக குடிமனைக்குள் புகுந்து சேதம் விளைவிக்கின்றன. இதன்காரணமாக இரவுவேளைகளில் பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து கூட்டம் கூட்டமாக ஒன்றாக தங்கி நித்திரை இன்றி பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் பகல் வேளைகளில் அவர்கள் தமது அன்றாட வேலைகளை செய்யமுடியாமல் உள்ளதுடன் வறுமையில் வாடுகின்றனர்.

இந்த யானைகள் பகலில் அல்லாமல் இரவில் பசியுடன் வருவதால் வீடுகளையும் உடைத்து உணவுகளை தேடுகின்றன.

இந்தக் காட்டுயானைகள் தொடர்பாக விவசாய அமைப்பு, கிராம அபிவிருத்திச் சங்கம், வன விலங்குகள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளர், அரச அதிபர் போன்றோர் இரவு பகலாகத் துரித நடவடிக்கை எடுத்தும் அவற்றின் அட்டகாசங்களை கட்டுப்படுத்தமுடியாமல் உள்ளதால் அவை மீண்டும் மீண்டும் அழிவுகளை ஏற்படுத்திய வண்ணமே உள்ளன.

கிராம சேவையாளர்கள், பிரதேச செயலாளர் ஆகியோர் பாதிப்புக்குள்ளான மக்களையும், வீடுகளையும் உடைமைகளையும் பார்வையிட்டு சில முன்னேற்றகரமான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். ஆனால் நிரந்தரத்தீர்வு எட்டப்படவில்லை. யானைகள் குறைந்தது மூன்று நாளைக்கு ஒரு தடவையாவது அழிவுகளை ஏற்படுத்துகின்றன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிகள், வவுணதீவு பிரதேச செயலாளர், மட்டக்களப்பு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்கள பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச-31)

## மாகாண சபை உறுப்பினர் கைது

புத்தளம், மே 24

புத்தளம், ஆனமடுவவில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலை தொடர்பாக மேல் மாகாண சபையின். ஐ.ம.சு. கூட்டமைப்பு உறுப்பினரான துஷாரா பெரேராவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

வத்தளையில் நேற்று முன்தினம் மாலை அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொலை செய்யப்பட்ட வர்த்தகருடன் இணைந்து இந்த மாகாண சபை உறுப்பினர் வர்த்தகமொன்றில் ஈடுபட்டார்.

இந்தக் கொலையின் பின்னர் கைது செய்யப்பட்ட மூவரும் இராணுவத்திலிருந்து தப்பி வந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர், குறித்த அரசியல்வாதியின் தொடர்பை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த மாகாண சபை உறுப்பினரை புத்தளம் நீதிவான் முன்னிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னிலைப்படுத்தவுள்ளனர். (ச)

## புத்தளத்தில் உப்பு உற்பத்தி



புத்தளம், மே 24

புத்தளம் மாவட்டத்தில் உப்பு உற்பத்தி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புத்தளம், உப்பு உற்பத்தியாளர் நலன் புரிச் சங்க அங்கத்தவர்களினால் சுமார் 400 இற்கும் மேற்பட்ட ஏக்கரில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு அயடின் சேர்க்கப்பட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

நாட்டின் மொத்த உப்பு உற்பத்தியில் புத்தளம் பிரதேசத்தில் 40 வீதம் வரை உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. வருடாந்தம் உப்பு உற்பத்தியாளர் சங்கத்தினால் சுமார் 30,000 மெட்றிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது.

புத்தளம் பிரதேச உப்பு உற்பத்தியாளர்களினால் உப்பு உற்பத்திக்காக எவ்வித இரசாயன பதார்த்தங்களும் சேர்க்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு அரச மானியம் ஏதுமில்லை

### குற்றம்சாட்டுகிறார் மத்திய மாகாணசபை உறுப்பினர்

நுவரெலியா, மே 24

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால் பாதிக்கப்பட்ட மலையகத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மத்திய அரசு மானியம் எதனையும் வழங்கவில்லை என்று மத்திய மாகாணசபை உறுப்பினர் முரளி ரகுநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மத்திய மாகாண சபை அமர்வில் பிரேரணை ஒன்றை முன்வைத்து நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**பல மலையகத் தொழிலாளர்கள் தனது ஒருநாள் உணவை, ஒருவேளை உணவாக மட்டும் கட்டுப்படுத்தும் நிலை தோன்றியுள்ளது.**

தமது வியர்வை, இரத்தத்தை சிந்தி உழைத்து இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் வித்திட்ட மலையகத் தொழிலாளர்களுக்கு அரசு எந்த உதவிகளையும் வழங்குவதில்லை.

பொருள்களின் விலைகள் 'ரொக்கட்' வேகத்தில் பறந்து செல்கின்றமை மலையகத் தொழிலாளர்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பல மலையகத் தொழிலாளர்கள் தனது ஒருநாள் உணவை, ஒரு வேளை உணவாக மட்டும் கட்டுப்படுத்தும் நிலை தோன்றியுள்ளது. இது சம்பந்தமாக நாம் அரசுக்குத் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மலையகத் தொழிலாளர்களை மாற்றாந்தாய் வழியில் தான் இந்த அரசு பார்க்கின்றது. ஏனெனில் விவசாயம், மீன்பிடி மற்றும் இதர அரச சேவையாளர்கள் பெறும் எந்தவொரு மானியத்தையும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பெறுவதில்லை. அது அவர்களுக்கு கிடைப்பதும் இல்லை.

இந்த நாட்டிலே எமது மலையகச் சமூகம் மட்டும் தான் முழு வாழ்வினையும் மலையக மண்ணுக்கே அர்ப்பணித்துள்ளது. இவைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு மத்திய அரசின் நேரடி பார்வைக்கு இந்த பிரேரணை எடுத்துச் செல்லப்பட வேண்டும். மலையகத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு, மானியம் வழங்கப்பட வேண்டும் - என்றார். (ச)

## ஆசிரியருக்கு மும்மொழிப் பயிற்சி

குருணாகல், மே 24

வடமேல் மாகாணத்தில் அரச பாடசாலைகளில் தற்போது சேவையாற்றும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கு வடமேல் மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வடமேல் மாகாணத்தில் 2,000 ஆசிரியர்களுக்கு குறுகிய கால மொழிப் பயிற்சி வேலைத்திட்டம் இந்த வருடத்துக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த மொழிப் பயிற்சி வேலைத் திட்டத்துக்காக தேசிய மொழி மற்றும் சமூக நல்லிணக்க அபிவிருத்தி அமைச்சும் கலாசார மற்றும் கலை விவகார அமைச்சும் தேவையான வளப் பங்கீடுகளை வழங்கவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** பிறர் பாராட்டும் வகையில் செயற்பட்டு பெருமை சேர்ப்பீர்கள். செல்வ நிலையில் சிறிது ஏற்றம் காணப்படும். விழிப்போடு செயற்பட்டால், தொழில் வளம் மேலோங்கும். அலுவலகப் பணிகளில் எதிர்பாராத சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள். உடனிருப்பவர்களால், உபத்திரவங்களை எதிர்கொள்ளலாம்.

**இடபம்:** மகிழ்ச்சிகரமான மாற்றங்களைக் காணும் நாள். உடல் நிலையில் அசௌகரியங்கள் ஏற்பட்டபோதும், அதை பொருள்படுத்தாது பணிகளை மேற்கொள்வீர்கள். பிறரது விவகாரங்களில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும். பொறுப்புடன் செயற்பட்டு, தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். வழக்கு விவகாரங்களில், சாதகமான சூழ்நிலை இருக்கும்.

**மிதுனம்:** உற்சாகம் கூடும். புதிய அணுகுமுறையால் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். திடீர் பணவரவுகளால், பொருளாதார நிலைமை மேம்படும். அரசு காரியங்களில் அவதிகளைச் சந்திக்கலாம். உடல்நலப் பாதிப்புகள் அகன்று, உற்சாகம் பெறுவீர்கள். குடும்ப குழப்பங்களைத் தவிர்க்க பொறுமை, நிதானம் அவசியம்.

**கடகம்:** அடுத்தடுத்து பணிகள் இருந்தபோதும், நிதானமாகச் செய்து முடிப்பீர்கள். தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள், சற்று இழுபறிக்குப் பின்னர் வந்து சேரும். வீட்டுப் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு, நிம்மதி காண்பீர்கள். உறவினர் ஒருவரின் சந்திப்பு ஏற்படும். சில தகவல்களைப் பரிமாறிக் கொள்வீர்கள்.

**சிங்கம்:** சகல குழப்பங்களும் அகன்று பிரச்சினைக்கு விடிவு காண்பீர்கள். கடன் விவகாரங்களினால் ஏற்பட்ட கலக்கம் தீரும். எதிர்பார்த்த தனவரவுகள், தடையின்றி எளிதில் வந்து சேரும். உங்களின் யோசனையைக் கேட்டு, தந்தை பெருமைப்படலாம். தொழில் ரீதியாக சில நபர்களின் சந்திப்பும், அவர்களால் ஆதாயமும் ஏற்படும்.

**கன்னி:** தனவரவுகள் இருந்தாலும், சுபச்செலவுகள் அதிகரிக்கும். காரியம் ஒன்றிற்காக, ஒரு நபரைச் சந்திக்க சென்று அவர் இல்லாமல் ஏமாற்றமடையலாம். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் விரும்பும் விதத்தில் அமையும். நீண்ட தூர பயண முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும். பெற்றோரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து திருப்தி அடையலாம்.

## நாளை

வைகாசி 12வெள்ளிக்கிழமை 25.05.2012
திதி: சதுர்த்தி மு.ப.10.55 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் சித்தம் மு.இ 08.16வரை
சுபநேரம்: 05.52- 07.22 வரை
ராகு காலம்: 10.32- 11.52 வரை

**துலாம்:** செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும் நாள். குடும்பப் பொறுப்புகள் அதிகரித்தாலும், சுறுசுறுப்பாகக் கடமையாற்றுவீர்கள். கடன் மிகுதிகளில், கண்டிப்பு காட்ட வேண்டிய அவசியம் ஏற்படும். தொழில் விடயங்களில், விழிப்போடு செயற்பட்டு மந்த நிலைமையை மாற்றுவீர்கள். வாகனங்களில் செல்லும் போது, பாதுகாப்பைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** பல்வேறான சிந்தனைகள் மனதில் நிலவும். வீடு, வாகனம் வகையில், சில மாற்றங்களைச் செய்து கொள்ள விரும்புவீர்கள். இல்லத்தில் குழப்பங்கள் கூடலாம். பணவரவு தேவைக்கேற்ற வகையில் கிட்டும். அதே நேரத்தில், விரயங்களுக்கும் குறைவிருக்காது. தொழிலில், மறைமுக எதிர்ப்புகள் தோன்றும்.

**தனுசு:** ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். சிறு வீண் விரயங்களைச் சந்திக்கலாம். உறவினர்களை சந்தித்து, பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள் வீர்கள். பண விவகாரங்களில், எதிர்பார்த்த காரியம் ஒன்று ஏமாற்றத்தைத் தரலாம். அலுவலகப் பணிகளில், சக ஊழியர் ஒருவரின் செயற்பாடு அதிகம் யோசிக்க வைக்கும். பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள்.

**மகரம்:** காரணமற்ற மனக்குழப்பம் நிலவும். தொழில் தொடர்பான முயற்சிகளில் கூட, தாமதங்களைச் சந்திக்கலாம். மனதை ஒரு நிலைப்படுத்திச் செயற்படுங்கள். பிள்ளைகள் வழியில், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். சக ஊழியர்கள் விடுமுறை போன்றவற்றால் வேலைப்பளு அதிகரிக்கும். ஏதோ ஒரு விடயத்தை நினைத்துப் பயப்பட நேரிடலாம்.

**கும்பம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும். சில இடங்களில் உங்களை முன்னிலைப்படுத்திக் கொள்ள, செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். அரச ரீதியான காரியங்கள், இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரும். தொல்லை கொடுத்த எதிரிகள், எல்லை விட்டுச் செல்வர். நண்பர் ஒருவரின் பணிக்காக, நேரம் பார்க்காது செயற்பட வேண்டியிருக்கும்.

**மீனம்:** பல பணிகளையும் செய்யத் திட்டமிடுவீர்கள். ஆனால், ஒரு பணி முடிப்பதற்குள் மதிய நேரமாகிவிடும். பொறுமையோடு செயற்படுங்கள். பணப் பொறுப்புகளை, பிறரை நம்பி ஒப்படைப்பதைத் தவிர்க்கவும். தந்தை வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த சுப காரியச் செய்திகள் எளிதில் வந்து சேரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 2 |
| 2 | 5 | | 4 | 8 | 9 | 3 | 1 | |
| 1 | | 4 | 5 | 2 | | 6 | 8 | |
| | | 3 | | 6 | 1 | | | |
| | 6 | | | | | | 3 | |
| | | | 2 | 4 | | 7 | | |
| | 8 | 2 | | 1 | 4 | 5 | | 3 |
| | 4 | 1 | 3 | 5 | 2 | | 7 | 6 |
| 3 | | | | | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 6 | 3 | 4 | 1 | 2 | 5 | 7 |
| 4 | 5 | 3 | 7 | 2 | 9 | 8 | 1 | 6 |
| 1 | 7 | 2 | 6 | 8 | 5 | 3 | 4 | 9 |
| 7 | 3 | 5 | 8 | 9 | 4 | 1 | 6 | 2 |
| 6 | 4 | 9 | 2 | 1 | 7 | 5 | 3 | 8 |
| 2 | 1 | 8 | 5 | 6 | 3 | 9 | 7 | 4 |
| 3 | 2 | 7 | 4 | 5 | 8 | 6 | 9 | 1 |
| 5 | 6 | 1 | 9 | 7 | 2 | 4 | 8 | 3 |
| 8 | 9 | 4 | 1 | 3 | 6 | 7 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




ஷொப்பிங்கில் பெண்கள்தான் 'கில்லாடிகள்'




புற்றுநோயாளர்களுக்கு புத்துயிர்

வெளிவந்துவிட்டது!






## களைகட்டும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்

...... பிரதியமைச்சராகவுள்ள முரளிதரன் எனப்படும் கருணாவிற்கு இரண்டாவது தடவையாகவும் தேசியப் பட்டியல் முறையிலேயே நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கின்றது. இது ஜனாதிபதி மட்டத்தில் கருணாவிற்கு இருக்கின்ற தனிப்பட்ட செல்வாக்கு என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது. கருணாவைப் பொறுத்தவரையில் அவரது சொந்த இடமான மட்டக்களப்பு மாவட்டத்தில் அவருக்கு வாக்களிப்பதற்கான சாத்தியப்பாடுகள் கடந்த காலங்களில் மிகவும் அரிதாகவே இருந்தன. அவ்வாறு வாக்குகளின் விகிதம் குறைந்து நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்காது விட்டால் கருணாவிற்கு அது பெருத்த அவமானமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவேதான் கருணா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் குடும்பத்தின் செல்லப்பிள்ளையாகவிருந்து அவர்களின் மகுடி ஊதுதலுக்கு ஏற்றவாறு ஆட்டம் போடுகின்றார். இதற்கு சன்மானமாகவே தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையும் அமைச்சுப் பதவியும் ஜனாதிபதியினால் கருணாவிற்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதுதான் யதார்த்தம்......

## வடமாகாணசபைத் தேர்தலை பிற்போடுவது எதனால்...?

......வடக்குக் கிழக்கில் அமைச்சர்களான டக்ளசையும், கருணாவையும், பிள்ளையானையும் இனிமேலும் நம்பி இருக்க முடியாது. இவர்களால் எந்தப் பிரயோசனமும் இல்லை. புதிய தலைமைகள் உருவாக்கப்படவேண்டும் என்று வெளிப்படையாகவே கூறி உள்ளார் ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ.அப்படியானால் மக்கள் செல்வாக்கு இழந்தவர்களை வைத்துக் கொண்டு எப்படி வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்துவது என்று தயங்குகிறார் ஜனாதிபதி. வடமாகாணத்தில் தேர்தலை நடத்த வேண்டுமானால் வடபகுதி மக்கள் முன் நிற்கும் அதி முக்கியமான கேள்விகளுக்கு......


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகா ஒரு திறந்த வெளிக் கைதி

## நீதியரசர் சரத் என் சில்வா கூறுகிறார்

கொழும்பு,மே 24
சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டாலும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஒரு திறந்த வெளிக் கைதியே என்று முன்னாள் நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள விடுதலை பொதுமன்னிப்பின் அடிப்படையிலானது அல்ல. அரசியலமைப்பின் 34 ஆவது பிரிவின் கீழ் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டால், ஒருவர் மீதான குற்றச்சாட்டு, அதன் அடிப்படையில் குற்றவாளி என்று கருதப்பட்டு அளிக்கப்பட்ட தண்டனை, அதனால் ஏற்படும் தகுதி நீக்கம் ஆகிய அனைத்தும் நீக்கப்படும். ஆனால் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ளது அரசியலமைப்பின் 34 ஆவது பிரிவின் கீழான பொதுமன்னிப்பு அல்ல.



பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள விடு தலை பொது மன்னிப்பின் அடிப்படையிலானது அல்ல. பொன்சேகாவின் மூன்றாண்டு காலச் சிறைத் தண்டனையை ஜனாதிபதி நிறுத்தி வைத்துள்ளாரே தவிர, அவர் குற்ற வாளி என்று அளிக்கப்பட்ட தீர்ப்பு அப்படியே உள்ளது.

வெள்ளைக்கொடி வழக்கில், உயர்நீதிமன்றம் சரத் பொன்சேகாவுக்கு வழங்கிய தண்டனையை ஜனாதிபதி முற்றாக நிறுத்தி வைத்துள்ளமையே இங்கு நடந்துள்ளது.

சரத் பொன்சேகா குற்றவாளி என்று நீதிமன்றம் விதித்த மூன்றாண்டு காலச் சிறைத் தண்டனையை ஜனாதிபதி நிறுத்தி வைத்துள்ளாரே தவிர, அவர் குற்றவாளி என்று அளிக்கப்பட்ட தீர்ப்பு அப்படியே உள்ளது. இந்த விடயத்தில் அவருக்கு மன்னிப்பு ஏதும் வழங்கப்படவில்லை.

அதேவேளை இலங்கை இராணுவத்துக்கு கருவிகள் வாங்கியதில் ஊழல் செய்யப்பட்டதாக தொடுக்கப்பட்ட வழக்கு விவகாரத்தில் அவர் இராணுவ நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலானதண்டனையின் ஒரு பகுதியைத்தான் ஜனாதிபதி நிறுத்தி வைத்துள்ளார்.

இந்த இரு வழக்குகளிலும் அவர் வெவ்வேறு விதமாக நடந்து கொண்டுள்ளார்.

இராணுவ நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக் காரணமாகவே சரத் பொன்சேகா குடி யியல் உரிமைகளை இழக்கும் நிலை ஏற்பட்டது. இராணுவச் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்கப்பட்டவர்களுக்கு இத்தகைய சலுகையை வழங்க முடியாது என்று சட்டமாஅதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆனால் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளாமல் தண்டனைக் காலத்தை ஜனாதிபதி குறைத்துள்ளார்.

சரத் பொன்சேகா விடுவிக்கப்பட்டுள்ளபோதும் அவரிடமிருந்து பறிக்கப்பட்ட குடியியல் உரிமைகள் மீள வழங்கப்படவில்லை. இதன் மூலம் அவர் ஏழு ஆண்டுகளுக்குத் தேர்தல்களில் போட்டியிட முடியாத நிலை உள்ளது.

எனினும் சரத் பொன்சேகாவுக்கு ஏனைய அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடும் உரிமை உள்ளது- என்றார். (ச)

# 10 பொன்சேகாக்கள் வந்தாலும் அஞ்சோம்!

## பிரதியமைச்சர் லலித் திஸாநாயக்க சூளுரை

கொழும்பு, மே 24
ஒரு பொன்சேகா என்ன பத்து பொன்சேகா வந்தாலும் நாங்கள் பயப்படமாட்டோம் என்று நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க சூளுரைத்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறக்குமதிகள், ஏற்றுமதிகள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு தேங்காயின் விலை 65 ரூபா என ஐக்கிய தேசியக் கட்சி பிரசாரம்செய்தும் கூட நாட்டு மக்கள் அரசுக்கே ஆதரவளித்தனர்.

சரத் பொன்சேகாவை ஜனாதிபதிதான் இராணுவத் தளபதியாக நியமித்தார். ஆனால் சரத்பொன்சேகா அந்த நட்பைக் கருத்திற் கொள்ளவில்லை. வெளிநாட்டு சக்திகளுக்கு கட்டுப்பட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு பெரும்பாலான வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இன்று கூட அவர் போட்டியிட்டால் எமது ஜனாதிபதியை வெல்ல முடியாது.

எதிர்க்கட்சிகள் எவ்வாறுதான் கூட்டணி அமைத்தாலும் நாம் அஞ்சமாட்டோம்.

ஐக்கிய தேசியக் கட்சி இன்று துண்டுத் துண்டாகச் சிதறியுள்ளது. கொழும்பில் ஒருசாராரும் யாழ்ப்பாணத்தில் இன்னுமொரு சாராரும் மேதினக் கூட்டங்களை நடத்தியுள்ளனர்.

அமைச்சர்கள் மோசடிகளில் ஈடுபடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டும் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் அவர்களின் பெயர் விவரங்களை பகிரங்கமாக சொல்வதில்லை. - என்றார். (ச)

# மத்திய வங்கி அறிக்கை 'கப்ரால்' அறிக்கையா?

## விளக்கம் தருகின்றார் இரான் எம்.பி.

கொழும்பு, மே 24
மத்திய வங்கி அறிக்கை அல்ல அது கப்ரால் அறிக்கை என பல்கலைக்கழக மாணவன் ஒருவர் தன்னிடம் தெரிவித்தார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்,

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறக்குமதிகள், ஏற்றுமதிகள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

மத்தியவங்கி அறிக்கையை நான் கையில் எடுத்து வரும்போது பல்கலைக்கழக மாணவர் ஒருவர் என்னிடம், சேர் இது என்ன அறிக்கை எனக் கேட்டார். அதற்கு நான் மத்திய வங்கி அறிக்கையென பதிலளித்தேன். இல்லை... இல்லை. அது கப்ரால் அறிக்கை என்று அந்த மாணவன் என்னிடம் கூறினார்.

மாணவனின் கணிப்பு தற்போது சரியாகவே உள்ளது.

அரசிடம் தெளிவானதொரு பொருளாதாரத் திட்டம் இல்லாததன் காரணமாகவே நாம் அரசை விமர்சிக்கின்றோம். இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அண்மையில் நான் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்கு சென்றிருந்தேன். அங்கு 36 ஆயிரம் விதவைப் பெண்கள் உள்ளனர். அவர்களுக்கு அரசு 250-350 ரூபாவையே நிவாரணமாக வழங்குகின்றது. குறைந்த பட்சம் அவர்களுக்கு 500 ரூபாயையாவது அரசு வழங்கவேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் இந்த நிலைமையில் சென்றால் காலிமுகத்திடலை மட்டுமல்ல காலிக் கோட்டையையும் விற்கவேண்டிய நிலை ஏற்படும் -என்றார். (ச)


### தலைமைத்துவ பயிற்சி ஒத்திவைப்பு

கொழும்பு,மே24
உயர்கல்வி அமைச்சினால் நடத்தப்படும் தலைமைத்துவப் பயிற்சி கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி தலைமைத்துவப் பயிற்சிகளை நடத்த உயர்கல்வி அமைச்சு உத்தேசித்திருந்தது. இது தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்திடமும் ஆலோசனை கோரப்பட்டிருந்தது.

எனினும் பல்கலைக்கழக மாணவர்களை அனுமதிப்பது தொடர்பில் வழக்கு தொடரப்பட்டுள்ள காரணத்தினால் தலைமைத்துவ பயிற்சி வழங்குவதில்சிக்கல்நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் தலைமைத்துவ பயிற்சி நடத்தப்படும் திகதி குறித்து தீர்மானிக்கப்படும் என்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் பீ. ஜீ. ஜயசிங்க தெரிவித்தார்.



கட்டாருக்கு சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அந்த நாட்டில் வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

### தேசிய வைத்தியசாலை பணிப்பாளராக ஜயசிங்க

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளராக அனில் ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அனில் ஜயசிங்க தனது நியமனக் கடிதத்தை பெற்றுக் கொண்டுள்ளார். அடுத்த வாரம் கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர்அனில் ஜயசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

# வெளிநாட்டு வேலைக்கு தொழில் தகைமை கட்டாயம்

## செப்ரெம்பர் மாதம் முதல்

கொழும்பு, மே 24
வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காகச் செல்லும் இலங்கையர்களுக்கு தேசிய தொழில்சார் தகைமை மட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாடு மற்றும் நலன்புரி வசதிகள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இந்த நடைமுறை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கை ஊழியர்களின் தொழில் தகைமையை உயர்த்துவதன் மூலம் அதிக கேள்வியுடன் கூடிய சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனிவரும் காலங்களில் வீட்டுப் பணிப்பெண்களை அனுப்புவதற்குப் பதிலாக பயிற்றப்பட்ட ஊழியர்களை அனுப்புவது தொடர்பாகவே அதிக கவனம் செலுத்தப்படும்.

பயிற்றப்பட்ட ஊழியர்களை அனுப்புவதின் ஊடாக நாட்டுக்கு அதிகமான அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று அவர் கூறினார். (ச)

# நாட்டைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்

## பல்கலைக் கழக ஆசிரியர் சங்க சம்மேளனம்

கொழும்பு, மே 24
நாட்டின் அபிவிருத்திக்கு கல்வி மிக முக்கியமானதாகும். கல்வியியலாளர் சமூகத்துக்கு அரசு முன்னுரிமை அளிக்காவிட்டால் நாட்டை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்என்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

முதலாம் வகுப்புக்கு மாணவர்களை சேர்ப்பதில் சிறப்புரிமை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளருடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கலந்துரையாடினர். எனினும், விரிவுரையாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு அமைச்சின் செயலாளர் கோரியதாக குறித்த சங்கத்தின் பேச்சாளர் மஹிம் மெண்டிஸ் கூறினார்.

கல்வியியலாளர் சமூகத்தை இந்த அரசு மதிப்பதில்லை.

கல்வியியலாளர் சமூகத்தை அரசு மதிக்கவில்லை. பாடசாலை முதலாம் வகுப்புக்கு மாணவர்களை சேர்ப்பதில் தமக்கு சிறப்புரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசு நிறைவேற்றவில்லை என்று அவர் கூறினார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கக் கூடாது என சிலர் தெரிவிக்கின்றனர்.

ஆனால், ஏனைய அரச உத்தியோகத்தர்களைப் போன்று, பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு மருத்துவ திட்டம், போக்குவரத்துப் படி, அல்லது குறைந்த வட்டியிலான வீட்டுக்கடன் என்பன வழங்கப்படுவதில்லை என்று அவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு முருகன் சமாதி சிலை கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,மே 24

நவாலி கதிர்காம முருகன் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு குரு முருகன் சண்முகம் இராசமணியின் சமாதி சிலை கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவத்திரு.மா.பத்மநாதன் தலைமையில் இது இடம்பெறும்.

இந்தியா சென்னையில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட சமாதி குரு முருகன் சண்முகம் இராசமணியின் சிலையே இவ்வாறு ஆலயத்தில் வைக்கப்படவுள்ளது.

இறைபணி, சமூகப்பணி ஆன்மிகப் பணி- தொண்டுப் பணி என்பவற்றில் ஈடுபட்டு முருகனின் அருள்பெற்ற குரு முருகன் திருமதி சண்முகம் இராசமணி 1982-5-26 மகாசமாதி அடைந்தார்.

அவரது 30ஆம் ஆண்டு குருபூசைத் தினமான இன்று சமாதி சிலை வைத்துக் கும்பாபிஷேகம் செய்யப்படவுள்ளது.

இதேவேளை நேற்று நவாலி தெற்கு செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து வாகன பவனியாக குரு முருகன் சமாதி சிலை நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இன்று முற்பகல் 10 மணிக்கு குரு முருகன் அருளமுதம் எனும் மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளதுடன் ஆலய பிரதம குரு சிவத்திரு.மா.பத்மநாதனுக்கு 'கந்த சிரோன்மணி' எனும் பட்டமும் வழங்கப்படவுள்ளது. (ம-41)


## English Literature Classes

English Literature For :
A/L , O/L
Individual / Group Classes
Contact : 021 3002030

(18486)(6-8-9)



## பகிரங்க ஏலவிற்பனை

எமது நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்ட நல்ல நிலையில் உள்ள பின்வரும் பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

பொருள்களின் விவரம் வருமாறு

01. மாநாட்டு மண்டப கதிரைகள் (முதிரை)
02. கணினி மேசைகள்
03. ஏனைய தளபாடங்கள்

மேற்படி பொருள்களின் ஏலவிற்பனையானது (12.06.2012) முற்பகல் 10.15 மணிக்கு நடைபெறும். ஏலவிற்பனையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் மேற்படி எமது மன்றத்துடன் தொடர்புகொண்டு அலுவலக நாள்களில் 25.05.2012 முதல் 11.06.2012 வரை முற்பகல் 10 மணி முதல் மாலை 4 மணிவரை பொருள்களைப் பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருள்களைப் பெற விரும்புவோர் உடனடியாக முழுப்பணத்தினையும் எமது மன்ற கணக்காளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று அன்றையதினம் மாலை 4 மணிக்கு முன்னர் பொருள்களை எடுத்துச்செல்லவேண்டும்.

(இ/338) (45-6.9)

தலைவர்,
யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்,
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி




## முத்துலிங்கம் ராஜ்குமார்

(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி)

அன்பின் பிறப்பிடமே! அறிவின் சிறப்பிடமே!
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
இப் புவியில் அப்பா உம்மை நாம்
இழந்த துயரை ஈடு செய்ய முடியாமல்
தவிக்கின்றோம் இன்று வரை.

ஐயனார் கோயில்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

என்றும் நினைவில்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேர்த்தி.

(18484)(2-6-9)


# வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை

தென்மராட்சி, மே 24

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பின்வரும் இடங்களில் இன்றும் நாளையும் வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 8மணி தொடக்கம் 11 மணி வரை மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட பிள்ளையார் சனசமூக நிலையத்திலும், முற் பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை மிருசுவில் வடக்கு வன்னியர் சனசமூக நிலையத்திலும் இது இடம் பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி கெருடாவில் பாலமுருகன் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11 மணிக்கு மீசாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்திலும் இடம்பெறும்.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களமும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுடன் இணைந்து கருத்தடை சத்திர சிகிச்சையை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-9)

## சுய தொழில் கற்கைநெறி

பாடசாலையிலிருந்து இடைவிலகிய, உயர் கல்வியைத் தொடரமுடியாத மாணவர் களை மையமாகக் கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் கடன்களைப் பெற்று சுய தொழில் ஆரம்பிக்கக்கூடிய வகையில் இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தக் கற்கை நெறிகள் மாவட்டத் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் சுன்னாகம், காரைநகர், கரவெட்டியில் அமைந்துள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

ஆர்வமுள்ள மாணவர்கள் சுயவிவரக் கோவையை 31ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்டக் காரியாலயத்தில் நேரில் சமர்ப்பிக்கலாம். அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (ந)


## மரண அறிவித்தல்

### சிவராசசிங்கம் பரயோகஜெயம்

(ஜெயம் அண்ணா)

(ஓய்வு பெற்ற நூலகர் - ஹாட்லிக் கல்லூரி)

புலோலி கிராமக் கோட்டடியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசசிங்கம் பரயோகஜெயம் நேற்று (23.05.2012) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் சிவராசசிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற கனகசபை - தனபாக்கியம் தம்பதியரின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக்கணவரும், பராசக்தி, பரராஜசேகரம் (ஓய்வுபெற்ற ஆயுள்வேத வைத்தியர்),பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்), பரராஜசிங்கம் (ஆயுள்வேத வைத்தியர்), பார்வதியம்மாள் (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்) , பத்மயோகன் (ஓய்வுபெற்ற வரி அலுவலர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகராசா (ஓய்வு பெற்ற எழுதுநர்), நகுலேஸ்வரி, லோகேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (24.05.2012) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி

தகவல்:
மனைவி

(18485)(6-9-8)



## உடனடி வேலைவாய்ப்பு

**வானொலித் துறையில் அனுபவமுள்ளவர்கள் தேவை**

ஆர்வமுடையவர்கள் இன்று வியாழக்கிழமை சமுகம்தரவும்.

இன்று சமுகமளிக்கமுடியாதவர்கள் தபாலில் அல்லது மின்னஞ்சலில் தங்கள் சுயவிவரக் கோவையை அனுப்பிவைக்கவும்.

it@uthayan.com

**Onlineuthayan**
**359, Kasthuriyar Road, Jaffna**
**T.P 0215672222**

(C/340)



யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

## 90வது சர்வதேச கூட்டுறவு தினவிழா - 2012
## போட்டி விவரங்கள்

1. பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி

| பிரிவு | தரம் | விடயம் | நேரம் |
|---|---|---|---|
| கீழ் பிரிவு | 6,7 | ''நான் கண்ட கூட்டுறவுப் பெரியார்'' அல்லது ''நான் ஒரு கூட்டுறவுச் சங்கத் தலைவரானால்'' | 4 - 5 நிமிட |
| மத்திய பிரிவு | 8,9 | ''பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் அவசியம்'' அல்லது ''கூட்டுறவுக் கல்வி'' | 5 - 7 நிமிட |
| மேற்பிரிவு | 10,11 | ''கூட்டுறவுத் தலைமைத்துவம்'' அல்லது ''கூட்டுறவுக் கொள்கைகள் '' | 5 - 7 நிமிட |
| அதிமேற்பிரிவு | 12,13 | ''கூட்டுறவு மூலம் புதிய தொழிற்துறைகளை உருவாக்குவோம்'' அல்லது ''யாழ் மாவட்ட கூட்டுறவின் தற்போதைய நிலை ஒரு கண்ணோட்டம்....'' | 5 - 7 நிமிட |

மேற்குறித்த தலையங்கங்களில் விரும்பிய ஒன்றை தெரிவு செய்து பேசலாம்
ஒரு பாடசாலையில் இருந்து ஒரு பிரிவில் இரண்டு மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

2. வினாடி வினாப் போட்டி

விடயம் - கூட்டுறவு சம்பந்தமான அம்சங்கள் - 40 %
ஏனையவை - 60 %

ஒரு பாடசாலையில் இருந்து 3 பேர் கொண்ட ஒரு குழு மட்டும் பங்குபற்ற முடியும்.
* பாடசாலை மாணவர்கள் தாம் கல்வி கற்கும் ஆண்டை உறுதிப்படுத்தி அதிபரின் சிபார்சுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

அங்கத்தவர், பணியாளர்களுக்கு சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி மற்றும் கரப்பந்தாட்டம், கயிறு இழுத்தல், அஞ்சல் ஓட்டம், வலைப்பந்தாட்டம், பேச்சு, கட்டுரை, கவிதை போட்டிகள், குழுப்பாடல், நாடகம் ஆகியபோட்டிகளும், பனைத்தொழில் வல்லுனர்களுக்கான பனைமரம் ஏறுதல் போட்டி, கடற்தொழில் வல்லுனர்களுக்கான நீச்சல் போட்டிகளும் நடைபெறும். போட்டி தொடர்பான விவரங்கள் அடங்கிய விளம்பரங்கள் சகல கூட்டுறவுச் சங்கங்களிலும், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையிலும் பெற்றக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி 15.06.2012

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி - செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, வீரசிங்கம் கட்டடத் தொகுதி , 2 ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

போட்டிகள் நடைபெறும் இடம், திகதி பின்னர் அறிவிக்கப்படும்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

செயலாளர்,

(சி/336) (2-6-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய கால நிலை நிலவும்.

# இலங்கை அகதிகள் தடுத்து வைப்புக்கு ஆஸி. தொழிற்கட்சியினர் ஆட்சேபம்

ஆஸ்திரேலியாவில், நாட்டுக்கு அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையின் கர்ப்பிணிப் பெண்ணான ரஞ்சனி உட்பட்ட 50 பேரின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று தொழிற்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இந்தக் கோரிக்கையை தொழிற்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், குடிவரவுத்துறை அமைச்சர் கிரிஸ் பிரௌனிடம் விடுத்தனர்.

அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளவர்கள் காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் குடிவரவுத்துறை அமைச்சரும் நாட்டின் சட்டமா அதிபரும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

அதற்குப் பதிலாகப் பிரச்சினையைக் காலந்தாழ்த்தி வருகின்றனர் என்று தொழிற்கட்சியினர் குற்றம் சுமத்தினர்.

இலங்கைப் பெண்ணான ரஞ்சனி மெல்போனில் ஒரு வருடத்துக்கு மேலாக வசித்து வந்த நிலையில் அவரின் இரண்டு பிள்ளைகளுடன் ஆஸ்திரேலிய புலனாய்வுத்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை மோசமான செயல் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதற்கிடையில் ஆஸ்திரேலிய அரசு இலங்கை



அகதிகளின் விவரங்களை இலங்கை அரசுடன் பரிமாறிக் கொண்டதாக வெளியான செய்தி குறித்தும் நேற்றுமுன்தினம் விமர்சனம் செய்யப்பட்டது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை ஆஸ்திரேலிய புலனாய்வுத் துறைத் தலைவர் மறுத்துள்ளார். (ந)

## மோட்சம் என்பது ஏதோ ஒரு தெய்வீக அந்தஸ்தை அடைவதைக் குறிக்கவில்லை

தெய்வீகம் உன்னுள்ளே இருக்கிறது. நீ செய்ய வேண்டியது, அதை வெளிப்படுத்துவது மட்டுமே. இல்லாத ஒன்றை வெளியில் கொண்டுவர முடியாது. இருக்கின்ற ஒன்று இல்லாமல் போகமுடியாது. எல்லா விடயங்களும் இங்கேயே இப்பொழுதே இருக்கின்றன. ஆகவே எந்தவித தேடுதலுக்கும் எந்தவித சாதனைகளுக்கும் தேவை இருக்கவில்லை. நீ செய்கின்ற எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணமாகச் செய். என்னுடைய வேலை கடவுளுடைய வேலை என்று வேறுபடுத்தாதே. ஒரு வித்தியாசத்தை உண்டாக்குகிற பொழுது வேறுபாட்டின் காரணமாக அங்கே வெறுப்புக்கு இடம்கொடுக்கிறாய். வெறுப்பு வந்துவிட்டால் அங்கே தெய்வீகம், தூய்மை, ஒருமை என்பவற்றுக்கு இடமே இல்லை. கடவுளை உன் இதயத்தில் அரசோச்ச வைப்பாயானால் அங்கே வேறு தப்பான எதற்குமே இடம் இருக்காது. ஆனால் இன்றைய ஆத்மீகக் குறிக்கோள் உள்ளவன், தனது இதயத்தை ஒரு சங்கீதக் கதிரையாகக் கருதுகிறான். அவர்கள் ஒரு சுவாமியில் இருந்து இன்னொரு சுவாமிக்கும் போகிறார்கள். ஒரு சாதனையிலிருந்து இன்னொரு சாதனைக்கு மாறுகிறார்கள். இத்தகைய கேளிக்கை விளையாட்டுக்களால் என்ன பயன். எல்லாம் (வாழ்க்கையையும், நேரத்தையும்) வீணானவைகள் ஆக்குபவைதான். ஓர் இதயம், ஓர் எண்ணம், ஒரு கடவுள், ஓர் இலக்கு, அல்லா, யேசு, புத்தர், ஜோராஷ்டர், குருநானக் என்று எதை உச்சரித்தாலும் எல்லாம் ஒன்றையே குறிப்பன.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

# மது வரி வருமானம் அதிகரிப்பு

வடக்கு கிழக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மதுபான சாலைகளினால் மதுபான வருமான வரி அதிகரித்துள்ளதாக மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் மதுபான விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமான வரி 55.3 பில்லியன் (5530 கோடி) ரூபாவாக அதிகரித்துள்ளதென இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மதுபான விற்பனையில் மிகப்பெரிய அதிகரிப்பு ஏற்பட்டமையே இதற்குக் காரணம்.

வடக்கு கிழக்கில் புதிய விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டமை, வெளிநாட்டவர்களின் வருகை அதிகரித்தமை ஆகியவையே மதுபான விற்பனையில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

2011 ஆம் ஆண்டில் மதுபான உற்பத்தி 9.1 வீதத்தாலும், ஏனைய மதுபான உற்பத்தி 22.5 வீதத்தாலும் அதிகரித்துள்ளது. (ந)

## வியாபார கணித பரீட்சை

யாழ்ப்பாணம், மே 24

உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவகத்தின் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா முதலாம் வருட மாணவர்களுக்கான வியாபாரக் கணிதப் பரீட்சை நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக உயர் தொழில் நுட்ப நிறுவக பணிப்பாளர் எஸ்.ஐ.எம். சஹாயன் குறிப்பிட்டுள்ளார். (ம-16)

## கணித மதிப்பீட்டுப் பரீட்சை

தென்மராட்சி, மே 24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆறாந்தர மாணவர்களுக்கான கணித மதிப்பீடு-03 பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான வினாத்தாள் பொதிகளை இன்று சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் கணித மதிப்பீடு-04 எதிர்வரும் ஜூன் 8 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## சமய சந்நிதிகளில்

கலைநகர், வட்டுவடக்கு காங்கேயம்பதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய (சின்னம்மன்) அலங்காரத் திருவிழா கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. 11 ஆம் திருவிழா 26 ஆம் திகதி அன்று அம்பாள் பாற்குடப் பவனிவரும் காட்சியும், அதனைத்தொடர்ந்து சங்காபிஷேகமும் தீர்த்த உற்சவமும் நடை பெறும்.

* * *

தென்மராட்சி, மே24

சாவகச்சேரி சப்பச்சிமாவடி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-9)

* * *

சுழிபுரம், மே24

சித்தங்கேணி, மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்தக் கொடியேற்றம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. தேர்த் திருவிழா ஜூன் மாதம் 3 திகதியும், அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந-28)

* * *

சங்கானை ,வெல்வில், இலுப்பைத் தாழ்வு கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாஇன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11தினங்கள் நடைபெறும்

சப்பறத்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதிவெள்ளிக்கிழமை மாலை இடம் பெறும். மறுநாள் 2ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திரு விழாவும் அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (வ)

**கேபிள் TV விற்பனைக்கு**

காரைநகரில் பிரபலமான கேபிள்T.V நிறுவனத்தின் இணைப்புப் பெற்ற கேபிள் T.V உரிமையாளர் தனது இணைப்பினை விற்கவுள்ளார்.

தொடர்புகளுக்கு : 077 3146078

(18481)(6-9-8)

**உடனடி வேலை வாய்ப்பு**

01. தொழில் நுட்பவியலாளர் (Technician)
குளிர்சாதனப்பெட்டி (Refrigetrator)
வளிப்பதனாக்கி (Airconditionar)

02. விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)
இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் தேவை.

சம்பளம் + Commission பேசித் தீர்மானிக்கப்படும்.

உரிய ஆவணங்களுடன் நேரில் சமூகம் தரவும். காலம் : 24.05.2012

Jaffna Electrical - Show Room
Authorized Dealer for Abans Ltd.
141,PowerHouseRoad,Jaffna.
T.P. 021 222 5766, 021 222 8378

(சி/337) (45.6.9)

**வேலைக்கு ஆள் தேவை**

முல்லைத்தீவில் இயங்கிக்கொண்டிருக்கும் பிரபல்ய உணவகம் ஒன்றிற்கு

* சமையலாள்
* சப்பிளேயர்
* றொட்டி மேக்கர்

தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு : 077 5360958

(C/334)(6-9-8)

**வாடகைக்கு**

கிளிநொச்சி நகரில் A9 நெடுஞ்சாலையில் கச்சேரிக்கு அருகில் 11 அடி அகலம் 50 அடி நீளமான வியாபார ஸ்தலம் (கடை) 02 அறைகள் மற்றும் சமையலறை, கிணற்றுடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு : 077 4061304

(16837)(6-9-8)

# மரண அறிவித்தல்

## இராமநாதன் வாலாம்பிகை



யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் வாலாம்பிகை (21.05.2012) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான பீதாம்பரம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான பொன்னையா - தெய்வானைப்பிள்ளை (இணுவில்) தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராம நாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருபுரைநாதன் மற்றும் புவனாம்பிகை, வைத்தியநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பரஞ்சோதி (ஆசிரியர் -சிவநகர்), சாரதாதேவி (வவுனியா), காலஞ்சென்ற சிவசோதி மற்றும் அருட்சோதி (கனடா), மோகனதாஸ் (சுவிஸ்), சுமதி (கனடா), ரஜனி (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), சச்சிதானந்தம் (லண்டன்), மீனலோஜினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், நாகேஸ்வரி (கிளி/சிவநகர்), ஞானலிங்கம் (வவுனியா), சாந்தி (சுவிஸ்), பாலச்சந்திரன் (கனடா), மதி (சுவிஸ்), காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் கணேசலிங்கம் (சுவிஸ்), கண்ணன் (சுவிஸ்), கதிர்காமநாதன் (சுவிஸ்), வசந்தி (லண்டன்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இன்று (24.05.2012) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
0014 162873116 - விஜயா

தகவல்:
பரஞ்சோதி (ஆசிரியர்- மகன்),
இல. 129, சிவநகர் உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

(16836)(6-9-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறருக்கு உதவுவதே தனிச்சிறப்பு

இன்றைய சமுதாயத்திலே மனிதாபிமானம், பிறருக்கு உதவும் மனப்பான்மை என்பன சற்றுக் குறைவாகவே காணப் படுகின்றன. மனிதாபிமானம் என்பது என்ன? வீதியில் ஒருவர் அடிப்பட்டுக்கிடக்கிறார் என்றால் அதற்காக பரிதாபப்படுபவர்கள் பலர் இருப்பினும் உதவ வருபவர்கள் ஒரு சிலரே.


அந்த இடத்திலே நாமுண்டு நமது வேலையுண்டு என்று இருப்பவர்களும் இருக்கின்றனர். உதவி செய்யப் போனால் பின்னர் எம்மைத் தேடி உபத்திரமும் வந்துவிடும் என நினைப்பவர்களும் இருக்கிறார்கள். உபத்திரம் வந்தாலும் உதவுதல்தான் முக்கியம் என்பதை விளங்குதலே மனிதாபிமானம்.

இறைவன் படைப்பிலே உயிர் என்பதே மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு ஜீவராசிகளும் படைக்கப்பட்டிருப்பது தமக்காக மட்டுமல்ல. பிறருக்கு உதவுவதற்காகவும்தான்.

பிறருக்காக வாழும்போது கூட ஒரு தனிச் சுகம் இருக்கிறது. பிறருக்கு உதவும்போது பணம் கொடுத்து உதவுதல் மட்டுமல்ல, கஷ்டப்படும் நேரத்தில் ஆறுதலாக பேசுதல், தைரியம் கொடுத்தலும்கூட உதவிதான். நம்மால் இயன்ற அளவு பிறருக்கு உதவவேண்டும். மனிதனாகப் பிறந்ததற்கு ஓர் அர்த்தம் உண்டாகும். மனிதனாகப் பிறந்த அனைவரும் மனிதாபிமானம் மிக்கவர்கள்தான். ஆனால் அதைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் தான் இல்லை.

*''காலத்தினால் செய்த நன்றி*
*சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது''*

தேவைப்படும் அதேவேளையில் செய்யப்படும் உதவி அளவால் சிறிது எனினும் அது தரும் பயனோ உலகைவிடப் பெருமைக்குரியது.



சா.ஜிந்துஜா, கோண்டாவில்


## நீ மட்டும் எப்படி?

உன்னைப் பார்த்து
பொறாமைப்படுவதா?
உனது பேரின்பத்தில்
பெரும்பங்கு கொள்வதா?
என்னதான் செய்வது நான்?
என்னுள் பல கேள்விகள்
எழுகிறது!
நேற்றுவரை
என்னருகில் தான் நீயும்
பயணித்தாய்
நானும் நீயும் ஒரே
நேரத்தில் தான்
ஒரே இலக்கை நோக்கி
ஓடிக்கொண்டிருந்தோம்
எதிர்ப்பட்ட சவால்களை
எதிர்கொண்டோம்
இடிப்புகளில் துவளாது
முன்னேறினோம்
இயன்றவரை
இன்று நீ மட்டும்
உனது இலக்கை
அடைந்துவிட்டாய்
நான் மட்டும் இங்கே
முறிந்து போன கால்களுடன்
மூலையில் உட்கார்ந்தபடி
வெறித்துக் கொண்டிருக்கிறேன்
விசாலமான சுவர்களை!
தூரநோக்கான நம் பயணத்தில்
உன்னை விட அதிக
முன்னேற்றத்தை
நான் அடைந்திருந்தேன்
உன்னிலும் அதிக வேகத்துடன்,
விவேகத்துடன்
நான் செயலாற்றினேன்
பின்பு ஏன் எனக்கு
இந்தக் ''தோல்வி''
அவர்களின் கழுகுக் கண்கள்
என்னை மேய்ந்துவிட
உன்னைப் போல்
''எண்ணெய் வளம்''
எனும் கவர்ச்சி ஆடையை நான்
உடுத்தியிருக்கவில்லை
உன் வெற்றிக்கு
உற்ற துணையாய் நின்றவர்கள்
உன்னை அபகரிக்கும் நாள்
வெகுதொலைவில் இல்லை
ஐ.நா. சபை அங்கீகரித்துவிட்டது
உன்னைத் தனிநாடாக
விசாரிக்கத் ''துப்பற்ற'' வெற்று
அறிக்கைகள் மட்டும் இங்கே
நமக்கு குற்றவாளிகள்
இனங்காணப்பட்ட பின்பும்
குற்றங்கள் ஆதாரங்களோடு
நிரூபிக்கப்பட்ட பின்பும்
இன்னமும் தொடர்கின்றன
இழுத்தடிப்புக்கள்!
புதைகுழிகட்கு ''விதை'' களாக
புதுக் கவிதைகட்கு
பேசுபொருளாக
எம்மை ஆக்கிவிட்ட எம் இறைவன்
எம் மண்ணுக்கடியில்
ஒரு புதையலை
பொன்னாகவோ,
பிளாட்டினமாகவோ
விதைத்து விட்டிருந்தால்
விளைந்திராது பேரவலம்
நிலைகுலைந்து நின்றபோது
நிமிர்ந்தும் பார்த்திடா
''குருடர் வர்க்கம்'' நிறைந்திராது
பூட்டி வைத்த துன்பங்களை
நினைந்து நினைந்து
புகைந்திராது எம் இருதயம்

கி.வைதேகி,
யாழ்ப்பாணம்.

# பெண்களின் கல்வித்தரம் வளர்ச்சி பெற்றமைக்கான காரணம் என்ன?

**ஆண், பெண் இருபாலாரும் எமது நாட்டின் எதிர்கால விளக்குகள். அந்த இரு விளக்கும் அணையாமல் இருக்க எதிர்காலம் நன்றாக இருக்க இந்தக் கால கட்டத்தில் படிப்பதன் மூலம்தான் சிறந்த பெறுபேறை பெறமுடியும்.**



இன்றைய ஆண்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைய முக்கிய காரணம் கையடக்கத் தொலைபேசியே ஆகும். இன்றைய உலகில் சிறுவர் தொடக்கம் வயோதிபர் வரை கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்துகிறார்கள்.

அதிலும் தொலைபேசியில் இணைய வசதி இருப்பதால் தேவையற்ற விடயங்களை அறிவதால் இவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் குறைகிறது. வேறு விடயத்தில் ஆர்வத்தை செலுத்துகிறார்களே தவிர கல்வியில் இவர்களின் ஆர்வம் குறைந்து போகிறது.

இந்த நிலையில் தொலைபேசி ஒரு தொல்லைபேசியாக பயன்படுகிறது.

அத்துடன் இவர்களுக்குக் கிடைக்கும் நண்பர்களும் பண்பற்றவர்களாக இருப்பதால் அவர்களும் நண்பர்களின் வழியே போகிறார்கள். மகிழ்ச்சியாக இருப்பதாக எண்ணி தவறான பாதையிலேயே செல்கின்றனர்.

ஆனால் பெண்களோ பொறுமை குணம்மிக்கவர்கள். அவர்கள் தமது கல்வியை உயிர்மூச்சாகக் கருதி கற்று தனது இலட்சியப் பாதையை நோக்கியே நடக்கின்றனர். தமது இலட்சியத்தை அடையவே கல்வியை கற்கின்றனர்.

ஆண், பெண் இருபாலாரும் எமது நாட்டின் எதிர்கால விளக்குகள். அந்த இரு விளக்கும் அணையாமல் இருப்பதற்கு எதிர்காலம் நன்றாக அமைய இந்தக் கால கட்டத்திலே கற்பதன் மூலம்தான் சிறந்த பெறுபேறைப் பெறமுடியும்.

எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டியவர் ஆண், பெண் இருபாலாரும்தான். பரீட்சையில் கோட்டைவிட்டுப் பின் கண்ணீர் சிந்துவதால் எதுவும் நடந்துவிடுவதில்லை. எதையும் திட்டமிட்டுச் செய்தால் இலக்கை அடையமுடியும். நாளை என்பதை உங்கள் மனதில் இருந்தே அழித்துவிடுங்கள். இன்றே முடிக்க வேண்டும் என்று திட்டமிடுங்கள். வெற்றி நிச்சயம்.

கல்வி பயிலும் காலத்தில் பல்வேறு தடைகள் வந்தாலும் அவற்றைத் தாண்டி வந்தால் கல்வி ஞானம் என்பது அர்த்தமாகிவிடும். இவற்றை கடந்து விட்டால்வாழ்க்கை நிச்சயம் பிரகாசமாகிவிடும்.

சி.அகல்யா, தரம்-11,
இந்து மகளிர் கல்லூரி.

## நட்பு

**காலங்கள் சென்றாலும் நினைவுகள் மறக்காது**
**உறவுகள் பிரிந்தாலும் நாம் நேசிக்கும்**
**நண்பர்கள் எங்களை விட்டு பிரியமாட்டார்கள்**
**பாலத்தின் உறுதியைப் - போல்**
**நட்பின் உறுதியாய் நட்பின் இலக்கணமாய்**
**நாங்கள் இருப்போம்- எங்கள்**
**நட்பு என்றும் தொடரட்டும்...**

ச.புவித்ரா,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :-........................

முகவரி :- ..........................

.....................................

........................ ........................
திகதி கையொப்பம்

இளவல்கள் வட்டம்

*விமர்சனம்*

அண்மையில் வெளியான ஜீ.சி.ஈ (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி, ஆண்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்தமைக்கும் பெண்களின் கல்வித் தரம் முன்னேறியமைக்குமான காரணம் என்ன?
உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.
தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகரின் கொலை தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் கைது

கொழும்பு,மே 24

புத்தளம் ஆனமடுவவில் இரு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலை தொடர்பாக மேல் மாகாண சபையின் ஐ.ம.சு.கூட்டமைப்பு உறுப்பினரான துஷாரா பெரேராவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

வத்தளையில் நேற்று முன்தினம் மாலை அவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொலை செய்யப்பட்ட வர்த்தகருடன் இணைந்து இந்த மாகாண சபை உறுப்பினர் வர்த்தகமொன்றில் ஈடுபட்டார். இவர்கள் நீரிழிவு நோய்க்காகப் பயன்படுத்தப்படும் சுதேச மருந்தொன்றை ஏற்றுமதி செய்தனர்.

இந்த வர்த்தகருடன் ஏற்பட்ட மோதலையடுத்து அவரைக் கொலை செய்வதற்காக இராணுவத்திலிருந்து தப்பிவந்த மூவரைச் சந்தேக நபர் நியமித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கொலையின் பின்னர் கைது செய்யப்பட்ட மூவரும் இராணுவத்திலிருந்து தப்பி வந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

**கைது செய்யப்பட்ட மூவரும் இராணுவத்திலிருந்து தப்பி வந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.**

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர், மேற்படி அரசியல்வாதியின் தொடர்பைப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். மேற்படி மாகாண சபை உறுப்பினரை புத்தளம் நீதிவான் முன்னிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னிலைப்படுத்தவுள்ளனர்.(த)

# 7 ஆண்டுகளுக்குப் பொன்சேகா தேர்தலில் போட்டியிட முடியாது

## சட்ட மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு,மே 24

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா 7 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட முடியாது எனச் சட்ட மா அதிபர் ஈவா வனசுந்தர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சரத் பொன்சேகாவுக்கு நிபந்தனை அடிப்படையிலான பொது மன்னிப்பே வழங்கப்பட்டுள்ளது. 7 ஆண்டுகள் வரையில் அவர் தேர்தல்களில் போட்டியிட முடியாது. எனினும் தேர்தலில் வாக்களிக்க முடியும்.

சரத் பொன்சேகா சிறைத் தண்டனை அனுபவிக்கப்பட வேண்டிய காலத்திற்கே ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியுள்ளார். இதன்படி, அவர் சிறைத் தண்டனை அனுபவித்த நபர் ஒருவராகவே கருதப்பட வேண்டும்.

தப்பிச் சென்ற படை வீரர்களுக்கு அடைக்கலம் வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் சரத் பொன்சேகாவுக்கு எதிராக தொடர்ந்தும் நீதிமன்றில் வழக்கொன்று விசாரணை செய்யப்பட்டு வருகிறது-என்றார். (த)

## பொன்சேகாவின் விடுதலை அரசியலில் பெரும் தாக்கம்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலை அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சரத் பொன்சேகா அரசியலில் மீள் பிரவேசம் செய்தால் அது அரசியலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்ட காலங்களிலும் சரத் பொன்சேகா அரசியல் ரீதியான கருத்துக்களை வெளியிட்டு வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே சரத் பொன்சேகாவை அரசியலிலிருந்து விலக்கி வைப்பது நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, சரத் பொன்சேகா விடுதலை விவகாரத்தில் பலர் உரிமை கோரிய போதிலும் ஜனாதிபதியின் தீர்மானத்தின் அடிப்படையிலேயே அவர் விடுதலை செய்யப்பட்டார் என வாசுதேவ மேலும் தெரிவித்தார்.

(த)

## மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

பல்கலைக்கழக 2010/2011 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் குறித்த மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மேற்படி மாணவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கடிதம் கிடைக்கப் பெறாத மாணவர்கள் யாழ். மாவட்ட நிர்வாகக் கிளையுடன் தொடர்புகொண்டுஉறுதிப் படுத்திக் கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.(16-14)


கணபதி துணை

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

மஹோற்சவம் - 2012



24.05.2012 வியாழக்கிழமை

தேர்த்திருவிழா

காலை 10.00மணி

மாலை 8.00மணி தென்னிந்திய புகழ் செல்வி B.சுசித்திரா அவர்களின் இசைச் சொற்பொழிவு இடம்பெறும்.

www.inuvilinfo.com இணுவில்

(சி/1602)

பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க.

CLTP Unit இனால் Group Classes ஆரம்பிக்கப்படவுள்ளன.

- Java/ SQL Server/ JSP/ Serverlet.
- VB.Net/ SQL Server
- PHP/ MySQL/ HTML/ JavaScript
- C#/ SQL Server (Windows Application)

மேலதிக விபரங்களுக்கு

Address: 204, Brown Road, Jaffna.
Contact: 021-222 1807, 077 251 7223

Note:- குறுகிய காலத்தில் முழுமையான பயிற்சிநெறி. 26.05.2012லிருந்து ஆரம்பமாகின்றது. (18493)

கார் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள KO-XXXX தொடர் இலக்கத்தையுடைய HONDA (HYBRID) Civic சில்வர் கலர் கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0212230268 (18500)(15-14)

விற்பனைக்கு

கமடா A3 மொடல் 612XL, கெஸ்ரனர் A4 ஆகிய 2 ஒவ் செற் மெசின்கள் விற்பனைக்குண்டு

T.P : 075 0497894

(18491)(6-8)

மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி - 2012

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் 93ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி 2012

Champions - 25000 + வெற்றிக்கேடயம்
Ranner up - 15000 + வெற்றிக்கேடயம்

விண்ணப்பப்படிவங்களைப் பெற்று ஒப்படைக்க வேண்டிய இடம்- Royal Sports பிரதான வீதி, நெல்லியடி

(c/347)(6-8)

வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வைத்தியசாலைக்கு அருகில் 4 பரப்புக் காணியில் 5 அறைகள் கொண்ட வீட்டுடன், 5 பலா, 12 தென்னை, 4 மாமரம் அடங்கலாகவும், வைத்தியசாலை, கோயில், பாடசாலை, சுப்பர் மார்க்கட் போன்றவற்றுக்கு அண்மித்ததாகவும் உள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 077 7349357

(18488)(6-8)

Tilko Jaffna City Hotel (Pvt) Ltd.

- திருமண மண்டபம்
- மணவறை அலங்காரம்
- மணப்பெண் அலங்காரம்
- திருமண கார் சேவை
- Honeymoon Rooms

Tilko Jaffna City Hotel (Pvt) Ltd.
70/6, K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 5969, 077 0764385
0776943479

(C/TT02)


# மரண அறிவித்தல்கள்



## செல்வி பொன்னுத்துரை இராஜேந்திரம் அலிஸ் எலிசபெத்

உடுவிலைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட செல்வி பொன்னுத்துரை இராஜேந்திரம் அலிஸ் எலிசபெத் (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்) நேற்று முன்தினம் (22.05.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை இராஜேந்திரம்- மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் விக்ரோறியா (பிரான்ஸ்), ஞானமணி, ஜோசப்(ஓய்வு பெற்ற பிரதம அதிகாரி நாடாளுமன்றம்), தங்கமணி, ஜோர்ஜ் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர் யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி), வேதநாயகம் (லண்டன்) செல்வநாயகி (பிரதம இலிகிதர் நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்வராஜா, அந்தோனிப்பிள்ளை, சந்திராதேவி மற்றும் ஷீலா (நீதி அமைச்சு, கொழும்பு) தவயோகராஜா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் இ.போ.ச) அஞ்சலினா (லண்டன்), மனோகரன் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் துறைமுக அதிகாரசபை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இரங்கற்திருப்பலி இன்று (24.05.2012) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உடுவில் செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்*
*குடும்பத்தினர்.*

*ஆர்க் லேன்,*
*உடுவில்,சுன்னாகம்.* (18498) (15-14)



## திருமதி திரவியம் பரமசாமி

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பைச் சேர்ந்த திருமதி திரவியம் பரமசாமி கடந்த (21.05.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டி பரமசாமியின் அன்பு மனைவியும் பாலகௌரி, பாலயோகினி, பாலேந்திரா (மிட்லண்ட் சாவகச்சேரி) பாலசௌந்தரி, பாலஜமுனா, மந்தாகினி, லோகேஸ்வரி, லோகேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயும் தர்மலிங்கம் (இளைப்பாறிய கல்வி அலுவலக நிர்வாக அலுவலர்) சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்) பவானி ஜெயந்திரன் (லண்டன்), பாஸ்கரன் (லண்டன்), பாக்கியராஜா (பிரான்ஸ்), சிவபரன் ஷீலா ஆகியோரின் பாசமிகு மாமியும் துரைச்சாமி- காந்திமதி, பரமசாமி- பவளராணி, இராமச்சந்திரா, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் குலேந்திரன்-மகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2012) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்*
*பாலேந்திரா*
*(மகன்)*

*கந்தையா வீதி,*
*சாவகச்சேரி.* (சி/346) (15-14)

# மரண அறிவித்தல்



## செல்லையா பத்மநாதன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பத்மநாதன் நேற்று (23.05.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விக்னராஜா (சட்டத்தரணி), பரமேஸ் வரன் (கணக்காளர்), ராஜேந்திரா, சுந்தரலிங்கம் மற்றும் தர்மலி ங்கம் (கனடா), சொக்கலிங்கம் (கனடா), தியாகலிங்கம் (கனடா), பத்மாவதி(கனடா), லீலாவதி, கமலாதேவி (மலேசியா), சிவசோதி(கனடா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மேற்கு தம்மளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்*
*ஞா.மனோகரன்*
*(மச்சான்)*

செல்லகிரி
அளவெட்டி தெற்கு. அளவெட்டி (18497) (15-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலராகி | விதையாகி |
|---|---|
| 17 | 10 |
| ★ | ★ |
| 10 | 04 |
| ★ | ★ |
| 1959 | 2012 |

அமரர் நாகமுத்து சோதிலிங்கம்

**எமது அருமை அப்பாவே நீங்கள் எம்மை வீட்டுப் பிரிந்த அந்தக் கொடிய நாளை மறக்கமுடியுமா அப்பா! எம் உயர்வுக்காக ஓடி ஓடி உழைத்தீர்கள் கடலின் ஆழத்தை அளக்கலாம் ஆனால் உங்கள் மீது வைத்த பாசத்தின் ஆழத்தை அளக்க முடியுமா ? அப்பா! உங்கள் உயிர் இருக்கும்வரை கால்கள் ஓயவில்லை கண்கள் உறங்கவில்லை உங்கள் சிந்தை தூங்கவில்லை நித்தம் கண்ணீருடன் கசப்பான வாழ்க்கை வாழ்கிறோம் அப்பா உங்கள் ஆத்மா இறைவனடிசேர பிரார்த்திக்கின்றோம் அப்பா.**

10.04.2012 செவ்வாய்க்கிழமைஅன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு அமரர் நாகமுத்து சோதிலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (24.05.2012) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும். நாளை மறுதினம் (26.05.2012) சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிச்சடங்கில் பங்கேற்ற அனைவருக்கும், இரங்கல் உரையாற்றிய பெரியோர்களுக்கும், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் மற்றும் பல்வேறு வழியில் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதய பூர்வ நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உங்கள் ஆருயிர் செல்வங்கள்:
நிஷோ, நிது, நிவேது, நிவேகா
குடும்பத்தினர்

பருத்தித்துறை வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி
(18495) (8-14)

# மரண அறிவித்தல்



## அப்புத்துரை தங்கமுத்து

உடுவில் சோமராந்தோட்டத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், மல்லாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை தங்கமுத்து நேற்றுமுன்தினம் (22.05.2012) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசன்- தெய்வனை தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பத்மாவதி, லீலாவதி, லலிதாவதி, ஹேமலதா ஆகியோரின் அன்புத் தாயும், உருத்திரன், சிவமூர்த்தி, யோகேஸ்வரன், தமிழ்ச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமியும், ஹரிணி, ரவிசங்கர், ஹர்ஷயன், ஜினேஸ், அபிராமி, சிவகாமி, சிவங்கரி, ஆதிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திவ்யேஷின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்லாகம் (18487) (45.6.9) தகவல்: குடும்பத்தினர்

# தியாகிகள் சபைக்கு புதிய குருமார்

குருநகர், மே 24

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த நான்குஅருட்பணியாளர்கள் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். புனிதமரியன்னை பேராலயத்தில் புதிய குருக்கள் மாராக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் திருநிலைப்படுத்தப் படவுள்ளார்கள்.

யாழ். புனித யோவான் ஆலயப் பங்கைச் சேர்ந்த சி.பற்றிக் லியோ, குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த சி.அருள் சுதர்சன், நெடுந்தீவுப் பங்கைச் சேர்ந்த பா.அன்ரன், பருத்தித்துறைப் பங்கைச் சேர்ந்த ஜெ.றொபின்சன் சதீஸ்குமார் ஆகியோர்களே இன்று புதிய குருக்களாக திருநிலைப்படுத்

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 24

பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இரண்டாவது கருத்தரங்குத் தொடர் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலக்கம் 84, ஜும்மா பள்ளிவாசல் வீதியிலுள்ள ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக இயக்குநர் தே. தேவானந்தன் அறிவித்துள்ளார்.

"இலங்கையில் பதின்மூன்றாவது சட்ட சீர்திருத்தம் இன முரண்பாட்டுக்கான தீர்வாக அமையுமா?" என்ற தலைப்பிலான இந்தக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கு.குருபரன் கருத்துரைகளை வழங்கவுள்ளார். (16)

## முன்னாயத்தக் கூட்டம்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் தொடர்பான முன்னாயத்த ஏற்பாடுகள் கலந்துரையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாநகர முதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார். (16)


# கூறுவிலை கோரல்

சபையின் கைதடி பனைவள ஆராய்ச்சி நிலையத்திற்கு கீழ்வரும் வேலைகளுக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. எனவே இதில் ஆர்வமுள்ள தகுதியானோர் (2012.05.31) ஆம் திகதிக்கு முன்னர் தபாலிலோ அல்லது நேரடியாகவோ **தலைவர் பனை அபிவிருத்திச்சபை, தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

01. கட்டடத்தின் கீழ், முதலாம் மாடி யன்னல்களுக்கு (1440.0 சது.அடி) தரமான துணியால் கேட்டின் வேலை.
02. கட்டடத்தைப் பார்வையிட்டு ஏற்ற விவரிக்கப்படும் அளவுப் பிரமாணத்திற்கு அலுமினியக் கண்ணாடி பாட்டிசன் வேலை.

தலைவர்,
பனை அபிவிருத்திச்சபை

(C/343)(6-8)

*அன்பார்ந்த யாழ். பொதுமக்களே!*
*இதோ உங்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!!!*

அன்றாட வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் தவிக்கிறீர்களா?
உங்கள் எதிர்காலத்தை நினைத்து பயமாக உள்ளதா ?
இனியும் தாமதிக்க வேண்டாம்! எங்களுடன் இணையுங்கள்!
நாம் உங்களுக்கு வழிகாட்டுகிறோம்!!

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்**

ஒரே சந்தர்ப்பத்தில் (இலவச அழகுக்கலை பயிற்சி மற்றும் பகுதிநேர சுயதொழில் வாய்ப்பு)
★ நிரந்தவைக்கு சட்டப்பது
அறிமுகக் கூட்டம்

திகதி : 29.05.2012
நேரம் : 2.30 மணி
இடம் : 187/30, பூவியான் ஒழுங்கை ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் (சத்திரசந்தி - கோட்டை வீதி)
(18492)(8-14)

**தொடர்பு: செல்வி 0112623481, 071 4228241**


# மரண அறிவித்தல்கள்



## சுந்தரலிங்கம் ஜெயச்சந்திரன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் ஜெயச்சந்திரன் கடந்த (21.05.2012) திங்கட் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் மதியாபரணம் தம்பதியரின் இரண்டாவது மகனும், இந்திராணியின் பாசமிகு துணைவரும் துஷ்யந்தன், கபிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சு. நவரத்தினம் (நோர்வே) திருமதி பா.பத்மாவதி (லண்டன்), சு.ஜெபநேசன், சு.ஜெயலிங்கம் (பின்லாண்ட்) சு.ஜெயக்குமார், சு.ஜெயமூர்த்தி(கனடா), ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மதிவதனி, பாலசுப்பிரமணியம், சுதர்சினி, சைவகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2012) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*பண்ணாகம், சுழிபுரம்.* (18496) (15-14)
தகவல்
மனைவி, பிள்ளைகள்

## ஆறுமுகம் தர்மசீலன்



குமாரசாமி வீதி புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மசீலன் கடந்த (21.05.2012) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆறுமுகம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் தயாபரன் (கனடா), தயாளினி (ஜேர்மனி), நித்தியசீலன் (கனடா), சிவசக்தி (கனடா), ஆகியோரின் அன்புச்சகோதரனும் தபேஸ்வரியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் கிஷான் (ஜேர்மனி), டிலக்சன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2012) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்: ஆறுமுகம் மகேஸ்வரி*
*தாய்(ஜேர்மனி) 0049250 1985835*
(சி/8494) (15-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசைச் சாடுகிறது அமெ. மனித உரிமை அறிக்கை

## வொஷிங்டனில் இன்று வெளியீடு

நியூயோர்க், மே 24,

*அமெரிக்க அரசு இன்று வெளியிடவிருக்கும் அதன் வருடாந்த மனித உரிமைகள் அறிக்கையில் இலங்கை மீது கடும் கண்டனங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக நம்பகமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.*


*அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் மற்றும் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழில்துறைகளுக்கான உதவிச் செயலர் மைக்கல் பொஸ்னர் ஆகியோர் 2011ஆம் ஆண்டுக்கான மனித உரிமை நடைமுறைகள் தொடர்பான அறிக்கையை ராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைப்பார்கள்.*

இந்த வருட முற்பகுதியில் பொஸ்னர் விடுத்திருந்த ஓர் அறிக்கையில் இலங்கையில் நடைபெற்றுள்ளதாகக் கருதப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறை அமைக்கவேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தும் என்று கூறியிருந்தார்.

2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் இவ்வாறான இரண்டு அறிக்கைகளை அமெரிக்கா தயாரித்திருந்தது. இந்த இரண்டு அறிக்கைகளிலும் இலங்கை தொடர்பான குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா மிகப் பாரதூரமாகவே அவதானித்திருந்தது. மீள் நல்லிணக்கத்துக்கு அவ்வாறான உரிமைமீறல்கள் தொடர்பான தனிப்பட்டவர்களின் பொறுப்புக்கூறல் முக்கியமான அம்சமாக இருக்கும் என்று அமெரிக்கா கருதுகின்றது. இந்த வகையில் இலங்கை எடுக்கும் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் அந்த நாட்டின் முப்பது வருடகால முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள உதவியாக இருக்கும் என்று கருதுகின்றோம் என்று பொஸ்னர் கூறியிருந்தார்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனித இனத்துக்கான சட்டங்களை மீறியவர்களை பொறுப்புக் கூற வைப்பது உள்நாட்டு அதிகாரிகளின் கடமை என்பதை இலங்கை அரசுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தி வரும். அதேசமயம் அரசு அதை நிறைவேற்ற விரும்பாத பட்சத்தில் அல்லது அதனால் முடியாத பட்சத்தில் சர்வதேச பொறிமுறையொன்று ஏற்படுத்தப் படுவது பொருத்தமாக இருக்கும் என்று பொஸ்னர் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவின் இந்த மனித உரிமை அறிக்கையானது இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனைச் சந்திப்பதற்கு முன்பே தயாரிக்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ப)



இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான அமைப்பின் அங்கத்தவர்கள் நேற்றுப் புதன்கிழமை வெக்ஸோல் வீதியிலுள்ள ஸ்ரீலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# வவுனியா சத்தியாக்கிரகத்துக்கு மனோ கணேசனும் முழு ஆதரவு

கொழும்பு,மே 24

சிறைக்கூடங்களில் நடைபெறும் தமிழ்அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அதற்குச் சமாந்தரமாக வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று ஏற்பாடு செய்துள்ள சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வது என ஜனநாயக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

**கூட்டமைப்பின் வவுனியா கிளையினர் ஏற்பாடு செய்துள்ள இந்த போராட்டம், நாட்டையும், சர்வதேசத்தையும் இப்பிரச்சினையின்பால் தட்டி எழுப்ப வேண்டும்**

இது தொடர்பில் கூட்டமைப்பு தலைவர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் எமது தலைவர் மனோ கணேசனுக்கு விடுத்துள்ள அழைப்பை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம் என ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

தமது உறவுகளை சிறைக்கூடங்களில் தவிக்கவிட்டுள்ள குடும்பங்களின் அங்கத்தவர்கள் அனைவரும் நாடெங்கிலும் இருந்து அணிதிரண்டு வந்து கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு அதை பெரும் வெற்றிபெறச் செய்யவேண்டும் என அனைத்துப் பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்களுக்கும் எமது கட்சி அழைப்பு விடுக்கின்றது என ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இன்று தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பில் சிங்கள அரசியல் கட்சிகளும், தலைவர்களும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்நடந்து கொள்வதை கண்கூடாக பார்க்கிறோம். இந்நிலையில் கூட்டமைப்பின் வவுனியாக் கிளையினர் ஏற்பாடு செய்துள்ள இந்த போராட்டம், நாட்டையும், சர்வதேசத்தையும் இப்பிரச்சினையின்பால் தட்டி எழுப்ப வேண்டும். எனவும் அவர் கூறியுள்ளார். (த)

### கல்வி அமைச்சரின் மூளையை பரிசோதிக்குமாறு கோரிக்கை

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் மூளையைப் பரிசோதனை செய்ய வேண்டுமெனத் தென் மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்தில் 350 தேசியப் பாடசாலைகள் காணப்படுகின்றன. இந்தப் பாடசாலைகளுக்கு மனித மற்றும் பௌதீக வளங்கள் கிடைக்கப்பெறவில்லை.கிங் தொட்ட காமினி வித்தியாலயத்துக்குக் கரும்பலகை ஒன்றைக் கூட வாங்கப் பணமில்லை. அமைச்சர் பந்துல பாடசாலைகளைப் பார்வையிடாமலேயே முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

ஒரு தடவை 2500 ரூபாவில் ஒருவர் வாழ்க்கையை நடத்த முடியும் என குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான கூற்றுக்களினால் நாம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றோம் என அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.(த)

### தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தலைவர் ஜீன் லெம்பார்ட் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். ஐ.ஏ.என்.எஸ் இணையத்தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல தமிழ் கைதிகள், இன்னும் விசாரணைகள் ஏதும்இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான அரசியல் கைதிகள் தற்போது விடுதலை கோரி உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளமையையும், ஜீன் லெம்பார்ட் சுட்டிக்காட்டியுள்ளளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(த)

## மேற்குலகின் அழுத்தமே விடுதலைக்குக் காரணம்

கொழும்பு,மே 24

மேற்குலக நாடுகளின் அழுத்தங்கள் காரணமாகவே தனக்கு விடுதலை கிடைத்ததாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதற்கு இன்னும் 05 அல்லது 10 வருடங்கள் செல்லும் என பொன்சேகா ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள தொலைபேசிச் செவ்வியில் தெரிவித்துள்ளார்.

என்னால் தேர்தலில் போட்டியிட முடியாது.ஆனால் இன்னும் அரசியலில் ஈடுபட முடியும்.என்னால் மக்களுக்கு கற்பிக்க முடியும். என்னால் மக்கள் மத்தியில் உரையாற்ற முடியும். கூட்டங்களை நடத்த முடியும். இந்த அரசைக் கவிழ்த்து மற்றுமொரு அரசை ஏற்படுத்தி மக்களின் நலன்காக்க என்னால் முடியும் எனவும் பொன்சேகா மேலும் கூறியுள்ளார். (த)

# காரைநகரில் இராணுவ முகாம் அமைய பிரதேச சபைத் தலைவர் இணக்கம்

## பத்திரத்தில் நேற்றுக் கையெழுத்திட்டு வழங்கினார்

யாழ்ப்பாணம், மே 24

காரைநகரில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு வரும் காணி பிரதேச சபைக்குச் சொந்தமானதாக உள்ள போதும் அதில் முகாம் அமைப்பதற்கு ஆனைமுகன் இணக்கம் தெரிவித்துள்ளார்.தனது இணக்கத்தை வெளிப்படுத்தி நேற்று அவர் கையெழுத்திட்டு வழங்கியுள்ளார்.

காரைநகர் சாம்பலோடைப் பகுதியில் இந்து,கிறிஸ்தவ மயானங்கள் இரண்டுக்கும் இடையில் உள்ள காணியை ராணுவம் அடாத்தாகக் கைப்பற்றி அங்கு பெரிய இராணுவ முகாம் அமைத்து வருகிறது. அமைக்கப்பட்டு வரும் காணி 1950களிலேயே பிரதேச சபைக்கென வழங்கப்பட்டுள்ளது. காரைநகர் பிரதேச செயலர் இதனைத் தெளிவுபடுத்தி இராணுவத்துக்கு ஏற்கனவே கடிதம் வழங்கியுள்ளார்.

காரைநகர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அந்தக் கூட்டம் முடிந்த கையோடு வலிகாமம் மேற்குப் பகுதி இராணுவப் பொறுப்பதிகாரி சபைக்கு நேரில் சென்று சபைத் தலைவருடன் நேரில் உரையாடினார். அதனைத் தொடர்ந்தே இராணுவ அதிகாரி கொடுத்த பத்திரம் ஒன்றில் கையெழுத்திட்டு சபைத் தலைவர் முகாம் அமைப்பதற்கான தனது இணக்கத்தை இராணுவத்தி[illegible] [illegible] கப்பட்டு வரும் காணி அரசுக்குரிய காணி என்று குறிப்பிடப்பட்டுள்ள பத்திரம் ஒன்றைத் தன்னிடம் காட்டிய இராணுவத்தினர் அதில் முகாம் அமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டதாகவும் அதிலேயே தான் கையெழுத்திட்டுக் கொடுத்தார் என்று ஆனைமுகன் உதயனுக்குத் தெரிவித்தார்.

''அரச காணியில் முகாம் அமைப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று [illegible] அதில் கையெழுத்திட்டுக் கொடுத்தேன் என்றார் ஆனைமுகன்.(உ-3-251)

# ஹிலாரியுடனான சந்திப்பிலிருந்து அரச புலனாய்வாளர் வெளியேற்றம்

வொஷிங்டன்,மே 24

அமெரிக்க இராஜாங்கச் செயலரை சந்திக்க வொஷிங்டன் சென்ற அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான இலங்கைக் குழுவில் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரும் இடம்பெற்றிருந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. எனினும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனுடனான சந்திப்புக்கு அவர் அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிய வந்துள்ளது.

கடந்தவாரம் அமெரிக்கா சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான குழுவில், அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, ஜனாதிபதி செயலர் லலித் வீரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சேனுகா செனிவிரத்ன, ஜி.எல்.பீரிஸின் இணைப்புச் செயலர் கம்லத் ஆகியோர் இடம்பெற்றிருந்ததாகவே தகவல்கள் வெளியிடப்பட்டன.

ஆனால் இந்தக் குழுவில் இரகசியமான முறையில் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவரும் சேர்க்கப்பட்டிருந்தார். இவரும் வொஷிங்டனில் இடம்பெற்ற பல்வேறு சந்திப்புகளில் பங்கேற்றார்.

ஆனால் இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனுடனான சந்திப்புக்கு இவர் அனுமதிக்கப்படவில்லை.

அந்தச் சந்திப்பில் அனுர பிரியதர்சன யாப்பா, லலித் வீரதுங்க, சஜின் வாஸ் குணவர்த்தன, சேனுகா செனிவிரத்ன ஆகியோருடன் வொஷிசிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய, மற்றும் பிரதித் தூதுவர் எசல வீரக்கோன் ஆகியோர் பங்கேற்றனர்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலிடத்தில் ஜொனியன்ஸ்



யாழ்ப்பாணம்,மே 24

யாழ்.சென்ரல் விளையாட்டுக்கழகம்3 ஆவது ஆண்டாக நடத்தி வரும் ஜோர்ஜ் வெப்ஸ்ரார் கிண்ணத்துக்காக யாழ்.நகரில் சிறந்த கழக அணி தெரிவில் 20.5.2012 வரை நடைபெற்ற 38 போட்டிகள் முடிவுற்ற பின்னர் வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 12 போட்டிகளில் பங்குபற்றி 9 போட்டிகளில் வெற்றி பெற்று 71.4 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தில் உள்ளது.யாழ். பல்கலைக்கழக அணி 11 போட்டிகளில் பங்கு பற்றி 7 போட்டிகளில் வெற்றி பெற்று 62.7 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்திலும்,ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 8 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றி பெற்று 38.9 புள்ளிகளைப் பெற்று 3 ஆவது இடத்திலும்,உள்ளன கே.சி.சி.சி விளையாட்டுக்கழக அணி 8 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 29.8 புள்ளிகளைப் பெற்று 4 ஆவது இடத்திலும் யாழ். சென்ரல் விளையாட்டுக்கழக அணி7 போட்டிகளில் பங்கு பற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 29.3 புள்ளிகளைப் பெற்று 5 ஆவது இடத்திலும், பற்றீசியன் விளையாட்டுக் கழக அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி மூன்றிலும் வெற்றி பெற்று 17.7 புள்ளிகளைப் பெற்று 6 ஆவது இடத்திலும், திருநெல்வேலி கிரிக்கெட் அணி 4 போட்டிகளில் பங்கு பற்றி 2 போட்டிகளில் வெற்றி பெற்றது. 17.2 புள்ளிகளைப் பெற்று 7 ஆவது இடத்திலும் உள்ளன,மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழக அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி 2 போட்டியில் வெற்றி பெற்றும் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி 2 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்றும் தலா 10.8 புள்ளிகளைப் பெற்று 8 ஆவது இடத்திலும், கிறாஸ்கொப்பர்ஸ் அணி 2 போட்டியில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்றது. 7.8 புள்ளிகளைப் பெற்று 9 ஆவது இடத்திலும் ஒல்கோல்ட்ஸ் அணி இரண்டு போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறாத நிலையில் 4.7 புள்ளிகளைப் பெற்று 10 ஆவது இடத்திலும் உள்ளன.

(த-23)

# தாச்சிப்போட்டி

கைதடி,மே 24

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவுன் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக்கழகம் தென்மராட்சிக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே லீக் முறையில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இரண்டாம் நாளான இன்று நாவற்குளி சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-288)

# அரையிறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம்,மே 24

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் டாக்டர் பொ.மகாலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.

இதில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# இறுதி ஆட்டம் இன்று

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குகுட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுகழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென் நீக்கிளஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (த-23)

# வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம்,மே 24

யாழ்.மாவட்ட கூடைபந்தாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத் தும் ''யாழ்ப்பாண வெற்றிக் கிண்ணத்திற்கான'' கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றன.

இதில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு: செவ்வாய்கிழமை காலை இடம் பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் விமானப்படைக் கூடைப்பந்தாட்ட அணியை எதிர்த்து யாழ்.பாடசாலை கூடைப்பந்தாட்ட அணி மோதிகொண்டது.இதில் விமானப்படை கூடைபந்தாட்ட அணி 61:30 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்த்தில் இராணுவ கூடைப்பந்தாட்ட அணியை எதிர்த்து பொலிஸ் கூடைப் பந்தாட்ட அணி மோதிக் கொண்டது.இதில் பொலிஸ் கூடைப்பந்தாட்ட அணி 67:40 புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிஸ் கூடைப்பந்தாட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி மோதிக் கொண்டது. இதில் பொலிஸ் கூடைப்பந்தாட்ட அணி வெற்றிபெற்றது. மாலை இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் திருகோணமலை மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணியை எதிர்த்து இராணுவ கூடைப்பந்தாட்ட அணி மோதிக் கொண்டது. இதில் இராணுவ கூடைபந்தாட்ட அணி 58 :43 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட பாடசாலை அணியை எதிர்த்து கடற்படைகூடைப்பந்தாட்டஅணி மோதிக் கொண்டது. இதில் கடற்படை கூடைப்பந்தாட்ட அணி 40:28 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றனர். மறுநாள் இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் திருகோணமலை கூடைபந்தாட்ட அணியும் பொலிஸ் கூடைப் பந்தாட்ட அணியும் மோதின இதில் பொலிஸ் கூடைப் பந்தாட்ட அணியினர் 52:50 என்ற புள்ளி அடிபப்படையில் வெற்றி பெற்றனர்.

(த-23)

# இறுதியாட்டத்தில் மோதவுள்ள மணற்காடு அன்ரனிஸ்–பொம்மர்ஸ்

பருத்தித்துறை,மே 24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்திய 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் கடந்த சனி,ஞாயிற்றுக்கிழமைகளில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றன.

சனிக்கிழமை இடம் பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை ஆதிசக்கதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பொம்பஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (த-23 )

# கூடைப்பந்தாட்ட இறுதியாட்டம் இன்று



யாழ்ப்பாணம், மே 24

யாழ்.மாவட்ட கூடை ப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான தேசியத் தரம் வாய்ந்த அணிகள் பங்கு பற்றும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை மாலை6.30 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது.

இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா சிறப்பு விருந் தினராக வடமாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கௌரவ விருந்தினராக விளையாட்டு அமைச்சின் கூடைப் பந்தாட்ட திட்ட பணிப்பாளர் சமன் சமரக்கோன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

13 வயதுப் பிரிவு ஆண்களுக்கான காட்சி கூடைப்பந்தாட்டத்தில் சென்.ஜோன்ஸ் அணியை எதிர்த்து சர்வதேச ஏஞ்சல் பாடசாலை அணி மோதவுள்ளது. (23)

# கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் ,மே 24

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தும் பிரிவு 3 இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுகழக அணி மோதவுள்ளது.

மேற்படி சுற்றுப் போட்டியில் முதலாம்,இரண்டாம் இடங் களைப் பெறும் அணி இலங்கை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் பிரிவு 3 இற்கான சுற்றின் கால் இறுதி முன்போட்டியில் விளையாடத் தகுதி பெறும். (த-23)

# இந்தியாவின் போட்டி அட்டவணை வெளியீடு

சென்னையில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதும் சர்வதேச 'ரி-20' ஆட்டம் செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடக்கவுள்ளது.

ஐந்தாவது ஐ.பி.எல்., தொடர் கடைசிக் கட்டத்தை எட்டிய நிலையில், இந்திய அணி பங்கேற்கும் சர்வதேச தொடருக்கான அட்டவணையை, இந்தியக் கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) நேற்று முன்தினம் அறிவித்தது. இதில் 2012 ஓகஸ்ட் முதல் 2013 மார்ச் வரை இந்தியாவில் 10 டெஸ்ட், ஐந்து ஒரு நாள் மற்றும் நான்கு சர்வதேச 'ரி-20' ஆட்டங்கள் உள்ளிட்ட மூன்று சர்வதேச தொடர்கள் நடக்கவுள்ளன.

ஓகஸ்ட் மாதம் இந்தியா செல்லவுள்ள நியூசிலாந்து அணி இரண்டு டெஸ்ட், இரண்டு சர்வதேச 'ரி-20' ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. டெஸ்ட் ஆட்டங்கள் முறையே ஹைதராபாத் (ஓகஸ்ட் 23-27), பெங்களூர் (ஓகஸ்ட் 31 - செப்ரெம்பர் 4) ஆகிய இடங்களில் நடக்கிறது. முதல் 'ரி-20' ஆட்டம் விசாகப்பட்டணத்தில் செப்ரெம்பர் 8 ஆம் திகதி, இரண்டாவது 'ரி-20' ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் செப்ரெம்பர் 11 ஆம் திகதியும் நடக்க உள்ளது.

இந்தத் தொடருக்கு பின்னர், இந்திய அணி 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க இலங்கை செல்கிறது.

அதன் பின்னர், இந்தியா வரவுள்ள இங்கிலாந்து அணி நான்கு டெஸ்ட், இரண்டு சர்வதேச 'ரி-20' மற்றும் ஐந்து ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் நவம்பர் 15 ஆம் திகதி அஹமதாபாத்தில் தொடங்குகிறது. மற்ற டெஸ்ட் ஆட்டங்கள் மும்பை (நவம்பர் 23-27), கொல்கத்தா (டிசெம்பர் 5-9), நாக்பூர் (டிசெம்பர் 13-17) ஆகிய இடங்களில் நடக்கவுள்ளது. 'ரி-20' ஆட்டங்கள் புனே (டிசெம்பர் 20), மும்பை (டிசெம்பர் 22) மைதானங்களில் நடக்கவுள்ளது.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நிகழ்ச்சியில் பங்கேற்க சொந்த ஊர் செல்ல உள்ள இங்கிலாந்து அணி, 2013 ஜனவரி மாதம் மீண்டும் இந்தியாவில் ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் ஆட்டம் ராஜ்காட்டில் ஜனவரி 11 ஆம் திகதி நடக்கிறது. மற்ற ஆட்டங்கள் முறையே கொச்சி (ஜனவரி 15), ரஞ்சி (ஜனவரி 19), தர்ரம்சாலா (ஜனவரி 23), மொஹகாலி (ஜனவரி 27) ஆகிய இடங்களில் நடக்கிறது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி - மார்ச் மாதங்களில் இந்தியா வரவுள்ள ஆஸ்திரேலிய அணி, நான்கு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்க உள்ளது. இதற்கான அட்டவணை விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். இறுதியாட்டத்துக்கு வாருங்கள்

# பாகிஸ்தானுக்கு நேசக்கரம் நீட்டும் இந்தியா

இந்தியாவில் இடம்பெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் இறுதி ஆட்டத்தைக் காண இந்தியாவிற்கு வருமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாகா அஷ்ரப்பிற்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விடுத்துள்ளது. இதனடிப்படையில் ஷாகா அஷ்ரப் இறுதி ஆட்டத்தைக் காண இந்தியாவிற்கு வரவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




ஏற்கனவே இந்தியக் கிரிக்கெட் சபை இணைந்து நடத்தும் சம்பியன்ஸ் லீக் தொடரில் பாகிஸ்தானிலிருந்து ஓர் அணியைப் பங்குபற்ற வைக்க தனது ஆதரவை இந்தியக் கிரிக்கெட் சபை வழங்கியிருந்ததோடு, சம்பியன்ஸ் லீக் ஏற்பாட்டுக் குழுவிற்கு தனது முடிவை பரிந்துரைப்பதாகவும் அறிவித்திருந்தது. இந்த நிலையிலேயே தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவரும் இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு நவம்பரில் மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதலை நடத்தியதை அடுத்து இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல் உறவுகள் மாத்திரமன்றி, கிரிக்கெட் உறவுகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் பயணம் மேற்கொள்ள மறுத்த இந்திய அணி, பாகிஸ்தான் அணி இந்தியாவிற்கு பயணம் செய்வதையும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. அத்தோடு 2008 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஐ.பி.எல். தொடர்களில் பாகிஸ்தான் வீரர்கள் பங்குபற்ற முடியாத நிலையும் ஏற்பட்டது.

இந்த நிலையில் இந்தியக் கிரிக்கெட் சபையின் அழைப்பை இரு நாடுகளுக்குமிடையிலான கிரிக்கெட் உறவுகளை வளர்க்க எடுக்கப்படும் முயற்சியாகத் தான் நோக்குவதாகத் தெரிவித்துள்ள ஷாகா அஷ்ரப், இரு நாள் விஜயத்தின் போது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## வழக்குப் போட்ட மார்ஷ்

**இலங்கை அணியின் மோசமான பெறுபேறுகளையடுத்து அணியின் பயிற்றுநராக பதவி வகித்த ஜொவ் மார்ஷ் கடந்த ஜனவரி மாதம் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக கிரஹம் போர்ட் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஆஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜொவ் மார்ஷ், ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் தலைவர் உபாலி தர்மதாஸ தெரிவித்தார்.

சட்ட நடவடிக்கை குறித்த அறிவித்தலை மூன்று வாரங்களுக்கு முன்னர் மார்ஷ் அனுப்பினார். இந்த விடயத்தை கையாள்வதற்காக நாம் இந்தக் கடிதத்தை எமது சட்டப் பிரிவிடம் சமர்ப்பித்துள்ளோம், என்று உபாலி தர்மதாஸ கூறினார்.

இலங்கை அணியின் மோசமான பெறுபேறுகளையடுத்து அணியின் பயிற்றுநராக பதவி வகித்த ஜொவ் மார்ஷ் கடந்த ஜனவரி மாதம் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக கிரஹம் போர்ட் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த வருட உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தின் பின்னர் இலங்கை அணியின் பயிற்றுநராக நியமிக்கப்பட்ட மூன்றாவது நபர் ஜொவ் மார்ஷ் ஆவார்.

கடந்த செப்டெம்பர் மாதம் அவர் இரு வருட கால ஒப்பந்தத்தில் அணியின் பயிற்றுநராக பதவியேற்றார். எனினும் நான்கு மாதங்களில் அதிர்ச்சிகரமாக அவர் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

# மலிங்கவுக்கு கிரிக்கெட் சபை பொறுப்பில்லை



மலிங்க இலங்கை கிரிக்கெட் சபையின் வருடாந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்ததன் காரணமாக, மலிங்க தொடர்பில் எந்தவொரு விடயத்துக்கும் கிரிக்கெட் சபை பொறுப்பாக மாட்டாது என்று அறிவித்துள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் சபையால் வழங்கப்படும் வருடாந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத வீரர்களுக்கு இலங்கைக் கிரிக்கெட் சபையின் வசதிகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

புதிய முடிவின் படி ஒரு கிரிக்கெட் வீரர் இலங்கைக் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லையாயின் இலங்கைக் கிரிக்கெட் சபையின் உடற்பயிற்சிக் கூடங்கள், உள்ளகப் பயிற்சி இடங்கள் உட்பட வசதிகள் வழங்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு முக்கியமாக குறித்த வீரர்களுக்கு வைத்திய ரீதியாக உதவிகளோ அல்லது பொறுப்போ எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்று இலங்கைக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்த முடிவு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கான அமைப்பு, குறித்த முடிவு தொடர்பாக தங்களுக்கு எந்தவிதமான எதிர்ப்புகளும் கிடையாது என்று அறிவித்துள்ளது. ஒரு வீரர் இலங்கைக் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவாரானால் அவர் இலங்கைக் கிரிக்கெட் சபையின் ஊழியராக மாறுகிறார் எனவும், அவரைப் பொறுப்பேற்றுக் கொள்வது இலங்கைக் கிரிக்கெட் சபையின் பொறுப்பு எனவும், எனினும் அவர் அவ்வாறு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லையெனில் அவரைப் பொறுப்பேற்பது இலங்கைக் கிரிக்கெட் சபையின் கடமையல்ல எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய முடிவின் படி இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவே அதிக அளவில் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. கடந்த வருடம் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தில் அவர் கைச்சாத்திட மறுப்புத் தெரிவித்திருந்தார். எனினும் அண்மையில் இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் நடுவே காயமடைந்த அவர், இலங்கைக்குத் திரும்பி இலங்கைக் கிரிக்கெட் சபையின் கண்காணிப்பில் குணப்படுத்தலில் ஈடுபட்டிருந்தார்.

எனினும் எதிர்வரும் காலங்களில் அதற்கான வசதிகள் வழங்கப்படாது என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# எங்களை எதிர்த்தாட கெய்ல் வேண்டும்

இங்கிலாந்திற்கெதிரான டெஸ்ட் தொடரில் எஞ்சியுள்ள ஆட்டங்களுக்காக மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கிறிஸ் கெய்ல் விளையாட அழைக்கப்பட்டால் அது சிறப்பாக அமையும் என்று இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார். அவர் பங்குபற்றுவாரானால் கிரிக்கெட்டிற்கு ஆரோக்கியமானதொரு செயலாக அமையும் எனவும் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.




மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட முறுகலை அடுத்து 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் டெஸ்ட் ஆட்டங்களில் கிறிஸ் கெய்ல் பங்குபற்றியிருக்கவில்லை. எனினும் இரு தரப்பினருக்குமிடையிலான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு இங்கிலாந்துக்கெதிரான ஒரு நாள் சர்வதேசத் தொடரில் கிறிஸ் கெய்ல் பங்குபற்றுவார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், எஞ்சியுள்ள 2 டெஸ்ட் ஆட்டங்களிலும் கிறிஸ் கெய்ல் பங்குபற்ற வேண்டுமென எதிர்பார்ப்பதாக கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஐ.பி.எல். தொடரில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாகப் பங்குபற்றி வந்த கிறிஸ் கெயில், தற்போது ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் ஆட்டங்கள் அனைத்தும் நிறைவடைந்துள்ள நிலையில் டெஸ்ட் தொடருக்காக அழைக்கப்படுவாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. குறிப்பாக டெஸ்ட் ஆட்டங்களில் 6373 ஓட்டங்களையும், 72 இலக்குகளையும் கைப்பற்றியுள்ள கிறிஸ் கெய்ல் - அணியில் இடம் பெறுவாரானால் மேற்கிந்தியத் தீவுகள் அணி பலமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (5)

## கப்ரியலுக்கு காயம்

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக இங்கிலாந்திற்கெதிரான முதலாவது டெஸ்டில், தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்ட ஷெனொன் கப்ரியல் அந்தப் போட்டியில் ஏற்பட்ட காயம் காரணமாக நாட்டுக்குத் திரும்பவுள்ளார். இவருக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் ரினோ பெஸ்ட் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டுள்ளார். முதுகுப் பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாகவே அவர் நாட்டுக்குத் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக அந்த அணியின் ரவி ராம்போலின் கழுத்தில் ஏற்பட்ட உபாதை காரணமாக இங்கிலாந்திற்கெதிரான தொடரில் பங்குபற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட, அவருக்குப் பதிலாக ஷெனொன் கப்ரியல் தனது டெஸ்ட் அறிமுகத்தை கடந்த ஆட்டத்தில் மேற்கொண்டிருந்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸில் 3 இலக்குகளைக் கைப்பற்றிய கப்ரியல், இரண்டாவது இன்னிங்ஸில் வெறுமனே 5 பந்துப் பரிமாற்றங்களை மாத்திரம் வீசியிருந்தார். முதுகு உபாதையை அடுத்து அவர் மைதானத்தை விட்டு வெளியேற வேண்டிய தேவையேற்பட்டது.

(5)

# உரிமையைப் பெற்றுக் கொண்டது சி.எஸ்.என்.

2012 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான மூன்று வருட காலத்தில் இலங்கை அணி விளையாடும் கிரிக்கெட் தொடர்களை ஒளிபரப்பும் உரிமையை கார்ல்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வேர்க் (சி.எஸ்.என்.) அலைவரிசைக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உபாலி தர்மதாஸ தெரிவித்தார்.

உள்ளூர் ஒளிபரப்பு உரிமை தொடர்பாக உள்ளூர் பத்திரிகைகளிலும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் இணையத்தளத்திலும் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்கு சி.எஸ்.என். அலைவரிசை மாத்திரமே பதிலளித்ததாகவும் அதனால் அந்த அலைவரிசைக்கு ஒளிபரப்பு உரிமையை வழங்க ஸ்ரீலங்கா கிரிக்கெட் அனுசரணைக் குழு தீர்மானித்துள்ளதாகவும் உபாலி தர்மதாஸ கூறினார்.

மூன்று வருடகாலத்திற்கான இந்த ஒளிபரப்பு உரிமையை 125 மில்லியன் ரூபாவுக்கு சி.எஸ்.என்னுக்கு வழங்குவதை கடந்த மாத முற்பகுதியில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறைவேற்றுக்குழு[illegible]. கடந்த வருடம் பெப்ரவரி [illegible] பட்ட மேற்படி அலைவரிசை 15 மாதங்களில் இந்த ஒளிபரப்பு உரிமையை பெற்றுக் கொண்டமை அந்த நிறுவனத்திற்கு வியக்கத்தக்க பெறுபேறாகும்.

இலங்கைக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைத்ததிலிருந்து தொடர்களை ஒளிபரப்புவதில் ஏகபோக ஆதிக்கம் செலுத்திய ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இந்த முறை ஒளிபரப்பு உரிமையைப் பெறுவதற்கு முற்படவில்லை. ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இந்த முறை போட்டியிடாத போதிலும் இந்த உரிமையை பெறுவதில் அந்தக் கூட்டுத்தாபனம் ஆர்வம் கொண்டுள்ளதாக அதன் தலைவர் மொஹான் சமரநாயக்க கூறினார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நான் இது தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கினேன். ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுக்கு எமது சந்தைப்படுத்தல் அதிகாரி கடிதம் அனுப்பினார் என்று நம்புகிறேன். ஆனால் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டிலிருந்து என்ன பதில் கிடைத்தது எனத் தெரியவில்லை. இது தொடர்பாக இன்று காலை நான் கூறக்கூடியதாக இருக்கும்' என்று அவர் கூறினார்.

[illegible] உலகக்கிண்ணத் தொடரின் [illegible] ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 143 மில்லியன் ரூபாவை மாத்திரம் செலவிட்டு, 556 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றது. நஷ்டத்தை எதிர்கொண்டுள்ள அந்த நிறுவனத்திற்கு இந்த முறை உள்ளூர் ஒளிபரப்பு உரிமையைபெறத் தவறியமை பாரிய அடியாகும்.

இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளரான நிஷாந்த ரணதுங்க, சி.எஸ்.என். நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவார். இந்த நிலையில் அந்த நிறுவனத்திற்கு ஒளிபரப்பு உரிமை வழங்கப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியது. நாடாளுமன்ற கோப் விசாரணைக் குழுவின் கவனத்தையும் இது ஈர்த்தது.

கிரிக்கெட் தொடர்களை ஒளிபரப்புவதற்கான, ஒலிபரப்புவதற்கான உரிமை அரச ஊடகங்களுக்கு அல்லது பிரத்தியேக விளையாட்டு அலைவரிசைகளுக்கு மாத்திரமே வழங்குவதற்கேற்ப கடந்த வருடம் அரசாங்கம் சட்டம் இயற்றியது.

கடந்த வருடம் ஜூலை மாதம் இந்தச் சட்டம் இயற்றப்பட்டபோது. சி.எஸ்.என். மாத்திரமே பிரத்தியேக விளையாட்டு அலைவரிசையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த வருடம் ஜூன் மாதம் நடைபெற்ற ஆஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கிடையிலான தொடரை சி.எஸ்.என். முதலில் ஒளிபரப்பியது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையின் இறுதிப் போட்டி வாய்ப்பு பிரகாசமானது




டோனி, பிராவோ அதிரடியில் கலக்க மும்பை இந்தியன்ஸை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது சென்னை சுப்பர் கிங்ஸ். ஐ.பி.எல். போட்டிகளின் பிளே- ஒப் ஆட்டம் நேற்று பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற்றது. இதில் சென்னை, மும்பை இந்தியன் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ஹர்பஜன்சிங் சென்னை சுப்பர்கிங்ஸை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார். சென்னை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக முரளிவிஜய், மைக்கல் ஹசியும் களமிறங்கினர். அணி ஒரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் முரளிவிஜய் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

தொடர்ந்து களமிறங்கிய சுரேஸ் ரெய்னா அடுத்த பந்தில் பவிலியன் திரும்பி அதிர்ச்சி கொடுத்தார். ஒரு ஓட்டத்துக்கு இரண்டு இலக்குகளை இழந்து தடுமாறியது சென்னை சுப்பர் கிங்ஸ். பின்னர் மைக்கல் ஹசியுடன் இணைந்த பத்ரினாத் அணியின் இக்கட்டு நிலைமையை உணர்ந்து நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடினார். 13.2 பந்துப் பரிமாற்றங்களில் 95 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பத்ரினாத்தை (47) வெளியேற்றினார் குல்கர்னி. பின்னர் மைக்கல் ஹசியுடன் இணைந்து கொண்டார் அணித் தலைவர் டோனி. நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடிக்கொண்டிருந்த மைக்கல் ஹசி 49 ஓட்டங்களை பெற்ற நிலையில் அரைச் சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்து பிராங்ளின் பந்தில் வெளியேற்றப்பட்டார். பின்னர் ஜடேஜா ஒரு ஓட்டத்துடன் நடையைக் கட்டினார். 15.1 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 114 ஓட்டங்களை மாத்திரம் பெற்று இக்கட்டான நிலையில் இருந்தது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. பின்னர் டோனியுடன் இணைந்த பிராவோ 2 சிக்ஸர்கள் 4 பவுண்டரிகள் அடங்கலாக 14 பந்துகளில் 33 ஓட்டங்களை விளாசினார். டோனியும் தனது பங்கிற்கு வெறும் 20 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக அரைச் சதம் கடந்தார். இதில் ஹர்பஜனின் பந்தில் இவர் அடித்த சிக்ஸர் (112.மீ.) தொடரின் மீக நீண்ட சிக்ஸராகப் பதிவாகியது. இவர்கள் இருவரது பலமான இணைப்பாட்டத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 187 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி கடினமான இலக்கை எட்டிவிடும் என எதிர்பார்க்கப்பட்டது.

மும்பை இந்தியன்ஸ் அணியின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய சச்சினும் ஸ்மித்தும் நம்பிக்கை அளித்தனர். ஓட்ட சராசரி பந்துப் பரிமாற்றத்துக்கு 10 என்ற விகிதத்தில் எகிறியது. எனினும் 5 ஆவது பந்துப் பரிமாற்றத்தின் இறுதிப் பந்தில் 11 ஓட்டங்களுடன் ரன்அவுட் முறையில் சச்சின் வெளியேற்றப்பட்டார். அதிரடியாக ஆடிக் கொண்டிருந்த ஸ்மித் (38) அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் நடையைக் கட்டினார். ரோகித் சர்மா (14) கார்த்திக்கும்(6), ராயுடு (11), பிராங்ளின் (13), ஹர்பஜன்சிங் (1) அடுத்தடுத்து ஆட்டமிழந்து மும்பை இந்தியன்ஸ் அணியை இக்கட்டான நிலைக்குத் தள்ளினர். 14.2 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் எடுத்து தடுமாறியது மும்பை இந்தியன்ஸ். நிதானமாக விளையாடிய பொலார்ட்டும் (16) கையை விரித்து பவிலியன் திரும்பினார். இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களை மாத்திரமே மும்பை இந்தியன்ஸால் பெறமுடிந்தது. இதனால் 39 ஓட்டங்களால் சென்னை வெற்றியீட்டியது. பந்து வீச்சில் மோர்கலும் பிராவோவும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். இந்த வெற்றி மூலம் சென்னையின் இறுதிப் போட்டிவாய்ப்பு ஓரளவுக்கு உறுதியாகியது. அதிரடியாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திய சென்னை அணித் தலைவர் டோனி ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (16)

BARNABAS LCD TV REPPAIRING

★ சகல வகையான LCD T.V. களும் கால தாமதம் இல்லாமல் பழுது பார்த்து தரப்படும்.
★ சகல வகையான LCD T.V. களின் உதிரிப் பாகங்களும் (Parts) எம் மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: மதன் எலக்ரோனிக்ஸ், சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.

BARNABAS
247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. 0777448668

(c/345)

e.com Computer Training Centre

Spoken English
புதிய பிரிவுகள் ஆரம்பம்
[அனைத்து வயதினருக்கும்]

சர்வதேச தரம் வாய்ந்த ISO 9001 - 2008 ஆங்கிலக் கற்கை நெறி இப்பொழுது குறைந்த கட்டணத்தில்

Beginners Level
Intermediate Level
Advanced Level
Personality Development Level

BBC
அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

No.95A Temple Road, Nallur, Jaffna 021-7429005
K.K.S. Road, Kondavil, Jaffna 021-7200902
1st Lane, Jaffna Road, Chankani 021-7201902

Special Discount

(c/344)

இலவச அழகுக்கலைப் பயிற்சிநெறி

**Oriflame** நிறுவனத்தின் 45 ஆவது வருட நிறைவை முன்னிட்டு இலவச அழகுக்கலைப்பயிற்சியின் புதிய பிரிவுகள் பருத்தித்துறையிலும், நெல்லியடியிலும் 02.06.2012 ஆம் திகதி ஆரம்பம்

இணைய விரும்புவோர் 590 ரூபாவை அங்கத்துவப் பணமாக செலுத்தி இணைந்துகொள்ளலாம். பருத்தித்துறை தம்பசிட்டி வீதியில் உள்ள உயர்கல்விப்பிரிவு போரூட்டில் பதிவுகள் 25.05.2012 இல் இருந்து 01.06.2012 வரை தினமும் பிற்பகல் 2 மணியின் பின் மேற்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு:
சுயாதீன முகாமையாளர்
T.P-0778455688
0777145404

(16993) (15-14-06)

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

Batch - 1: 28.05.2012 9.00 - 12.00
Batch - 2: 30.05.2012 3.00 - 5.00
Batch - 3: 2.06.2012 4.00 - 05.30

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

(C-322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.